Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆடி 27 சனிக்கிழமை (13.08.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :260

# அமைச்சர் கதிர்காமர் சுட்டுக்கொலை!

**குறிபார்த்துச் சுடுவோர் கைவரிசை!**

## வீட்டருகே நள்ளிரவு சம்பவம்



கொழும்பு,ஓகஸ்ட் 13

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் சுட்டுக்கொல்லப்பட்டார். நேற்று நள்ளிரவில் அவர் சுடப்பட்டார்; இன்று அதி காலையில் அவர் உயிரிழந்தார் என அதிகாரபூர்வ செய்திகள் தெரிவித்தன. ஆபத்தான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவரது உயிர் அதிகாலை 12.15 மணியளவில் பிரிந்தது. குறிபார்த்துச் சுடும் தாக்குதலாளிகள் தூரத்திலிருந்தே அவரைச் சுட்டனர் என்று பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

நேற்றிரவு 11 மணியளவில் கதிர்காமர் சுடப்பட்டார். நாட்டின் முக்கிய பிரமுகர்கள் வசிக்கும் அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்குள் அமைந்துள்ள அவரது இல்லத்திற்கு அருகிலுள்ள ஓர் இடத்தில் வைத்தே அவர் சுடப்பட்டார்.

அமைச்சர் கதிர்காமர் சுடப்பட்டதையடுத்து கொழும்பு மாநகரில்பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. படையினர் ஹெலிகளைப் பயன்படுத்தி தேடுதல்களை மேற்கொண்டுள்ளனர்.

அமைச்சர் கதிர்காமரின் இல்லத்திற்கு அருகில் இருக்கும் தமிழ் இளைஞர் ஒருவரின் ஆதரவுடனேயே அவர் சுடப்பட்டார் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர். குறிப்பிட்ட அந்த இளைஞரின் வீடு இன்று அதிகாலையில் பாதுகாப்பு அதிகாரிகளால் சல்லடைபோடப்பட்டது. அங்கிருந்த மலசலகூடத்திற்குள் இருந்து வெற்றுத்தோட்டாக்களையும் துப்பாக்கியொன்றையும் பொலீஸார் கைப்பற்றியுள்ளனர்.

கொழும்பு - 07, விஜயராம மாவத்தையில் உள்ள கதிர்காமரின் இல்லத்திற்கு அருகில் அமைந்துள்ள நீச்சல் தடாகத்தில் குளித்து விட்டு திரும்புகையில் குறிபார்த்துச் சுடுபவர்களால் அவர் இலக்கு வைக்கப்பட்டுள்ளார் என்று பொலீஸார் தெரிவித்தனர். அந்த நீச்சல் குளத்திற்கு இரவு நேரத்தில் அவர் அடிக்கடி செல்கின்றவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(18ஆம் பக்கம் பார்க்க)

## ரூபவாஹினியின் பிரபல அறிவிப்பாளர் ரேலங்கியும் அவரது கணவரும் நேற்றுப் பகல் சுட்டுக்கொலை!

### பம்பலப்பிட்டியில் சம்பவம்

கொழும்பு, ஓக.13

அரச வானொலி மற்றும் தொலைக்காட்சியின் பிரபல அறிவிப்பாளரும், ஊடகவியலாளருமான ரேலங்கி செல்வராஜாவும், அவரது கணவரான சின்னத்துரை செல்வராஜாவும் பம்பலப்பிட்டியில் வைத்து நேற்று சுட்டுக் கொல்லப்பட்டனர்.

நேற்றுப்பகல் 12.45 மணியளவில் பம்பலப்பிட்டி சென்.பீற்றர்ஸ் அவனியுவில் உள்ள அவர்களுக்குச் சொந்தமான தொலைத்தொடர்பு நிலையத்தில் இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. செல்வராஜா தம்பதியினருக்கு 18 மாதமேயான பெண் குழந்தை ஒன்றுள்ளது.

புளொட் இயக்கத்தின் முன்னாள் முக்கியஸ்தர்களில் ஒருவரான சின்னத்துரை செல்வராஜாவே ரேலங்கியின் கணவராவார். அவரும் சம்பவத்தில் கொல்லப்பட்டார்.

பம்பலப்பிட்டி சென். பீற்றர்ஸ் அவனியுவில் உள்ள அவர்களது தொலைத்தொடர்பு நிலையத்தின் ஒருபகுதி விமான ரிக்கெட்டுகள் வழங்கும் நிலையமாகவும், பணமாற்று அலுவலகமாகவும் இயங்கிவருகிறது. அந்த அலுவலகத்தின் ஒரு பகுதியில் ரேலங்கியும் அடுத்த பகுதியில் செல்வராஜாவும் கடமை

(18ஆம். பக்கம் பார்க்க)

## சுதந்திர ஊடகவியலாளர் ஒன்றியமும் கண்டனம்

கொழும்பு,ஓக.13

பிரபல அறிவிப்பாளர் ரேலங்கி செல்வராஜா படுகொலை செய்யப்பட்டதை சுதந்திர ஊடகவியலாளர் அமைப்பு கண்டித்துள்ளது.

அதன் பேச்சாளர் சுனந்த தேசப்பிரிய இது தொடர்பாகத் தெரிவித்ததாவது:-

இந்தப் படுகொலையை சுதந்திர ஊடகவியலாளர் அமைப்பு வன்மையாகக் கண்டிக்கிறது. எதிராளியைக் கொலைசெய்வதால் பிரச்சினை தீர்ந்துவிடப்போவதில்லை. கொலை

(18ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் எழுச்சி மாநாடு

வவுனியாவில் நடைபெற்ற தமிழர் உரிமைப்பிரகடன மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை மீண்டும் வலியுறுத்தும் வகையில் முல்லைத்தீவில் அடுத்தமாதம் 14ஆம் திகதி எழுச்சி மாநாடு நடைபெறவுள்ளது.

இதுதொடர்பான கலந்துரையாடல் நேற்று வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு தேசிய எழுச்சிப்பேரவையின் அலுவலகத்தில் நடைபெற்றது.

கல்வியாளர்கள், வர்த்தகர்கள் , திணைக்களத்தலைவர்கள் , பொதுஅமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் இந்தக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். (எ-353)

## சட்டமா அதிபர்-தேர்தல் ஆணையர் இடையே ஜனாதிபதித் தேர்தல் விடயத்தில் முரண்பாடு!

கொழும்பு, ஓகஸ்ட்13

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை எப்போது நடத்துவது என்பதில் தேர்தல் ஆணையாளருக்கும் சட்டமா அதிபருக்கும் இடையே கருத்து முரண்பாடுகள் தோன்றியுள்ளன. தனது கருத்துப்படி தேர்தல் இந்த ஆண்டே (2005ஆம் ஆண்டு) நடக்கவேண்டும் என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டார் தேர்தல் ஆணையாளர். ஆனால், அரசமைப்பின்படி தேர்தல் அடுத்த ஆண்டு(2006 ஆம் ஆண்டு) இறுதியிலேயே நடத்தப்படவேண்டும் என்று தெரிவிக்கின்றார் சட்டமா அதிபர் கே.ஸி. கமலசபேசன்.

இருவரிடையேயும் தோன்றியுள்ள இந்தக் கருத்து வேறுபாடு காரணமாக, ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக உயர் நீதிமன்றில் நடக்கும் வழக்கில் தேர்தல் ஆணையாளர் சார்பாக ஆஜராக முடியாது என்று சட்டமா அதிபர் திணைக்களம் தயானந்த திஸநாயக்கவுக்கு எழுத்து மூலமாக அறிவித்துள்ளது.

பெரும் சர்ச்சைக்குள்ளாகி இருக்கும் ஜனாதிபதித் தேர்தல் எப்போது என்பதைத் தெளிவுபடுத்தி அதனை இந்த ஆண்டே நடத்து

(18ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

### கொழும்பு பேராயர் ஒஸ்வால்ட் கோமிஸ் ஆண்டகை கூறுகிறார்

# நாடு பிரிக்கப்படுவதை இலங்கை வாழ் கத்தோலிக்க மக்கள் விரும்பவில்லை

## தமிழர்களின் எதிர்பார்ப்பை நிறைவுசெய்யும் அதிகாரப்பகிர்வு அவசியம் என்றும் அறிவுறுத்து

கொழும்பு, ஓக.13

நாடு பிரிக்கப்படுவதை இலங்கை வாழ் கத்தோலிக்க மக்கள் எவரும் விரும்பவில்லை. இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவையின் நிலைப்பாடும் அதுவே.

- இவ்வாறு தெரிவித்தார் கொழும்பு மறை மாவட்டப் பேராயர் ஒஸ்வால்ட் கோமிஸ் ஆண்டகை.

அமைச்சர்களின் தனிப்பட்ட செயலாளர்கள் அமைப்பு பேராயரை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாடு பிரிக்கப்படாமல் இருக்கின்றவேளையில் அதிகாரப் பரவலாக்கல் மூலம் வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்ய வேண்டும். தமிழ், முஸ்லிம் மக்கள் அதிகமாக வாழுகின்ற வடக்கு - கிழக்குப் பகுதியில் பணியாற்றுகின்ற ஆயர்கள் உட்பட இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவையின் நிலைப்பாடு அதுவேயாகும்.

இலங்கைக்குப் பயன்தரக்கூடிய அரசமைப்பு முறை சமஷ்டி ஆட்சி என்ற சொல் பாவிக்கப்பட்டதும் பலர் குழப்பமடைகின்றார்கள். மற்றைய நாடுகளை நாம் பார்க்கும் போது அங்கு பலவிதமான சமஷ்டி அரசு முறைகள் இருப்பதை நாம் காண்கின்றோம். எமது நாட்டிற்கு உகந்த சமஷ்டி அமைப்பு முறையை நாம் தேர்ந்தெடுப்பதே சிறந்ததாகும். இத்தாலியில் கடந்த 50 வருடகாலத்தில் 40 அரசுகள் பதவி வகித்துள்ளன. ஆயினும் அந்த நாடு செழிப்புள்ளதாக இருக்கக் காரணம் அங்கு விளங்குகின்ற தேசியக் கொள்கை முறையே.

வேறுபாடுகளைக் களைந்து ஒற்றுமையுடன் நாட்டைக் கட்டியெழுப்பவேண்டிய காலம் வந்துவிட்டது - என்றார். (எ-8)

## பரீட்சை ஆளணியினருக்கு

யாழ்ப்பாணம்,ஓக.13

ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பொதுத் தகவல் தொழில்நுட்பப் பரீட்சை ஆணையாளருக்கான அறிவுறுத்தல் கூட்டம் எதிர்வரும் 15ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வலிகாமம், வடமராட்சி வலயக் கல்வி அலுவலகங்களையும் கோப்பாய் கோட்டக் கல்வி அலுவலகத்தையும் கொண்ட யாழ்ப்பாண வலயம்II இற்கு உட்பட்ட பரீட்சை ஆளணியினருக்கே இந்த அறிவுறுத்தல் கூட்டம் இடம்பெறவுள்ளது.

இப்பரீட்சைகளுக்காக நியமிக்கப்பட்ட இணைப்பு அலுவலர்கள், உதவி இணைப்பு அலுவலர்கள், மேற்பார்வையாளர்கள், உதவி மேற்பார்வையாளர்கள் ஆகியோரை தவறாது சமுகமளிக்கும்படி வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுள்ளார்.

## ஆவணப் பதிவு நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,ஓக.13

வேலணை, பெருங்குளம் முத்துமாரி அம்பாள் ஆலயத் திருப்பணிச் சபையினரின் ஏற்பாட்டில் கவிஞர் வேலணையூர் பொன்னண்ணாவினால் தொகுக்கப்பட்ட 'அருளமுதம்' ஆவணப்பதிவு நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலய தொண்டர் தில்லையம்பலம் செல்லமுத்து அமுதசுரபி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திருப்பணிச் சபை ந.ஜெயநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் ஆசியுரையை சிவஸ்ரீ ந.மகேஸ்வரக் குருக்கள் நிகழ்த்துவார்.

தொடர்ந்து நூலினை திருமதி பொன்மணி வெளியிட்டு வைப்பார்.

வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை நிகழ்த்துவார்.

வாழ்த்துரைகளை ஓய்வுபெற்ற அதிபர்களான சே.நடராசா, பொ.நடராசா ஆகியோரும் ஓய்வுபெற்ற கல்வி அதிகாரி ஆ. அருமைநாயகமும் நிகழ்த்துவர்.

ஏற்புரையை நூல் தொகுப்பாசிரியர் கவிஞர் வேலணையூர் பொன்னண்ணா நிகழ்த்துவார். நூல் விற்பனையில் வரும் மொத்தப் பணமும் ஆலய கோபுரநிதிக்கு வழங்கப்படவுள்ளதாகக் கூறப்பட்டது. (எ-204)

## கைப்பையைப் பறித்துக்கொண்டு தப்பமுயன்ற யுவதி சிக்கினார்

பெண் ஒருவரின் கைப்பையைப் பறித்துக்கொண்டு தப்பியோட முற்பட்ட யுவதி ஒருவரை இளைஞர்கள் மடக்கிப்பிடித்துப் பொலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

இச்சம்பவம் நேற்று மாலை யாழ். பஸ் நிலையத்தில் இடம்பெற்றது.

முகமாலையிலிருந்து யாழ். நோக்கி வந்துகொண்டிருந்த வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸில் குறிப்பிட்ட பெண் பயணம் செய்துகொண்டிருந்தார் என்றும் - அருகில் நின்றுகொண்டிருந்த யுவதி யாழ். பஸ்நிலையத்தை வந்தடைந்ததும் கைப்பையைப் பறித்துக்கொண்டு ஓட முயன்றார் என்றும் கூறப்படுகிறது. அச்சமயம் அந்த பஸ்ஸில் வந்திருந்த இளைஞர்கள் சந்தேகத்துக்குரிய யுவதியை மடக்கிப் பிடித்து யாழ். பொலீஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

திருட்டில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கப்படும் யுவதி பொலீஸாருடன் சிங்களத்தில் சரளமாக உரையாடினரர் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (எ-9-13)

## சாகும்வரை உண்ணாவிரதம் தொடர்கிறது தோட்டத்தொழிலாளர்கள் வேலைநிறுத்தம்

கொழும்பு, ஓக. 13

மேல்கொத்மலை நீர் மின் திட்டத்தைக் கைவிடக்கோரி மலையக இளைஞர் மன்றத்தைச் சேர்ந்த 6 இளைஞர்கள் மேற்கொண்டு வரும் சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகத் தொடர்ந்து இடம்பெற்றது. கொட்டும் மழைக்கு மத்தியிலும் தற்காலிகக் கூடாரத்தில் இருந்தவாறு அவர்கள் தமது போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

இந்த உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து தலவாக்கலைப் பகுதியைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்கள் நேற்றுமுதல் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். மில்டென், ஹொலிரூட், ஒக்ஸ்போர்ட், வட்டகொட, கொத்தமல்லி, தட்டகெல, நானுஓயா, பாம்ஸ்டென், பெயாவெல், தலவாக்கலை ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த சுமார் 10ஆயிரம் தொழிலாளர்கள் நேற்று வேலைக்குச் செல்லவில்லை.

உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும் மேல்கொத்மலைத் திட்டத்தை கைவிடக்கோரியும் இன்று தலவாக்கலை நகரில் ஆர்ப்பாட்டம் ஒன்றும் இடம்பெறவுள்ளது.

பல்வேறு அமைப்புக்களும் அரசியல் கட்சிகளும் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளன. மலையக மக்கள் முன்னணி, இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணி, புதிய ஜனநாயகக்கட்சி, புதிய பண்பாட்டு அமைப்பு, மேல்கொத்மலைத் திட்டதிற்கெதிரான மக்கள் அமைப்பு, ஆசிரியர் சமூக அமைப்பு ஆகியன உட்பட பல அமைப்புக்கள் ஆதரவைத் தெரிவித்துள்ளன.

இதேவேளை, தமது போராட்டத்துக்கு மலையக அரசியல் கட்சிகளும் தொழிற்சங்கங்களும் வேறுபாடுகளைக் களைந்து ஒரே குரலில் ஆதரவு தெரிவிக்கவேண்டும் என்று மலையக இளைஞர் மன்றம் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளது.

உண்ணாவிரதம் இருக்கும் இளைஞர்களுக்கு ஆதரவாக பலரும் அவர்கள் பக்கத்தில் சுழற்சி முறையிலான உண்ணாவிரதத்திலும் ஈடுபட்டு வருகின்றனர். நேற்றும் பெரும் எண்ணிக்கையானோர் இவ்வாறு உண்ணாவிரதம் இருந்தனர். எனினும் 6 இளைஞர்கள் மட்டுமே தொடர்ச்சியாக சாகும் வரையான உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருகின்றனர். (எ-க)

## கைதியை சித்திரவதைக்கு உட்படுத்த முடியாது மனித உரிமைஆணைக்குழு அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம்,ஓக.13

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதி ஒருவரைக் கட்டுப்படுத்த முடியாது விட்டால் சாதாரண செயல் மூலம் கட்டுப்படுத்தவேண்டும். அதற்காக கைதியை சித்திரவதைப்படுத்த முடியாது.

இவ்வாறு தெரிவித்தார் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரி றோகித பிரியதர்சன.

யாழ். சிறைச்சாலையில் கைதி ஒருவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுவிடயமாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எந்தவொரு மனிதனையும் யாரும் சித்திரவதைப்படுத்தமுடியாது. குறிப்பிட்ட கைதியைக் கட்டுப்படுத்தமுடியாதுவிட்டால் அதற்குரிய மாற்றுவழி ஒன்றைச் சம்பந்தப்பட்டவர்கள் கடைப்பிடித்திருக்கவேண்டும்.

மேற்படி கைதி தாக்கப்பட்டமைக்குரிய சகல ஆதாரங்களும் புகைப்படங்களுடன் உள்ளன. மேலதிக விசாரணைகளை நாம் நடத்தவுள்ளோம் - என்றார்.




இதற்கிடையில் - கைதி ஒருவர் தாக்கப்பட்டதாகத் தெரிவித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருப்பது குறித்து உதயன் செய்தியாளர் யாழ். சிறைச்சாலை அதிகாரி ஒருவரிடம் கருத்துக்கேட்டார். அதற்கு அந்த அதிகாரி -

சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் கைதி ஒருவரை சிறைக்காவலர்களால் கட்டுப்படுத்தமுடியாது என்றால் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள குண்டாந்தடியைப் பயன்படுத்தி குறிப்பிட்ட கைதியைக் கட்டுப்படுத்த முடியும். இப்படித்தான் சிறைச்சாலை விதிமுறை கூறுகின்றது.

சிறைச்சாலையின் சிறைக்கூடத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகள் சிறைச்சாலையின் கட்டுப்பாட்டு விதிமுறைகளுக்கு அப்பால் நடந்துகொண்டால் அதனைக் கட்டுப்படுத்தும் அதிகாரமும் சிறைக்காவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலையில் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் கைதி வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டவர்.

இவர் இம்மாதம் 3 ஆம் திகதி பருத்தித்துறை நீதிமன்றில் இருந்து யாழ்.சிறைச்சாலையில் தடுத்துவைப்பதற்காகக் கொண்டு வரப்பட்டார்.

சிறைச்சாலையின் சிறைக்கூண்டுக்குள் கொண்டு செல்ல முன்னர் கைதிகள் அனைவரும் சிறைக்காவலர்களால் சோதனையிடப்படுவர் அதன்பின்னரே அவர்கள் உள்ளே செல்ல அனுமதிக்கப்படுவர்.

ஆனால் குறிப்பிட்ட கைதியோ சிறைக் காவலர்கள் சோதனைக்குட்படுத்த முற்பட்ட போது தன்னைச் சோதனையிடமுடியாது என்று கூறி வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்.

நிலைமை கட்டுமீறிப் போகவே சிறைக் காவலர்கள் சிறைச்சாலையின் விதிமுறைகளுக்கு அமைவாக தமது பிரயோகத்தைப் பயன்படுத்தினர் - என்றார். (எ-7)

## மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளராக ரகு நியமனம்



யாழ்ப்பாணம்,ஓக.13

மக்கள் வங்கியின் யாழ்.பிராந்திய முகாமையாளராக ரி.ரகு பதவி உயர்வு பெற்றுள்ளார்.

இதுவரைகாலமும் யாழ்.உதவி பிராந்திய முகாமையாளராகப் பணியாற்றி வந்த ரகு, யாழ். பிராந்திய முகாமையாளராக நேற்றுமுதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவரைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று யாழ். பிராந்திய பணிமனையில் நடைபெற்றது. யாழ்.நகர வர்த்தகர்கள் சார்பில் எஸ்.வி.எம். நிறுவன முகாமையாளர் ரி. தியாகலிங்கம் மலர்மாலை அணிவித்து வரவேற்றார். வங்கி ஊழியர்களும் அங்கு சமுகமளித்திருந்தனர். (எ-3)

## விஞ்ஞான தின விழா

கோப்பாய்,ஓக.13

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் விஞ்ஞான தின விழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரியின் நினைவு மண்டபத்தில் மன்றத் தலைவர் தெ.சபில்ராஜ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக இரசாயனவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஆர். சிறிதரன் கலந்துகொள்வார். (எ-72)

## 3 பிரதியமைச்சர்கள் சத்தியப்பிரமாணம்

கொழும்பு, ஓக.13

மூன்று பிரதியமைச்சர்கள் நேற்று ஜனாதிபதி சந்திரிகா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

சமுர்த்தி, வறுமை ஒழிப்பு பிரதியமைச்சராக மகிந்தானந்த அளுத்கமகேயும், வர்த்தக, வாணிப மற்றும் பாவனையாளர் விவகாரப் பிரதியமைச்சராக எச்.ஆர். மித்ரபாலவும், சிறிய மற்றும் கிராமியக் கைத்தொழில் பிரதியமைச்சராக நிர்மல கொத்தலாவலவும் நேற்று சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

மஹிந்தானந்த அளுத்கமகே மின்சக்தி, எரிபொருள் பிரதியமைச்சராகவும் கடமையாற்றுவார் என ஜனாதிபதி செயலகம் நேற்று அறிவித்தது. (எ-க)

## யாழ்.சிறைக்கைதி மரணம்: பிரேத பரிசோதனைக்கு உத்தரவு

யாழ்ப்பாணம்,ஓக.13

யாழ். சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த சமயம் கைதி மரணமான சம்பவத்தில் பிரேத பரிசோதனைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இணுவில் கிழக்கைச் சேர்ந்த பி.நரேந்திரன் (வயது 52) என்ற கைதியே மரணமானார்.

அவரது மரணம் தொடர்பாக மரண விசாரணை நடத்திய யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் பிரேத பரிசோதனை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கும்படி சட்டவைத்திய அதிகாரிக்கு உத்தரவிட்டுள்ளார். (எ-3)

## கிரிக்கெட் சங்க கருத்து முரண்பாட்டுக்குத் தீர்வு

வலி.வடக்கு ,ஓக.13

யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்துக்கும் யாழ். கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்துக்கும் இடையில் நிலவிவந்த கருத்து முரண்பாடுகளுக்கு இணக்கமாக முடிவு எட்டப்பட்டுள்ளது.

தமிழீழ விளையாட்டுத்துறையின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பின் போதே இந்த இணக்கநிலை ஏற்பட்டது.

இச்சந்திப்பில் இரு சங்கங்களின் பிரதிநிதிகளும் தமிழீழ விளையாட்டுத்துறையின் இணைப்பாளர் இன்பன், யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் மாதுளன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இரு சங்கங்களுக்கும் நீண்ட காலமாக நிலவிவந்த பிணக்குத் தொடர்பாக ஆராய்ந்து, எதிர்காலத்தில் இரு பிரிவினரும் இணைந்து செயற்பட இணக்கம் தெரிவித்தனர்.

அதேவேளை -

கிரிக்கெட் சங்கம் தொடர்பான விடயத்துக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்று விளையாட்டுத்துறையினர் தெரிவித்தனர். (எ-3-86)

# உதயன்

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.


## அரசு உண்மை ரூபத்தைக் காண்பிப்பது எப்போது?

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் அரசு அன்றும் இன்றும் உறுதியாகவே இருக்கிறது. எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும் அதனை நடைமுறைப்படுத்துவதில் ஜனாதிபதி மிகவும் உறுதியாக இருக்கிறார். ஜே.வி.பியினரதோ அல்லது வேறு எவருடையதோ அச்சுறுத்தல்களுக்கும் அரசு அடிபணியமாட்டாது.

இவ்வாறு நாடாளுமன்றத்தில் அடித்துக் கூறியிருக்கிறார் மகாவலி அபிவிருத்தி அமைச்சர் மைத்திரிபால சிறிசேன. அவர் அமைச்சர் மட்டுமன்றி, ஆளுங்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் என்பதும் கவனிக்கத்தக்கது.

ஜே.வி.பியினரால் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாகக் கொண்டுவரப்பட்ட விவாதத்தில் உரையாற்றிய வேளையே, அது விடயத்தில் அரசின் உறுதிப்பாட்டைப் பிரதிபலிக்கும் பாணியில் அமைச்சரின் உரை அமைந்தது.

ஆழிப்பேரலை அனர்த்தம் நடைபெற்று ஆறு மாதங்கள் கழிந்த பின்னரே தடக்கியும் விழுந்தும் எழுந்தும் நிமிர்ந்தது பொதுக்கட்டமைப்பு எனப்படும் ஆழிப்பேரலையின் பின்னரான நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகளுக்கான பொதுக்கட்டமைப்பு (PTOMS).

இயற்கை அனர்த்தத்தால் பாதிப்புற்ற மக்களுக்கு உதவுவதிற்கூட இன, பிரதேச, மொழிக் குரோதம் கொண்ட சக்திகள், பொதுக்கட்டமைப்பைச் செயற்படாது தடுத்துவிட்டன. அதனை நீதிமன்றத்துக்கு எடுத்துச்சென்று தடை உத்தரவு பெற்றுள்ளன.

அதனால், ஆழிப்பேரலையால் மிகப் பெரிய அளவில் பாதிப்புற்ற தமிழர் தாயகம் வாழ் மக்களைப் பொறுத்தவரையில், பொதுக்கட்டமைப்பு கிணற்றில் போட்ட கல் என்றாகிவிட்டது.

வெளிநாட்டு நிதியைக் கைநழுவ விடக்கூடாது என்பதற்காக, உருவாக்கப்பட்ட தந்திர அமைப்பே அது என்று தமிழ்மக்கள் கருதுகின்றனர். ஆழிப் பேரலையால் பாதிப்புற்ற மக்களுக்குரிய அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்கேனும் உதவிகள் கைக்குவராது என்று ஏமாற்றமுற்ற மனத்துடன் தமிழ்த் தலைவர்கள் உள்ளனர். ஒரு வகையில் தமிழ் மக்களின் மனக் கண்ணிலிருந்து மறந்துபோன- மறைந்துசென்ற - விடயமாகவும் அது ஆகிவிட்டது.

இப்போது தமிழ் மக்களின் மனங்களை முதலில் உறுத்தும், கவனத்தை ஈர்த்துள்ள விடயம் போர்நிறுத்தம் முறிந்து போய்விடும் என்ற நிலை பற்றியதே.

போர்நிறுத்த உடன்படிக்கையை மீறும் விதத்தில் நாளாந்தம் ஆயுதமோதல்கள் அதிகரித்துவருகின்றன. விடுதலைப் புலிகளுக்கு எதிரான நிழல் யுத்தத்தை நிறுத்துவதற்கு முன்னர் தணிப்பதற்கேனும் நடவடிக்கை எடுக்காமல், அதனைத் தீவிரமாக்கி முடுக்கிவிட்டிருக்கிறது அரசு.

அரசின் இந்தப் போக்கு - நிழல் யுத்தம் நடத்தும் நடவடிக்கை - போர் நிறுத்தத்துக்கு ஆபத்தை விளைவிக்க வல்லது.

இதனை விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்டன் பாலசிங்கம் மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளார். குறிப்பாக, கிழக்கில் பாதுகாப்பு நிலைமை மோசமடைந்து வருவதைக் குறிப்பிட்டு, அரசின் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் மீது நேரடியாக்க் குற்றஞ்சாட்டுகிறார். நாளுக்கு நாள் அதிகரித்து வரும் பதற்றம் முழு அளவில் ஆயுத மோதல் வெடிப்பதற்கு வழிசெய்யும் என்றும் எச்சரித்துமிருக்கிறார்.

தமிழ் ஆயுதக் குழுக்கள் ஐந்து உள்ளன. இது உறுதி செய்யப்பட்ட விடயம். கருணா குழுவும் அதில் அடங்கும். இவர்களுக்குக் கூலியும் தளபாட மற்றும் வசதிகளைப் பாதுகாப்புப் படையினரே வழங்குகின்றனர் -

கிழக்கில் ஸ்திரமற்ற ஒரு நிலையைத் தோற்றுவித்து அங்கு புலிகளின் அரசியல் நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தும் நோக்கத்துடனேயே அரசு தமிழ்க் குழுக்களை வைத்து நிழல் யுத்தத்தை நடத்துகிறது - என்றும் அவர் வெளிப்படுத்துகிறார்.

சமாதானத்தைக் காண்பதில் உறுதியாக உள்ளதாகக் காட்டிக்கொண்டு, புலிகளுக்கு எதிரான நிழல் யுத்தத்தை தொடர்கிறது அரசு. அதன் விளைவாக இப்போதைய போர் நிறுத்தம் முறிந்து, யுத்தத்தில் போய்முடியும் - என்றும் மதியுரைஞர் பாலசிங்கம் எச்சரித்திருக்கிறார். -

அரசு சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் ஜயந்த தனபால இந்த வாரத்தில் கருணா குழு குறித்துத் தெரிவித்த கருத்துக்களை மதியுரைஞர் நிராகரித்திருக்கிறார்.

கள நிலைமை குறித்துப் போதிய அறிவில்லாததாலேயே கருணாகுழுவினர் அடர்ந்த காடுகளுக்குள் செயற்படுவதாகத் தனபால சொல்லியிருக்கிறார். அந்தக் குழுவினர் அரச இராணுவத்தின் முகாம்களில் இருந்தும் அதன் மறைவிடங்களில் இருந்துமே செயற்படுகிறார்கள். இலங்கை ஆயுதப் படைகளே கருணா குழுவுக்குப் பாதுகாப்பையும் வழங்குகின்றன என்ற உண்மை நிலையைப் புட்டுக்காட்டியிருக்கிறார் அன்டன் பாலசிங்கம்.

இப்போதைய அமைதிநிலை குலைந்து போனால், சமாதான முயற்சிகளை அச்சுறுத்தும் விதத்தில் - கெடுத்துவிடும் வகையில் - போரை மீண்டும் தொடங்கும் விதத்தில் செயற்படும் இலங்கை இராணுவமே அதற்குப் பொறுப்பேற்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

உண்மையான கள நிலையைக் கவனத்திற்கொண்டு, போர் மீண்டும் மூளாமல் அரசு பார்த்துக்கொள்ள வேண்டும். ஆனால் அதற்கான மனது அதற்கு உண்டா என்பது எப்போதும் கேள்வியாகவே வளைந்து நிற்கிறது. அரசு தனது இரட்டை வேடத்தைக் களைந்து சுயரூபத்தைக் காண்பிக்க வேண்டிய காலம் நெருங்கிவருகிறது. இதனைப் பொருட்படுத்தாமல் வாளாதிருக்க முடியாது என்பதனை அரசு உணர்ந்து கொள்ளுமா? எப்போது?

# சமூர்த்தி நன்மையாளர் தெரிவில் முறைகேடுகள்; சீராக்க உதவுமாறு கோருகிறார் அரச அதிபர்

யாழ்ப்பாணம், ஓக.13

யாழ்.மாவட்டத்தில் தயாரிக்கப்பட்ட சமூர்த்தி நன்மையாளர் பட்டியலில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன என்று முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

இதுவிடயமாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

சமூர்த்தி முத்திரைகள் யாழ்.மாவட்டத்தில் எல்லாப் பிரதேச செயலகங்களிற்கும் யூலை மாதத்திலிருந்து டிசம்பர் மாதம்வரை வழங்குவதற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இந்த முத்திரைகள் பெறத் தகுதியுடையவர்கள் பட்டியல் நலன்புரி நன்மைகள் சபையினால் எமது பிரதேச செயலகப் பிரிவுகளில் வதியும் குடும்பங்களினால் தாமாகவே நிரப்பிய படிவங்கள் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இருந்த போதிலும் இந்தத் தெரிவில் சில தகுதியற்றவர்களுக்குப் பட்டியலில் பெயர் விவரம் உள்ளதாகவும் பல தகுதியான வறிய நிலையில் உள்ள குடும்பங்கள் பட்டியலில் உள்ளடக்கப்படவில்லை எனவும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களாலும் பொதுமக்களாலும் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் தற்போது எல்லாப் பிரதேச செயலகங்களுக்கும் தகுதியான குடும்பங்கள் பட்டியலில் இடம்பெறவில்லையாயினும் தகுதியில்லாதவர்கள் பட்டியலில் இடம் பெற்றிருந்தாலும் அவ்வாறான விவரங்களை உடனடியாகச் சமர்ப்பிக்குமாறு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது. இந்த விவரங்கள் கிடைத்தவுடன் உரிய திணைக்களங்களுடன் தொடர்பு கொண்டு இந்தக்குறைபாட்டினை நிவர்த்திசெய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றுள்ளது. (3-202)

## வலி.மேற்கு கலை இலக்கிய விழா பண்பாட்டுப் பேரணியுடன் ஆரம்பம்

வலி.மேற்கு,ஓக.13

வலிகாமம் மேற்கு கலாசாரப் பேரவையினரின் முதலாம் நாள் கலை இலக்கியப் பெருவிழா பாரம்பரிய கலைகளைப் பிரதிபலிக்கும் பண்பாட்டுப் பேரணியுடன் நடைபெற்றது.

இப் பேரணி சங்கானை கூடத்து மனோன்மணி அம்மன் ஆலயத்தில் இருந்து ஆரம்பமானது. பேரணியின் முன்பாக அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் 'தமிழ்த் தாய்' செல்ல ஆறுமுகநாவலர், விபுலானந்தர், பாரதியார், ஔவையார் வேடமணிந்த மாணவர்கள் பின் தொடர்ந்தனர். பண்பாட்டுப் பேரணி சங்கானை கலாசார மண்டபத் திறந்த வெளியரங்கை சென்றடைந்தது. வீதியெங்கும் மக்கள் நிறைகுடம் வைத்து விருந்தினர்களுக்கு மாலை அணிவித்தனர்.

பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் தலைமையில் நடைபெற்ற கலை இலக்கியப் பெருவிழாவை முன்னாள் யாழ். மாவட்ட அரச அதிபரும் உலக வங்கி வீடமைப்புத்திட்டப் பணிப்பாளருமான செ.பத்மநாதன், யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைப் தலைவர் பேராசிரியர் கலாநிதி எஸ்.சிவலிங்கராசா ஆகியோர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர்.

ஆசியுரையை சிவஸ்ரீ கலாநிதி எஸ். நித்தியானந்தக் குருக்களும் வரவேற்புரையை கலாபூஷணம் சு.கணபதிப்பிள்ளையும் வாழ்த்துரையைப் பேராசிரியர் கலாநிதி எஸ்.சிவலிங்கராசாவும் நிகழ்த்தினார்கள்.

தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம் பெற்றன. (ஓ-175)

## 'அக்ரஹர படிவத்தில்' தமிழ் புறக்கணிப்பு

அச்சுவேலி,ஓக.13

அரச ஊழியர் மற்றும் ஆசிரியர்களுக்கான கட்டாயக் காப்புறுதித் திட்டமான 'அக்ரஹர' காப்புறுதித் திட்டத்தில் இருந்து நஷ்டஈட்டைப் பெற்றுக் கொள்வதற்கான படிவத்தைச் சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகள் மட்டும் கொண்டதாக இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் வெளியிட்டுள்ளது.

இதில் தமிழ்மொழி முற்றாகப் புறக்கணிக்கப்பட்டிருப்பதால் தமிழ் ஊழியர்கள் விண்ணப்பிக்கும்போது விடயத்தைப் புரிந்துகொள்வதற்குச் சிரமப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-11)

## மண்டைதீவு பஸ்சேவையை ஆரம்பிக்கக் கோரிக்கை

வடபிராந்தியப் போக்குவரத்துச் சபை மண்டைதீவுக் கிராமத்திற்கு நடத்திவந்த இரண்டு சேவையையும் இடைநிறுத்திக்கொண்டது. இதனால் தாம் சிரமத்தை அனுபவிப்பதாக இந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இங்கு சேவையில் ஈடுபடும் தனியார் மினிபஸ்களும் ஒழுங்கான நேரஅட்டவணைப்படி சேவையில் ஈடுபடுவதில்லை என்றும் -

இந்நிலையில், வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் பஸ்சேவைகளும் இடை நிறுத்தப்பட்டதால் பொதுமக்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்பட்டது. ஆகவே, இடைநிறுத்தப்பட்ட சேவையை மீள ஆரம்பிக்கவேண்டுமென இந்தக் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஓ-88)

*மீள்வளப்படுத்தும் திட்டத்தின் கீழ்*

# உயர்ந்தரக சவுக்கு நாற்றுகள் மணற்காட்டுப் பகுதியில் நடுகை

மண்டைதீவு,ஓக.13

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட விதைகளைக் கொண்டு உற்பத்திசெய்த சவுக்குமர நாற்றுகள் மருதங்கேணி அரச அதிபர் பிரிவில் உள்ள மணற்காட்டுப் பகுதியில் வரும் மாரிகாலத்தில் நடுகை செய்யப்பட உள்ளன என்று யாழ்.வட்ட, வன வளத் திணைக்கள அதிகாரி முருகேசு பிரபாகரன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இதற்கான நாற்று மேடைகள் அந்தந்தப் பகுதியிலேயே அமைக்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகின்றன. ஒதுக்கப்பட்டுள்ள 25ஏக்கர் நிலப்பரப்பில் இவை எதிர்வரும் நவம்பர் - டிசம்பர் மாதங்களில் நடுகை செய்யப்படும்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட இடங்களை மீள வளப்படுத்துவதற்கான செயல் திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மரநடுகைத் திட்டம் இதுவாகும். மண்ணரிப்பைத் தடுத்தல் சுற்றுசூழலைப் பாதுகாத்தல், இயற்கை அனர்த்தங்களால் ஏற்படும் அழிவுகளைக் கட்டுப்படுத்தல் என்பன இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

இது சம்பந்தமாகக் கடந்த மாதம் 15 ஆம் திகதி அநுராதபுரத்தில் இருந்து வடக்கு-கிழக்கு மாகாண 'காடுபேணல்' அதிகாரி டபிள்யூ.ஏ.சி.வேரகொட தலைமையிலான அதிகாரிகள் இங்கு வருகை தந்துசம்பந்தப்பட்ட இடங்களைப் பார்வையிட்டுத் திரும்பியுள்ளனர்.

மேலும் கொழும்பில் இருந்து வன வள பாதுகாப்பு உயரதிகாரி தலைமையிலான குழுவினர் இந்தமாதப் பிற்பகுதியில் இங்குவரத் திட்டமிட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார். (9-88)

## உதயவாக்கு

ஒருவனது குறிக்கோளைக் கொண்டே அவன் எத்தகையவன் என்று அறிந்துகொள்ளலாம்.

-தோமஸ்-

## நாளை

ஆடி 29

ஞாயிற்றுக்கிழமை

14.08.2005

திதி: நவமி

பிற்பகல் 01.40 வரை


நட்சத்திரம்: அனுஷம்

பிற்பகல்: 04.00 வரை

சுபநேரம்: 09.05 - 10.35

ராகுகாலம்: 04.35 - 06.05

(யாவும் பழைய நேரப்படி)



# கேள்வி அறிவித்தல்
## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்

01. யாழ்ப்பாண மாவட்ட செயலாளரினால் யாழ்ப்பாண வீதி அபிவிருத்தித் திணைக்கள பிரதம பொறியியலாளரினால் மேற்கொள்ளப்படும் பின்வரும் வீதி திருத்த வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

| வேலை விவரம் | ஆகக்குறைந்த (ICTAD) தரம் | மீளளிப்புச் செய்யக்கூடிய வைப்புத் தொகை | மீளளிக்க முடியாத தொகை |
|---|---|---|---|
| அனலைதீவு இறங்குதுறை புனரமைப்பு | M-7 | 48,000/- | 1,000/- |

02. நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவுதரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரத்தில் ஒப்பந்தகாரர் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன், வீதி அபிவிருத்தித் திணைக்களத்தில் வீதி பராமரிப்பு ஒப்பந்தகாரராகவும் பதிவுசெய்யப்பட்டிருந்தல் வேண்டும்.

03. இக்ராட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கேள்வி ஆற்றலளவைக் கொண்டிருத்தல்வேண்டும்.

04. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பிக்கக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

05. கேள்வி ஆவணத்தொகுதிகளை யாழ்ப்பாணம் வீதி, அபிவிருத்தித் திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் மீளளிப்புச் செய்யக்கூடிய வைப்புத் தொகையாக ரூபா 48,000/- மீளளிக்க முடியாத தொகையாக ரூபா 1,000/-வும் செலுத்தி 01.09.2005 ஆம் திகதி பிற்பகல் 3 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

06. கேள்வி ஆவணத் தொகுதிகளை யாழ்ப்பாணம், கடற்கரை வீதியில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தித் திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் எல்லா அலுவலக நாள்களிலும் அலுவலக நேரங்களிலும் இலவசமாகப் பார்வையிடலாம். பொறிவைத்த கேள்விகளைக் கொண்ட தபாலுறையில் இடதுபக்க மேல்மூலையில் '*அனலைதீவு இறங்குதுறை புனரமைப்பு*' என எழுதப்படல் வேண்டும்.

07. பொறியிடப்பட்ட கேள்விகள் '*தலைவர் மாவட்டக் கேள்விச் சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்*' என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் 02.09.2005 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு முன்பாக அனுப்பப்படல் வேண்டும். அல்லது இதே முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடப்படல் வேண்டும். இதன் பின்னர் கேள்விகள் 02.09.2005 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்குத் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விகள் இடுவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

**மாவட்ட கேள்விச் சபை,**
**மாவட்ட செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**


(சி-44062)(29-14-15)

**க.கணேஷ்**
**மாவட்ட கேள்விச் சபை,**
**யாழ்ப்பாணம்.**

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

அன்னை மடியில்
1966 – 07 – 19



ஆண்டவன் அடியில்
2005 – 07 – 14

## அமரர் பஞ்சாட்சரம் சிவகுமார்

*தோற்றம் மறைந்தாலும் எம் துயரமோ மறையவில்லை*
*காலங்கள் கரைந்தாலும் எங்கள் கவலைகள் ஆறவில்லை*
*கண்டதெல்லாம் கனவாகி கணப்பொழுதில் மறைந்ததுவோ?*
*பண்புடனே பார்த்து வந்தோம் பாரைவிட்டுப் போனதேனோ?*
*எமைவிட்டுப் பிரிந்துவிட்ட எம் பாசமலரே!*
*ஒன்றல்ல இரண்டல்ல ஓராயிரம் மாதங்கள் ஆனாலும் - ஏன்*
*எங்கள் உயிர்மூச்சு உள்ளவரை - நீங்கள்*
*எங்கள் இதயங்களில் உயிருடன் வாழ்வீர்கள்*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

இன்று (13.08.2005) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*குறிப்பு:*
*இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.*

"குருபவனம்",
கண்டிவீதி, சாவகச்சேரி.

**- குடும்பத்தினர்.**

(சி-44065)(42-29-14-15)

---

**தென்னிந்தியத் திருச்சபையின் வாலிபர்களால் நடத்தப்படும் வாலிபர்கள் ஒன்றுகூடல்**

காலம்: இன்று (13.08.2005) சனிக்கிழமை
நேரம்: காலை 8.30 மணி
இடம்: இணுவில் மத்திய கல்லூரி ஆரம்ப பாடசாலை மண்டபம்.

அனைத்துத் தென்னிந்தியத் திருச்சபை வாலிபர்களையும் பங்கேற்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(38826)

**-திருச்சபை வாலிபர்கள்.**

---



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கலைப்பீட, இராமநாதன் நுண்கலைக்கழக பரீட்சைகள் - 2005

*கலைப்பீட மற்றும் இராமநாதன் நுண்கலைக் கழக மூன்று வருட மற்றும் நான்கு வருடக் கற்கைநெறியைப் பயின்று அனைத்துப் பிரதான பாட அலகுகளிலும் சித்திபெற்றும் இரண்டாம் மொழி ஆங்கிலத்தில் சித்தியின்மையால் பட்டக் கற்கைநெறியைப் பூர்த்திசெய்யாதுள்ள மாணவர்களிடமிருந்து மட்டும் இரண்டாம் மொழி ஆங்கிலப்பாடத்திற்கான விசேட மீள்பரீட்சைகளிற்கு விண்ணப்பங்கள் 11.08.2005 ஆம் திகதி முதல் 22.08.2005 ஆம் திகதி வரை கலைப்பீடாதிபதி அலுவலகத்தால் ஏற்றுக்கொள்ளப்படும்.*

1. *முதலாம் வருட இரண்டாம் அரையாண்டு -கலை, இராமநாதன் நுண்கலைக்கழகம்.*
2. *இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டு. -கலை, இராமநாதன் நுண்கலைக்கழகம்.*
3. *மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டு. -கலை, இராமநாதன் நுண்கலைக்கழகம்.*

*மீள்பரீட்சார்த்திகள் ஒரு பாடத்திற்கு மீள் பரீட்சைக் கட்டணமாக ரூபா 50 வீதம் பல்கலைக்கழக காசாளரிடமோ, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையிலோ செலுத்தி பற்றுசிட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல்வேண்டும்.*

**பதிவாளர்.**
**11.08.2005**

(சி-44064)(29-14-15)

---

## தேவை

புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்களும் பழக விரும்புவோரும் தேவை. எமது ஸ்தாபனத்துக்குச் சமீபத்தில் வசிப்பவராயின் நன்று.
*ஆண், பெண் இருபாலாரும் நேரில் தொடர்புகொள்ளவும்.*

**அங்கலின் ரெக்ஸ்ரைல்,** (38822)
*43, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.*

---

## ஆண்டைந்து நிறைந்துருகல்



நயினை அமரர்
**இரகுநாதன் சிவஞானசுந்தரம்பிள்ளை**
(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர் -கல்வித் திணைக்களம், மன்னார்)

**தோற்றம்** 15-12-1936 **மறைவு** 07-08-2000

அட்டமத்திதி: 13.08.2005

இல்லறத்தை நல்லறமாக்கிய இல்லறஞானி, செயலிற்துறவு, அந்தரங்கச் சுத்தி, அன்பு, பாசம், ஈகை என்பன நீங்கள் எமக்கு விட்டுச் சென்ற இனிக்கும் நினைவின் முத்திரைகள். உங்கள் ஆன்மாவும் ஆகிருதியும் அளவிடற்கரியன. உங்கள் ஆன்மா சாந்தியடைய நயினை ஸ்ரீ நாகபூசணித் தாயை இறைஞ்சுகின்றோம்.

**உங்கள் நினைவில் உருகும்:**
**டாக்டர் திருமதி சாவித்திரிதேவி சிவஞானசுந்தரம்பிள்ளை** (மனைவி),
**இ.தணிகாசலம்** - சகோதரர்
**இ.சிவபாதசேகரம்** - சகோதரர்
(முதல்வர் - யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை)

**தகவல்:**
**டாக்டர் சாவித்திரிதேவி சிவஞானசுந்தரம்பிள்ளை**
**ஆதாரவைத்தியசாலை - மந்திகை**
**முதலாம் கட்டை ஒழுங்கை,**
**புலோலி கிழக்கு,**
**புலோலி.** (38824)(29-14-15)
**தொ.பே. 021 226 3714**

---


Jayoda ஜயோதா ජයෝදා

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7145240 முதல் 7157284 வரை சீட்டிழுப்பு இல. 158 திகதி 11-8-2005

வெற்றி எண்கள் **9 0 3 3 6 3** சுப்பர் எண் **13**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,17,92,525/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,17,92,525/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 10 | 50,000/- | 5,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 101 | 5,000/- | 5,05,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,062 | 500/- | 5,31,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,572 | 50/- | 5,28,600/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல 1 எண் | 1,04,751 | 10/- | 10,47,510/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/- | 45,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 105 | 1,000/- | 1,05,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,059 | 100/- | 1,05,900/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,477 | 20/- | 2,09,540/- |
| | | மொத்தம் | 45,77,550/- |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/- | 6,02,600/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 51,80,150/- |

இந்த திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. **1,20,86,450/-**

தொடர் இல. 6214615 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2005 ஆகஸ்ட் 15 ஆம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ரூபா 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| அநுராதபுரம் | 7153570-2-01 |
| காலி | 7149076-0-96 |
| புத்தளம் | 7150211-4-21 |
| கொழும்பு | 7150064-6-67 |
| நுவரெலியா | 7152970-6-10 |
| கண்டி | 7153683-7-51 |
| கேகாலை | 7148515-6-52 |
| திருகோணமலை | 7145761-8-19 |

## விபத்தில் யுவதி படுகாயம்!

புதுக்குடியிருப்பில் கடந்த புதன்கிழமை காலை 9 மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் யுவதியொருவர் படுகாயமடைந்துள்ளார்.

முள்ளியவளையைச் சேர்ந்த லோகநாதன் மைதிலி (வயது-24) என்ற யுவதியே படுகாயமடைந்தவராவார். இவர் புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். புதுக்குடியிருப்புப் பகுதியில் வேலைக்குச் சென்று கொண்டிருந்த போது எதிரே வேகமாக வந்த மோட்டார்சைக்கிள் இவர் மீது மோதியதில் தலையில் படுகாயமடைந்தார் என்று கூறப்பட்டது. (த-ரி)

## புதுக்குடியிருப்பில் நாளை இசை நாடகங்கள்

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பொன்விழாக் கலையரங்கில் நாளை ஞாயிற்றுக்கிழமை கலாபூஷணம் செல்லையா மெற்றாஸ்மயிலின் நெறியாள்கையில் உருவான 2 இசை நாடகங்கள் மேடையேற்றப்படவிருக்கின்றன. நாளை பிற்பகல் 2.30 மணிக்கு 'பவளக்கொடி' நாடகமும் இரவு 7 மணிக்கு 'பூதத்தம்பி' நாடகமும் மேடையேறுகின்றன.

இதில் முன்னணிக் கலைஞர்களான நடிக கலாமணி செல்வரத்தினம், கலாநிதி த.கலாமணி, கலாபூஷணம் செ.மெற்றாஸ்மயில், நா.விமலநாதன், வை.விஜயபாஸ்கரன் , கலாவித்தகர் வ.தயாநிதி, ஜோன் கவாஸ் ஆகியோர் பங்குகொள்கின்றனர். (த)

## பயிற்சிப் பட்டறை

பொருண்மிய மதியுரையகத்தின் ஏற்பாட்டில் கட்டட வடிவமைப்பையும் கட்டட நிர்மாணத்தையும் வழிநடத்தும் விதிமுறைகள் பற்றிய பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டது.

கடந்த மாதம் 27ஆம் திகதி பொருண்மிய மதியுரையகத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்விற்கு மதியுரையகத்தின் திட்ட அலுவலர் த.பிரதாப் தலைமை வகித்தார். நிகழ்வில் கட்டட வடிவமைப்பும் கட்டுமானமும் தொடர்பான கருத்துரைகளும் இடம்பெற்றன. (202)

நிரந்தரக் கட்டடம் ஒன்றுகூட இல்லை

## இருட்டுமடு தமிழ் வித்தியாலயம் கூரை பிரிந்த கொட்டகைகளில்!

உடையார்கட்டு இருட்டுமடு தமிழ் வித்தியாலயம் பல்வேறு அடிப்படை வசதிகளற்ற நிலையில் இயங்கிவருகின்றது.

இருட்டுமடு கிராமம் உடையார்கட்டிலிருந்து சுமார் 4கிலோமீற்றர் தொலைவில் உள்ளது. இக்கிராமம் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ளது.

இங்கு அமைந்துள்ள மேற்படி பாடசாலையில் தரம் ஒன்று முதல் தரம் 8வரையான வகுப்புகளில் மாணவர்கள் கல்விகற்கின்றார்கள். இங்கு நிரந்தரக் கட்டடங்கள் ஒன்று கூடக் கிடையாது. ஒரு அரைநிரந்தரக் கட்டடமும் 2 தற்காலிக கொட்டகைகளுமே உள்ளன. இக்கொட்டகைகளின் கூரைகள் தற்போது வீசுகின்ற காற்றினால் பிரிந்த நிலையில் மிகவும் சேதமடைந்து காணப்படுகின்றன.

பாடசாலைக்கென ஒரு மலசலகூடம்கூட அமைக்கப்படாத நிலையில் மாணவர்கள் இயற்கைக் கடன்களைக் கழிப்பதற்கு அருகிலுள்ள பற்றைகளை நாடிச்செல்கின்றனர். (202)

## ஒரே தடவையில் 7 ஆசிரியர்கள் கலாசாலைக்குச் சென்றுவிட்டனர்

### வேரவில் வித்தியாலய மாணவர்கள் அவதி

வேரவில் இந்து மகா வித்தியாலயத்தில் சில பாடங்களுக்கான ஆசிரியர்கள் இல்லாமையால் மாணவர்கள் கற்றலில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

மேற்படி பாடசாலையில் கற்பித்த 7 ஆசிரியர்கள், ஆசிரியர் கலாசாலைக்குப் பயிற்சிக்காகச் சென்றுள்ளனர். இந்நிலையில் கணிதம், விஞ்ஞானம், உடற்கல்வி, மீன்பிடியியல், மனையியல், சித்திரம், நடனம், சங்கீதம் ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லை.

இதனால் பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்வி நிலை குறித்துப் பெரும் கவலை அடைகின்றனர்.

இதேவேளை, கடந்த 28 ஆம் திகதி ஓர் ஆங்கில ஆசிரியர் மேற்படி பாடசாலையில் நியமனம் பெற்றுள்ளார். பாடசாலை 3 ஆம் தவணையில் கணித, விஞ்ஞான ஆசிரியர்களை நியமிப்பதற்கு முயற்சி எடுப்பதாக வலயக் கல்விப் பணிப்பாளர் உறுதியளித்தார் என்று மேற்படி பாடசாலை அதிபர் த.கோடீஸ்வரன் தெரிவித்தார்.

(த-202-323)

## போக்குவரத்து விதிகளை மீறுவோர் மீது நடவடிக்கை

பரந்தன்-முல்லைத்தீவு நெடுஞ்சாலையில் வீதிப்போக்குவரத்து விதிகளை மீறுவோர் மீது தமிழீழக் காவல்துறையின் வீதிப்போக்குவரத்துக் கண்காணிப்பு பிரிவினர் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். வீதியில் வேகக்கட்டுப்பாட்டு சமிக்ஞையை மீறுதல், குடிபோதையில் வாகனஞ் செலுத்துதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் மீதே கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கையினால் வீதி விபத்துக்கள் குறைந்துள்ளதுடன் வீதிகளில் பயமின்றி பயணஞ்செய்யக்கூடியதாக இருக்கின்றது என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

(த- 352-204)

## நிக்கொட் திட்டத்தின்கீழ் கற்சிலைமடுவில் அபிவிருத்தி

ஒட்டுசுட்டான்,ஓக.13

கற்சிலைமடு, 3ஆம் கண்டம் கிராமத்தில் 'நிகொட்' சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தேவைப் பகுப்பாய்வு ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கற்சிலைமடு கிராம அலுவலர் தி.ஆனந்தராசா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மேற்படி கிராம மக்களுக்கான குடிதண்ணீர், பொது நோக்கு மண்டபம், வீதி, மலசலகூடம் போன்ற பல்வேறு திட்டங்களை முன்னிலைப்படுத்தி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இத்திட்டங்கள் 50 லட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டு ஒரு வருடத்திற்குள் பூர்த்தியாக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-341-202)

## விசுவமடுப் பிரதேச அபிவிருத்தி குறித்து ஆராய்வு

பரந்தன்,ஓக.13

விசுவமடுப் பிரதேச அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் இடம்பெற்றது.

விசுவமடுப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் மு.சோழநிலவன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் புதுக்குடியிருப்புப் பிரதேச உதவி அரச அதிபர் செ.தயானந்தா , தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத் துணைப் பொறுப்பாளர் சு.சின்னண்ணை, கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் வி.அருள், தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பிரதேசப் பொறுப்பாளர் நர்மதா, சமூக பொருளாதார வளர்ச்சி நிறுவன இணைப்பாளர் யூட், புதுக்குடியிருப்புப் பிரதேச விவசாயப் போதனாசிரியர் க.விஜயன், கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறையைச் சேர்ந்த கி.தேவா, விசுவமடு உபதபாலதிபர் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் விசுவமடுப் பிரதேசத்தைச் சேர்ந்த 5 கிராமசேவை உத்தியோகத்தர் பிரிவுகளில் அபிவிருத்தி வேலைகள் தடைப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

அங்கு விரைவில் அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிக்கப்படும் என்றும்- இதற்கான நிதி அரசசார்பற்ற நிறுவனங்களிலிருந்தே பெறப்படுகின்றது என்றும் பிரதேச செயலர் பதிலளித்தார். (த-352-202)





கிளிநொச்சி, ஜெயந்திநகர் மகாதேவா ஆச்சிரமத்தின் வடிவேல் சுவாமிகள் சமாதிக்கோயில் கும்பாபிஷேகம் கடந்த 9ஆம் திகதி இடம்பெற்றது.

வடிவேல் சுவாமிகள் சமாதியடைந்து 15 ஆம் ஆண்டு நிறைவில் ஆயிலிய நட்சத்திர தினத்தில் இந்தக் கும்பாபிஷேகம் நடைபெற்றது. நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள், இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஆத்மகணானந்தஜி, மகாதேவ ஆச்சிரம சுவாமிகள், சிவதொண்டர் செல்லத்துரை சுவாமிகள் உட்பட நிகழ்வில் கலந்து கொண்டோர் வீதிவலம் வருவதையும் கோபுர கலசத்தில் கும்பநீர் ஊற்றப்படுவதையும் படங்களில் காணலாம். (த-323)

## அறுவடை செய்த நெல்லை கொள்வனவு செய்வாரில்லை!

### கடன் சுமையில் விவசாயிகள் தவிப்பு!

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் அறுவடை செய்துள்ள நெல்லைக் கொள்வனவு செய்ய எவரும் முன்வராததால் விவசாயிகள் நெற்செய்கையைக் கைவிட வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையில், தற்போது சிறுபோக அறுவடையில் பெறப்பட்ட நெல்லும் விற்பனையின்றிக் கிடக்கின்றது. இதனால் விவசாயிகள் மேலும் கவலையடைந்திருக்கின்றனர்.




2004-2005 பெரும் போகத்தில் விவசாயிகள் அறுவடை செய்த நெல்லைக் கொள்வனவு செய்ய எவரும் முன்வரவில்லை என்று கூறப்பட்டது.

இதனால், பாதிப்படைந்த விவசாயிகள் தமது அன்றாடத் தேவைகளுக்குக்கூடப் பெரும் பணக் கஷ்டத்தை எதிர்நோக்கியிருந்தனர்.

அறுவடைக்குச் செலவிட்ட பணத்தைக் கூட மீளப்பெற்றுக்கொள்ள முடியாது அவர்கள் கடன் சுமையுடன் இருக்கின்றனர்.

நெல் கொள்வனவு செய்யத் தனியார் முன்வருவதில்லை. கூட்டுறவுச் சங்கங்கள் தான் நெல்லைக் கொள்வனவு செய்து வந்தன. இப்போது சங்கங்களும் அதனை இடை நிறுத்தியுள்ளன.

நெற்செய்கையைத் தமது ஜீவனோபாயத் தொழிலாக மேற்கொள்ளும் விவசாயிகளினது நலனைக் கருத்திற்கொண்டு நெல்லைக் கொள்வனவு செய்ய உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (த-352-341-204)

## கட்டாக்காலி நாய்களை ஒழிக்க கரைச்சியில் இப்படி ஒரு முறை!

கிளிநொச்சி மாவட்டத்தில் கட்டாக்காலி நாய்களை ஒழிக்கப் புதியதிட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் கரைச்சிப் பிரதேச சபையினர் நாய்க்குட்டிகளை 20 ரூபா வீதம் கொள்வனவு செய்து வருகின்றனர். பின்னர் அந்த நாய்கள் கொல்லப்படுகின்றன.

கட்டாக்காலிகளாக வீதிகளில் திரியும் நாய்களைப் பிடித்துவந்து கரைச்சிப் பிரதேச சபையினரிடம் கொடுப்பவர்களுக்கு ஒவ்வொரு நாய்க்கு 20 ரூபாவீதம் வழங்கப்படுகின்றது.

இப்பிரதேசத்தில் இத்திட்டம் வெற்றியளித்தால் மேலும் பல இடங்களில் இதனை விரிவுபடுத்தி நடைமுறைப்படுத்தவுள்ளதாகக் கரைச்சிப் பிரதேச விசேட ஆணையாளர் பொன்.நித்தியானந்தம் தெரிவித்துள்ளார். (த-305-203)



லெப்.கேணல் கங்கை அமரன், மேஜர் தசரதன் ஆகியோரின் 4 ஆம் ஆண்டு நினைவுதினம் அவர்களது நினைவாக பூநகரி, கிராஞ்சியில் அமைக்கப்பட்ட மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. அதன்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

பொதுச்சுடரினை கடற்புலிகளின் தளபதி மங்களேஸ், மன்னார் மாவட்ட கடற்புலிகளின் மகளிர் தளபதி தமிழவள் ஆகியோர் பொதுச்சுடர் ஏற்றுவதை முதலாவது படத்தில் காணலாம்.

கடற்புலிகளின் தளபதி லெப்.கேணல் கங்கை அமரனின் திருவுருவப்படத்திற்கு அவரது மனைவி, பிள்ளைகள் மலர்மாலை அணிவிப்பதையும் மேஜர் தசரதனின் திருவுருவப்படத்துக்கு அவரது தாயார் சுடர் ஏற்றுவதையும் அடுத்துள்ள படங்களில் காணலாம்.

*(படங்கள்: பூநகரிச் செய்தியாளர்)*

# பொதுக்கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவதை ஐ.தே.கட்சி, சு. கட்சி இணைந்து வலியுறுத்து


## ஹெல உறுமய, ஜே.வி.பிக்கு எதிராகக் கடும் விமர்சனங்கள்


ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக்கட்டி எழுப்புவதற்காக அரசும், புலிகளும் இணைந்து செய்துகொண்ட பொதுக்கட்டமைப்பை நடைமுறைப் படுத்துவதை நாட்டின் பிரதான அரசியல் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து ஒரே குரலில் வலியுறுத்தியுள்ளன.

பொதுக்கட்டமைப்பை எதிர்த்து நாடாளுமன்றில் பிரேரணை முன் வைத்த ஜே.வி.பியினரும், அவர்களது சகாக்களான ஜாதிக ஹெல


மைத்திரிபால சிறிசேன


விமல் வீரவன்ஸ


இரா.சம்பந்தன்


என்.இரவிராஜ்


எம்.கே.சிவாஜிலிங்கம்


ராஜித சேனாரத்ன

உறுமய உறுப்பினர்களும் கடுமையான கண்டனங்களுக்கும், விமர்சனங்களுக்கும் உள்ளாகினர்.

சபாநாயகர் டபிள்யு.ஜே.எம். லொக்குபண்டாரவின் தலைமையில் நேற்றுமுன்தினம்காலை நாடாளுமன்ற சபை அமர்வுகள் ஆரம்பமாகின. வழமையான கேள்வி பதில்களுக்குப் பின்னர் பொதுக்கட்டமைப்புத் தொடர்பான விசேட விவாதத்திற்காக சபையின் ஏனைய நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்டன.

**விமல் வீரவன்ஸ உரை**

ஜே.வி.பி. பிரசாரச் செயலாளரான விமல் வீரவன்ஸ பொதுக்கட்டமைப்புத் தொடர்பான பிரேரணையை ஒத்திவைப்பு வேளைப் பிரேரணையாகச் சபையில் முன்மொழிந்தார்.

அரசும், புலிகளும் இணைந்து ஏற்படுத்திய பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தம், வடக்கு - கிழக்கு மாகாணத்தையே புலிகளுக்குச் சீதனமாக வழங்கியதற்கான நன்கொடை உறுதிப்பத்திரம் என்று கூறிய விமல் வீரவன்ஸ, இந்த அரசாங்கம் புலிகள் தான் இங்கு வாழும் தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகள் என அங்கீகரித்துவிட்டது என்றும் குற்றஞ்சாட்டினார்.

சமாதானப் பேச்சுகளின் இடைத்தரகர்கள் என்று கூறிக்கொண்டு இங்கு காலடி எடுத்துவைத்த நோர்வேக்காரர்கள், பொதுக்கட்டமைப்புச் செயற்பாட்டிலும் பங்கு பெறுவதன் மூலம் நாட்டின் நிர்வாகத்திலும் தலையிடும் உரிமையை இந்த அரசு வழங்கிவிட்டது என்றும் அவர் குற்றம் சுமத்தினார்.

முன்னர் ஒரே பக்கத்தில் அமர்ந்து பாசத்துடன் பழகிய ஜே.வி.பியினரும், ஆளும் கட்சியினரும் நேற்று முன்தினம் சபையில் கீரியும், பாம்பும் போல் மோதிக்கொண்டனர். பிரதி அமைச்சர்களான டிலான் பெரேரா, ஸ்ரீபதி சூரியஆராய்ச்சி, மேர்வின் சில்வா ஆகியோர் ஜே.வி.பியினரை அக்குவேறு ஆணிவேறாக விளாசித் தள்ளிவிட்டனர்.

எதிர்க்கட்சி உறுப்பினர்களான ஐக்கிய தேசியக்கட்சியினரும், தமிழ்த் தேசியக் கூட்டணி உறுப்பினர்களும் இதனை அமைதியாக வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர்.

அத்தனை எதிர்த்தாக்குதல்களுக்கும் மத்தியில் விமல் வீரவன்ஸ 90 நிமிடங்கள் உரையாற்றினார். கடைசிவரையில் பொதுக்கட்டமைப்பை நடைமுறைப்படுத்த விடமாட்டோம் என்று சூளுரைத்தார்.

அதேவேளை, பொதுக்கட்டமைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் கிளிநொச்சியில் அதன் செயலகம் எப்படி அமைந்திருக்கும் என்றும் விவரித்தார்.

அதாவது, "சபாமண்டபத்தில் பிரபாகரனின் பெரிய அளவிலான படம் இருக்கும். அந்தப் படத்தின் கீழ் தலைவராகப் புலி உறுப்பினர் இருப்பார். அவரின் அருகில் ஒரு முஸ்லிம் உபதலைவராக இருப்பார். அரச பிரதிநிதி அவர்கள் முன் மண்டியிட்டு நிற்பார். நல்லவேளையாக உயர்நீதிமன்றம் தடை உத்தரவைப் பிறப்பித்து நாட்டைக் காப்பாற்றிவிட்டது" -என்றார் அவர்.

**மைத்திரிபாலவின் பதிலடி**

விமல் வீரவன்ஸவின் கூற்றுக்குப் பதிலடி கொடுத்தார் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன. "ஜே.வி.பியினரின் அட்டகாசங்களுக்கும், ஆர்ப்பாட்டங்களுக்கும் அரசாங்கம் அடிபணியாது. இந்த நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணப்படாவிட்டால் ஒரு பிரபாகரனுடன் மேலும் பல நூறு பிரபாகரன்கள் உருவாவதை எவராலும் தடுக்க முடியாது. கடந்த காலங்களில் நாம் விட்ட தவறுகளை மீண்டும் விடக்கூடாது" என்று கூறினார் அமைச்சர்.

இன ஐக்கியத்திற்கு முன்னுதாரணமாக இந்தியாவையும் சுட்டிக் காட்டினார். "இந்தியாவின் ஜனாதிபதியாக இருப்பவர் ஒரு முஸ்லிம். இந்திரா காந்தியைப் படுகொலை செய்த சீக்கிய இனத்தைச் சேர்ந்த ஒருவரே இப்போது அந்த நாட்டுக்குப் பிரதமராக இருக்கின்றார். இதை ஜே.வி.பியினர் திரும்பிப் பார்க்க வேண்டும். இனிமேலாவது தமிழர்கள் புலிகள் என்ற இனத்துவேசம் பேசுவதை அவர்கள் கைவிட வேண்டும் என இடித்துக் கூறினார் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன.

**ஐ.தே.க. அதிரடி**

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களான டாக்டர் ராஜித சேனாரத்ன, பந்துல குணவர்தன ஆகியோர் ஜே.வி.பி.யினரின் கடந்த கால நடவடிக்கைகளைக் கடுமையாக விமர்சித்தனர்.

கொலைக் கலாசாரத்தையே சித்தாந்தமாகக் கொண்ட ஜே.வி.பியினர் புலிகளைப் பயங்கரவாதிகள் என்று கூறுவது வேடிக்கையானது. பட்டினியால் வாடும் மக்களுக்கு உணவு கொடுக்க வேண்டாம் என்று உயர் நீதிமன்றத்தில் தடை உத்தரவு பெற்றுச் சாதனை படைத்துவிட்டனர் - என்று சாடினர்.

டாக்டர் ராஜித சேனாரத்ன மற்றும் ஒரு விடயத்தையும் சுட்டிக் காட்டினார்.

"ஜே.வி.பி.யினர் எந்த ஒரு நல்ல காரியத்தையும் செய்யவிடாமல் தடைபோடுவதில் கெட்டிக்காரர்கள்; கைதேர்ந்தவர்கள். எனவே, அவர்களின், சின்னமான அரிவாளையும், சம்மட்டியையும் நீக்கிவிட்டு கருத்தடை உறைகளை கட்சியின் சின்னமாகப் பயன்படுத்தினால் நன்றாக இருக்கும்" - என்றார். இதனால் ஜே.வி.பியினர் வாயடைத்துப் போய்விட்டனர்.

**தமிழ்க் கூட்டணியினரின் கூட்டுத் தாக்குதல்**

நேற்றுமுன்தினத் பொதுக்கட்டமைப்புத் தொடர்பான விவகாரத்தைத் தூண்டிவிட்ட ஜே.வி.பியினர் தடியைக் கொடுத்து அடியை வாக்கிக் கொண்டவர்கள் போலானார்கள். கூட்டணி உறுப்பினர்களின் இரா . சம்பந்தன், என். ரவிராஜ், அரியநேத்திரன் ஆகியோருடன் சிவாஜிலிங்கம் எம்.பியும் கூட்டாகச்சேர்ந்து ஜே.வி.பி.யினருக்குச் சாட்டையடி கொடுத்தனர்.

"இருபது வருடயுத்தம், ஆழிப்பேரலை அனர்த்தம் என்பனவற்றால் பாதிக்கப்பட்ட எமது மக்கள் விடிவுக்காக ஏங்கி நிற்கின்றனர். பொதுக்கட்டமைப்பின் மூலம் நிவாரணம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புகளும் ஏமாற்றமாகிவிட்டன.

"1956 முதல் 1970 வரை நடைபெற்ற தேர்தல்களின்போது வடக்கு - கிழக்கு மக்கள் மாறிமாறிவந்த அரசுகளையே ஆதரித்தனர். ஆனால், எல்லா வகையிலும் ஏமாற்றப்பட்டனர். இதனால்தான் 1976 இல் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை எடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இப்பொழுதும் காலம் கடந்துவிடவில்லை. இரண்டு பிரதான கட்சிகளும் இணைந்து நேர்மையான ஒரு தீர்வுக்கு வரவேண்டும். இல்லாவிட்டால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவே முடியாது" - என கூட்டமைப்பின் மூத்த உறுப்பினரான இரா. சம்பந்தன் அமைதியான முறையில் பேசினார்.

ஆனால், இளையவரான சிவாஜிலிங்கம் எம்.பி அதிரடித்தாக்குதலை மேற்கொண்டார்.

" ஒரே கட்டிலில் ஒன்றாகத் தேனிலவை அனுபவித்துக்கொண்டிருந்த ஜே.வி.பி.யினரும், ஸ்ரீ.ல.சுகட்சியினரும் பொதுக்கட்டமைப்பு என்றவுடன் திடுக்கிட்டு எழுந்து ஒருவர் மீது ஒருவர் சேற்றை வாரி வீசிக்கொள்கின்றனர்" எனக்கிண்டல் அடித்தார்அவர்.

"ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்ற ஒரே நோக்குடனேயே ஒன்று சேர்ந்த ஜே.வி.பியும், ஸ்ரீல சு.கட்சியும் ஏற்படுத்திய கூட்டு அரசு பொதுக்கட்டமைப்பால் சிதறி


நாடாளுமன்றிலிருந்து.....

வெடித்துவிட்டது.

"ஆழிப்பேரலை ஏற்பட்டபோது நாட்டில் தமிழர், சிங்களவர், முஸ்லிம் என்ற பேதம் ஒழிந்திருந்தது. இனவாதம் பேசும் ஜே.வி.பியினர் கூடப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு வந்து உதவிகளை வழங்கினர்.

"ஆனால், அப்பிரதேச மக்களுக்கு உறுதியான ஒரு மீள்கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கான பொதுக்கட்டமைப்பை உருவாக்க முற்பட்டபோது வேதாளம் முருங்க மரத்தில் ஏறியது போல் தமது சுயரூபத்தை அவர்கள் காட்டிவிட்டனர். பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டதன் மூலம் தமது பிரதேசத்திற்கு ஏதாவது நன்மை கிட்டும் என்ற தமிழ் மக்களின் நம்பிக்கை ஏமாற்றத்திலேயே முடிந்தது.

"ஜாதிக ஹெல உறுமயவைச் சேர்ந்த தேரர், தமிழர்கள் இந்த நாட்டில் வாழ்ந்தவர்கள் அல்லர் என்று கூறினார். இது சரித்திரம் தெரியாதவர்களின் உளறல். இலங்கையை, காலம் காலமாக ஆண்டவர்கள் தமிழ் மன்னர்கள் தான். இதற்குச் சரித்திரச் சான்றுகள் நிறைய இருக்கின்றன. கண்டியில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் இந்த நாட்டிற்கே அபகீர்த்தியைத் தேடித் தந்த தேரர் நின்று உரையாற்றிய கண்டி மண்ணை ஆண்டவரான கண்ணுசாமி என்ற இரண்டாவது இராஜசிங்கனும் தமிழ் மன்னன்தான் என்பதை இந்தத் தேரருக்கு இடித்துரைக்க விரும்புகின்றோம். வரலாற்றை மாற்றி எழுத வேண்டாம்.

"நாம் தனி நாட்டைக் கேட்கும் நிலைக்கு எம்மைத் தள்ளியவை இந்த சிங்கள அரசுகள் தான். நாடு சுதந்திரம் அடைந்தபின் பத்து லட்சம் இந்திய மக்களின் பிரஜா உரிமையைப் பறித்தது ஐ.தே.க. அரசு. பின்னர் தனிச்சிங்களச் சட்டம் என பண்டாரநாயக்கா அரசு பாதிப்பை ஏற்படுத்தியது. இதோடு நின்றுவிடவில்லை. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம், அரச படையினரின் அடக்கு முறைகள் எல்லாம் தான் எம்மை தனிநாடு கேட்கவைத்தன.

" 1883 ஆம் ஆண்டில் தமிழர்களுக்கு எதிரான இன வன்முறையின் போது தமிழர்களைக் கப்பல்களிலும், விமானங்களிலும் ஏற்றி யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி, இது தான் தமிழர்களின் தாயகம் என்று கூறிவைத்தவையே இந்த சிங்கள அரசுகள்தான். இப்பொழுது நாங்கள் அதையே திருப்பிச் சொன்னால் துள்ளிப்பாய்கின்றீர்கள்.

"நாங்கள் பலம் இழந்த நிலையில் உங்களுடன் சமாதானம் பேசவரவில்லை. ஐக்கிய இலங்கைக்குள் ஒன்றுபட்டுச் சுதந்திரமாக வாழ விரும்பினோம். ஆனால், உங்களிடம் யாசகம் கேட்கவில்லை.

"எமது உரிமைகளை எப்படிப் பெறுவது என்பது எங்களுக்குத் தெரியும். நாடு ஐக்கியப்படுவதை ஜே.வி.பி.யினரும், ஜாதிக ஹெல உறுமயவினரும் விரும்பவில்லை. அவர்களுடைய கைங்கரியத்தால் நாம் தமிழீழம் அமைக்க வழி ஏற்படும். இவ்வாறு ஒரு தமிழீழ இராச்சியம் ஏற்படுத்தப்பட்டால் அந்த நாடாளுமன்றத்தின் முன் ஜே.வி.பியினருக்கும், ஜாதிக ஹெல உறுமயவுக்கும் தங்கத்தால் சிலை வைத்துக் கௌரவிப்போம் "- என்று சிவாஜிலிங்கம் காட்டமாகக் கூறினார்.

**மும்முனைத் தாக்குதல்**

வழமையாக நாடாளுமன்றத்தில் ஒரு விவகாரம் ஏற்பட்டால் ஜே.வி.பி. யினருக்கு ஆதரவாக சில இனவாத உறுப்பினர்கள் செயற்படுவது வழமை.

ஆனால், நேற்றுமுன்தினம் ஐ.தே.க. ,ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என மூன்று தரப்பினரின் தாக்குதல்களையும் சமாளிக்க வேண்டிய இக்கட்டான நிலை ஜே.வி.பி.யினருக்கு ஏற்பட்டது. இதனால் ஜே.வி.பி.யினர் திக்குமுக்காடும் நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

(க)

## தமிழர் போருக்குத் தயார்; சமாதானத்துக்கும் தயார்!

### இப்படிச் சொல்கிறார் அரியநேத்திரன் எம்.பி.

தமிழர்கள் போருக்குத் தயார்; அதேபோன்று சமாதானத்துக்கும் தயாராகவே உள்ளனர். எதற்கும் தயாரான நிலையிலேயே தமிழர் தமது சுய பலத்துடன் அரசியல் கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

புலிகளுடன் அரசு செய்துகொண்ட பொதுக்கட்டமைப்பு தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழர் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

தொடர்ந்தும் தமிழர்கள் சிங்கள தேசத்திடம் ஏமாறுவதற்குத் தயாராக இல்லை. எமது தலைவர் பிரபாகரன் இலங்கை அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட போது, போதிய இராணுவப் பலத்துடன் இருந்துகொண்டே தமிழர்கள் சமாதானத்துக்கு இணங்கினர்.

தமிழர்களாகிய எமது கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு கிட்டாவிட்டால் தனியான ஒரு நாட்டை அமைத்தே தீருவோம்.

அதைச் சிங்கள தேசத்தால் ஒரு போதும் தடுத்து நிறுத்தமுடியாது. புலிகள் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் காரணமாகவே தென்பகுதியில் சிங்களவர்கள் நிம்மதியாக வாழ்கின்றனர் என்பதை இனவாதிகள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

இலங்கையில் இரண்டு நாடுகள் உண்டு என்பதை சர்வதேசம் உணர்ந்துள்ளது. அதை இலங்கை அரசும் ஏற்றுக்கொண்டுள்ளது. இந்த உண்மை நிலையை யாராலும் மூடி மறைக்க முடியாது. தமிழருக்கு உரிய உரிமைகளை வழங்க மறுத்தால்அதுபாரியபின்விளைவுகளையே ஏற்படுத்தும். ஜாதிக ஹெல உறுமயவினர் புலிகள் விமானத்தளமொன்றை அமைத்திருப்பதாகக் குற்றஞ்சாட்டுகின்றனர். உரிமைகள் வழங்க மறுத்தால் இன்னும் இருபது விமானத்தளங்கள் தமிழீழத்தில் உருவாகும் என்று அவர்களை எச்சரிக்கின்றோம். - என்றார் அவர்.(க)

# மாகாணமட்ட தடகளப் போட்டி யாழ்ப்பாணத்தில் இன்று ஆரம்பம்

## 500 வீர, வீராங்கனைகள் பங்கேற்பர்

யாழ்ப்பாணம்,ஓக.13

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டு அமைச்சின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டுவரும் மாகாண மட்டத் தடகள விள்ளையாட்டுப் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகின்றன.

இந்தப் போட்டியில் கலந்துகொள்வதற்காக 8 மாவட்டங்களில் 500 இற்கும் மேற்பட்ட வீர, வீராங்கனைகள் யாழ்ப்பாணத்துக்கு வந்து கூடியுள்ளனர்.

எட்டு மாகாணங்களிலும் பிரதேச செயலக, மாவட்ட மட்டங்களில் நடந்த போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற வீர, வீராங்கனைகளே இந்தப் போட்டியில் பங்கேற்கின்றனர். இந்தப் போட்டிகள் நாளையும் தொடர்ந்து நடைபெறவிருக்கின்றன.

இன்றைய நிகழ்விற்கு யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கின்றார்.

நாளைய நிகழ்வுக்கு யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ். மோகனதாஸ் பிரதம விருந்தினராகவும் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா சிறப்புவிருந்தினராகவும் கலந்துகொள்வர்.

(3-190-203)

## கூடைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.13

கே.ஸி.ஸி. வெற்றிக்கிண்ணத்திற்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று சனிக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட ஆடுகளத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

- காலை 7 மணி - பற்றீசியன்ஸ் வி.க. எதிர் ஜொனியன்ஸ் (கறுப்பு) வி.க.
- காலை 8.30 மணி - சென்றலைட்ஸ் வி.க. (நீலம்) எதிர் ஒல்கோல்ஸ் வி.க.
- மாலை 5 மணி:- உடுவில் வி.க. எதிர் கே.ஸி.ஸி.வி.க.

(3-190)



திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்தின் அபிராமி முன்பள்ளியின் விளையாட்டுவிழா அண்மையில் நடைபெற்றது. இந்த விளையாட்டு விழாவின் இடைவேளையின்போது இடம் பெற்ற மாணவர்களின் உடற்பயிற்சிக் கண்காட்சியைப் படத்தில் காணலாம். (8)

## பவளவிழாவை ஒட்டி விளையாட்டுப் போட்டி

வலி.தெற்கு,ஓக.13

இணுவில் மத்தியகல்லூரின்பவளவிழாவையொட்டி விளையாட்டுப் போட்டிகள் ஏற்பாடாகியுள்ளன.

கயிறு இழுத்தல் போட்டி, மென்பந்து கிரிக்கட்போட்டி, கரபந்தாட்டப் போட்டி, உதைபந்தாட்டப் போட்டி போன்ற பல போட்டிகளை நடத்த விளையாட்டுக் குழுவினர் தீர்மானித்திருப்பதாக அதன் தலைவர் செ.இலகுநாதன் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் உள்ள இக் கல்லூரியின் பழைய மாணவர்களுக்கும், இங்குள்ள பழைய மாணவர்களுக்குமிடையே போட்டிகள் நடைபெறும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளவிரும்புவோர் தமது விவரங்களை இம்மாதம் 20ஆம் திகதிக்குமுன் அறிவிக்குமாறு விளையாட்டுக்குழுத் தலைவர் செ.இலகுநாதன் அறிவித்துள்ளார்.

(3-152)

விளையாட்டு

## மாட்டுவண்டில் சவாரிப் போட்டி

யாழ்ப்பாணம்,ஓக.13

மூளாய் ஞானவைரவர் ஆலயத்தினர் நடத்தும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பொன்னாலை சவாரித் திடலில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் யாழ்ப்பாணம், வன்னிக் காளைகள் பங்குபற்றவுள்ளன. (202)

### கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

## உடுவில், சென்றலைட்ஸ் அணிகள் சம்பியன்களாகத் தெரிவாகின

தமிழீழ மாணவர் அமைப்பு, தமிழீழ விளையாட்டுத்துறை ஆகியவற்றுடன் இணைந்து யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்திய கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பெண்கள் பிரிவில் உடுவில் வி.கவும் ஆண்கள் பிரிவில் சென்றலைட்ஸ் வி.கவும் வெற்றிபெற்றுச் சம்பியன்களாகின.

யாழ். இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட ஆடுகளத்தில் மின்னொளியில் கடந்த செவ்வாய்க்கிழமை இறுதியாட்டங்கள் இடம்பெற்றன.

முதலில் நடைபெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் கொக்குவில் மத்திய சன சமூக நிலைய வி.க.அணியை எதிர்த்து உடுவில் வி.க.அணி மோதியது.

உடுவில் வி.க.அணி 49.42 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்றது.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் சென்றலைட்ஸ் வி.க. அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் வி.க. அணி மோதியது.

சென்றலைட்ஸ் வி.க.அணி 71.58 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

பெண்கள் பிரிவில் சிறந்த ஆட்டநாயகி உடுவில் வி.கவைச்சேர்ந்த சிந்துபாலினியும் ஆண்கள் பிரிவில் சிறந்த ஆட்டநாயகன் சென்றலைட்ஸ் வி.கவைச்சேர்ந்த பிரசன்னாவும் தெரிவுசெய்யப்பட்டனர். இறுதியாட்ட நிகழ்விற்குப் பிரதமவிருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ், சிறப்பு விருந்தினர்களாக தமிழீழ விளையாட்டுத்துறை இணைப்பாளர் இன்பன், யாழ்.மாவட்ட துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் கண்ணன், யாழ். மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் மாதுளன் ஆகியோர் கலந்துகொண்டனர்.(3-190)

# தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் வெற்றிக்கு ஊக்கம் அளிக்கும்

## தேசிய வலைபந்தாட்ட அணிக்குத் தெரிவான யாழ்.வீராங்கனை

**தேசிய வலைபந்தாட்ட அணிக்கு யாழ். வீராங்கனை பிருந்தா சோமசுந்தரம் தெரிவு செய்யப்பட்டுள்ளார். சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி உயர்தர வகுப்பு மாணவியான இவர் உதயனுக்கு அளித்த செவ்வி இது.**





செவ்வி: கவிதரன்

குருநாகலில் நடந்த ஆட்டத்தில் பங்குபற்றும் போது...

★ *கேள்வி:* பிருந்தா உம்மைப்பற்றி...

• *பதில்:* நான் ஆரம்பக்கல்வியை சண்டிலிப்பாய் வடக்குத் தமிழ் கலவன் பாடசாலையில் கற்றேன். பின்னர் உயர்தரக்கல்விவரை சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியில் கற்று இந்த ஆண்டு நடைபெற்ற ஏ.எல்.பரீட்சை யில் வர்த்தகத்துறையில் தோற்றிப் பெறுபேற்றுக்காகக் காத்திருக்கிறேன்.

★ *கேள்வி:* வலைபந்தாட்டப் போட்டியில் எப்படி பிரவேசித்தீர்கள்?

• *பதில்:* சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் கற்கும் போது என்னுடைய பதினைந்தாவது வயதில் வலைப்பந்தாட்ட அணியில் இணைந்துகொண்டேன். முதன் முதலாக நான் அங்கம் வகித்த அணி மாவட்ட, மாகாணம் என்றெல்லாம் களமாடி தேசியமட்டத்திற்குத் தெரிவாகியது. அந்த வெற்றி எனக்குப் பெரும் ஊக்கத்தையும், நம்பிக்கையையும் ஊட்டியது. அதன் பின்னர் வலைபந்தாட்டத்தில் தொடர்ந்து விளையாடவேண்டும் என்ற ஆதங்கம் என்னுள் பரிணமித்தது. அதன் பயனாக - தொடர்ச்சியாக வலைபந்தாட்ட அணியில் விளையாடினேன். சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி அணி தேசிய மட்டத்திற்குத் தெரிவாகியது. அணியில் நான் சூட்டாராகத்தான் (இலக்கு எய்பவர்) அங்கம் வகிப்பேன்.

2002 ஆம் ஆண்டு யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட அணிக்குத் தெரிவாகி வடக்கு- கிழக்கு மாகாண அணிக்கும் தெரிவாகினேன். பின்னர் மீண்டும் இந்த ஆண்டு (2005) அந்தச்சந்தர்ப்பம் கிடைத்தது. ஆனால் அச்சமயம் ஏ.எல். பரீட்சை நடந்து கொண்டிருந்ததனால் அது நழுவிப் போய் விட்டது. இதைவிட கழகங்களுக்கிடையிலான வலைபந்தாட்ட அணியில் இணைந்து விளையாடியுள்ளேன்.

★ *கேள்வி:* தாயக வலைபந்தாட்ட அணியில் அங்கம் வகித்துள்ளீர்களே..... அதுபற்றி....?

• *பதில்:* தாயக வலைபந்தாட்ட அணிக்கு எமது கல்லூரியில் இருந்த நானும், சங்கீதா என்ற வீராங்கனையும் தெரிவுசெய்யப்பட்டோம். லண்டன் மாநகரில் 2003 ஆம் ஆண்டு தாயக வலைபந்தாட்ட அணியில் விளையாடினோம். 18ற்கு மேற்பட்ட சுற்றுப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றி வாகை சூடினோம்.

அத்துடன் லண்டனில் உள்ள கறுப்பு இன, வெள்ளை இன, வீர்களுடனும் மோதி வெற்றி வாகைசூடினோம்.

★ *கேள்வி:* உங்களுடைய இத்தகைய வெற்றிகளுக்குத் தூண்டுதலாக யாராவது இருந்துள்ளார்களா?

• *பதில்:* உண்மையிலே நான் வலைபந்தாட்ட அணியில் அங்கம் வகித்துத் தாயக வலைபந்தாட்ட அணியில் இணைந்து லண்டன் மாநகரிலும் தற்போது இலங்கை தேசிய வலைபந்தாட்ட அணியில் இணைந்து 2006 ஆம் ஆண்டு சிங்கப்பூரில் நடைபெறவுள்ள போட்டியில் பங்குபற்ற தெரிவு செய்யப்பட்டும் உள்ளேன். அதற்குக் காரணமாக இருப்பவர் எமது கல்லூரியின் முன்னாள் அதிபரும் தற்போது மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபராகவும் உள்ள எஸ். சிவநேசஸ்வரன் அவர்கள்தான் என்னுடைய வெற்றிக்குக் காரணம்.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி வலைபந்தாட்ட அணி மோதவுள்ளதென்றால் நகரப்பகுதிகளிலுள்ள பிரபல கல்லூரிகளின் அணிகள்கூடப் பயப்படும் அளவுக்கு ஒரு காத்திரமான வலைபந்தாட்ட அணியை உருவாக்கியவரும் அவரே.

அத்துடன் எமது கல்லூரியின் பயிற்றுவிப்பாளர் செல்வி சுபத்திரா ஆசிரியர் மற்றும் வலைபந்தாட்டப் பயிற்றுநர் திருமதி ரூபசிங்க, ஆசிரியப் பெருந்தகைகள் - இவர்களோடு என்னுடைய தந்தையும் எனக்குப் பெரியளவிலான ஊக்கம் தந்து ஒத்துழைப்பு நல்கியிருக்கிறார்.

★ *கேள்வி:* குருநாகலில் விளையாடும் வாய்ப்புக்கிடைத்தது. அத்துடன் 2006 ஆம் ஆண்டு சிங்கப்பூரில் நடைபெறும் தேசிய வலைபந்தாட்ட அணியில் விளையாடும் வாய்ப்பும் கிடைத்துள்ளதே. இது குறித்து...?


• *பதில்:* குருநாகலில் நடைபெற்ற போட்டியில் பங்குபற்றியதில் பெருமகிழ்ச்சியடைந்தேன். அதில் இன்னொரு விடயமென்னவென்றால், அந்த அணியில் என்னுடைய கூடப்பிறந்த சகோதரி கௌசியும் விளையாடியுள்ளார். இது எனக்கு இன்னும் மென்மேலும் மகிழ்ச்சியைத்தருகிறது.

2006ஆம் ஆண்டு சிங்கப்பூரில் நடைபெறவுள்ள போட்டியில் பங்குபற்றும் வாய்ப்பும் கிடைத்துள்ளது. அதற்கான பயிற்சிகள் கொழும்பில் நடைபெறவுள்ளன. அதில் திறம்பட பயிற்சிகளை எடுத்து நிச்சயம் (12ஆம் பக்கம் பார்க்க)



தேசியத் தலைவர் வே.பிரபாகரனிடம் விருதுபெறும்போது....

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



## திருமதி பாக்கியம் இராசேந்திரம்

மண்ணில் மலர்ந்தது

**29.07.1939**

விண்ணில் மறைந்தது

**14.07.2005**

அன்புடனும் பாசத்துடனும் நேசத்துடனும் வாழ்ந்தீர்
ஆலமரமாய் நீரிருந்து மக்கள் எமைக்காத்தீர்
இன்ப வாழ்வில் எங்களுடன் ஏற்றமுடன் திகழ்ந்தீர்
ஈசன் பாதங்களில் இளைப்பாறச் சென்றீரோ?
துன்ப சாகரத்தில் எமை மூழ்கடித்து விட்டீரே
தூய அன்னையே எம் அன்புத் தெய்வமே !
என்றும் உங்கள் நினைவுடன் இங்கு நாம் வாழ்கிறோம்
ஏன் எமைப் பிரிந்தாய் ? பெறுகவே நற்சாந்தி !

இன்று (13.08.2005) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடை பெறுகின்ற வீட்டுக்கிருத்தியத்திலும் ஆத்ம சாந்திப் பிரார்த் தனையிலும் கலந்து கொள்வதோடு மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

830, கே.கே.எஸ். வீதி,
தட்டாதெரு, யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்.

(38726)(51)

# இடதுசாரி முன்னணியும் வேட்பாளரை நிறுத்தும்

லங்காதீப

கொழும்பு,ஓக.13

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் புதிய இடதுசாரி முன்னணிக் கட்சியும் தனது சார்பாக வேட்பாளரை நிறுத்துவதென முடிவு செய்துள்ளது.

புதிய இடதுசாரி முன்னணி கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன இது குறித்துத் தகவல் வெளியிடுகையில், எதிர் வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமது கட்சி சார்பான வேட்பாளராக லீனஸ் ஜயதிலகவை நிறுத்தவிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இரு பெரும் கட்சிகளின் வேட்பாளர்களான மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் கொள்கைகள் ஒரே வகையானவையே.அதனாலேயே புதிய இடதுசாரி முன்னணி தனித்துப் போட்டியிட முடிவு செய்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

(ஐ-205)

# 'ரொனாடோ' காற்றின் தாக்கம்; தற்காப்பு வழிமுறைகள் அறிவிப்பு

லங்காதீப

கொழும்பு,ஓக.13

'ரொனாடோ' காற்று உருவாகும் சந்தர்ப்பமொன்றின் போது மின்சாரத்தை நிறுத்தி காற்றின் தாக்கத்தைத் தடுக்கும் பாதுகாப்பான மறைவிடமொன்றில் தங்கியிருக்குமாறு சிறீலங்கா, பசுமை அமைப்பின் விபத்து முகாமைத்துவம் மற்றும் தகவல் செயலாக்கப் பிரிவு பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

இதுவரை இலங்கையின் சில மாவட்டங்களில் 'ரொனாடோ' காற்று பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. அத்தகைய சந்தர்ப்பங்களில் அறியாமை காரணமாக அபாயங்கள் அதிகரித்து வருவதாகத் தெரிவித்துள்ள இந்த அமைப்பு, உயிராபத்து மற்றும் உடைமைகளுக்கு ஏற்படும் பாதிப்புக்களைக் குறைத்துக் கொள்ள சில ஆலோசனைகளையும் முன்வைத்துள்ளது.

மேகங்கள் அளவை மீறி விருத்தியடைவதன் காரணமாக இக்காற்று சூல் கொள்வதோடு அத்தகைய சந்தர்ப்பமொன்றின்போது குறிப்பிட்ட பிரதேசத்தின் ஒரு பகுதி கருமை நிறமாகவும் ஏனைய பகுதி பிரகாசமாகவும் தோற்றமளிக்குமெனவும், அத்தகைய நிலைப்பாடொன்று பிரதேசமொன்றில் காணப்படுமிடத்து, வீடுகளில் தங்கியுள்ள மக்கள் சகலரும் ஒருமித்த தீர்மானமொன்றுக்கு அமைய செயற்படுவது முக்கியமானது.

பொதுவாக வீட்டின் கூரைகள் தொடர்பாக எச்சரிக்கையோடு இருக்குமாறும் கிடுகு, தார்த்தகடுகள், தகரங்கள், அஸ்பெஸ்ரஸ் தகடுகளால் வேயப்பட்டுள்ள கூரைகள் தொடர்பாக மிகுந்த எச்சரிக்கையோடு இருக்கவேண்டும்.

மேலும் கொங்கிறீற் மற்றும் தடிப்பான சிமெந்துத் தகடுகள் கொண்ட கூரைகள் குறைவான பாதிப்புக்களையே ஏற்படுத்தும். வீடுகளின் அருகில் உள்ள மின்கம்பிகள், மரங்கள் தொடர்பாக எச்சரிக்கையோடு இருக்க வேண்டும். 'ரொனாடோ' காற்றாக இருப்பின் தரையோடு படுத்திருப்பது மிகுந்த பாதுகாப்பானது. அறியாமை காரணமாக ஓடுவது ஆபத்தானது.

இவ்வாறு அந்த அமைப்பு அறிவுறுத்தியுள்ளது.

இதனிடையே எதிர்காலத்தில் இலங்கையில் 'ரொனாடோ' காற்று தாக்கும் அறிகுறிகள் காணப்படுவதாகவும் காலநிலை அவதான நிலையம் அறிவுறுத்தியுள்ளது.

(ஐ-206)

## உலகவங்கியின் சிபாரிசுக்கு அமைவாக

# பாடசாலை நிர்வாகங்கள் பெற்றோர்கள் வசமாகும்?

ராவய

கொழும்பு,ஓக13

பாடசாலைகளின் கல்வி முறையை பெற்றோர்கள் அடங்கிய பாடசாலைகள் அபிவிருத்திச் சபை மூலம் தனியார் மயப்படுத்தும் திட்டம் ஒன்று உலகவங்கியின் சிபாரிசுக்கு அமைய நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

கட்டுப்பாடுகள் அற்ற சுதந்திரமான கல்வி முறைமையை நீக்கி, பாடசாலைகளின் கல்வி முறையைத் தனியார் மயப்படுத்தும் திட்டம் ஒன்று ஏற்கனவே பாடசாலைகள் அபிவிருத்தி சபை மூலம் முன்வைக்கப்பட்டிருந்தது.

அத்திட்டம் உலக வங்கியினால் மேற்கொள்ளப்படதாகக் கருதப்பட்டு எழுந்த எதிர்ப்புக்களை அடுத்துப் பின்னர் கைவிடப்பட்டிருந்தது. ஆனால், பாடசாலைகள் அபிவிருத்திச் சபையினால் முன்வைக்கப்பட்டிருந்த சட்ட மூலத்தின் சிபாரிசுகளின் ஊடாகக் கொண்டுவரப்பட்டிருந்த அத்திட்டத்தை எதுவித மாற்றங்களுக்கும் உட்படுத்தாது சுற்றறிக்கை ஒன்றின் ஊடாக மீண்டும் நடைமுறைப்படுத்த கல்வியமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

கல்வியமைச்சின் செயலாளர் தாரா டி மெல் கையெழுத்திட்டுள்ள - 2005 ஜூன் 2ஆம் திகதி குறிப்பிடப்பட்டுள்ள -2005/24 என்ற இலக்கமிடப்பட்ட - சுற்றறிக்கைக்கு அமைய, 1993இல் 8ஐக் கொண்டுள்ள பாடசாலைகள் அபிவிருத்தி சபையின் சட்ட மூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சிபாரிசுகள் நடைமுறைக்கு வந்துள்ளன என்று தெரிவித்துள்ள இலங்கை ஆசிரியர் சங்கம், அச் சிபாரிசுகளில், பாடசாலைகளின் மீள் நிர்மாணச் செலவினங்களாகக் கருதப்படும் கட்டடங்களைப் புதுப்பித்தல், கட்டுமானப் பணிகள், தளபாடக் கொள்முதல் போன்ற செலவீனங்கள் தொடர்பாக ஒவ்வொரு பாடசாலைகளும் தத்தமக்குரிய நிதியமொன்றைச் சேகரித்துக்கொள்ளவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

2006ஆம் ஆண்டு முதல் 2010ஆம் ஆண்டு வரையில் இச்செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவது தொடர்பாக உலகவங்கி 60 மில்லியன் அமெரிக்க டொலர்களை சிறிலங்கா அரசுக்கு வழங்கத் தீர்மானித்துள்ளது. அந்த நிதியிலிருந்து ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் ஒதுக்கப்படும் தொகையை விடவும் மேலதிக நிதிய மொன்றைச் சகல பாடசாலைகளும் சேகரித்துக் கொள்ளவேண்டும். அந்நிதிக்கு பாடசாலைகளில் பயிலும் மாணவர்களது பெற்றோர் மற்றும் நலன்விரும்பிகளிடமிருந்தும் அன்பளிப்புக்களைப் பெற்றுக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பாடசாலைக் காணிகள், கட்டடங்கள் மற்றும் உபகரணங்களை பாவனைக்கு வழங்குவதன் மூலமும் பொருள்களை விற்பனை செய்வதன் மூலமும், ஏனைய வளங்கள் மூலமாகவும் பாடசாலை அபிவிருத்திக் குழுக்கள் மூலமாகவும் பாடசாலைகள் தொடர்பாக நிதியைச் சேகரிக்க வேண்டியுள்ளது.

இது தொடர்பான ஆரம்ப வழிகாட்டல் செயற்பாடுகள் பாடசாலைகள் அபிவிருத்திச் சபை மூலம் மேற்கொள்ளப்படுமென சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமையத் தெரிவுசெய்யப்பட்டுள்ள 8 மாகாணங்களிலுமுள்ள குறிப்பிட்ட ஒரு கல்விவலயத்தில் அச்செயற்றிட்டம் முன்னெடுத்துச் செல்லப்படும். ஏனைய மாகாணங்களிலுள்ள தேசிய பாடசாலைகள், மத்திய மகா வித்தியாலயங்கள், நவோதய பாடசாலைகளிலும் இச் செயற்பாடுகள் முன்னெடுத்துச் செல்லப்படும்.

தெரிவு செய்யப்பட்டுள்ள மாகாணங்கள் பின்வருமாறு:-

கொழும்பு, யாழ்ப்பாணம் வத்தேகமை, தம்புத் தேகமை, கேகாலை, அப்பலாங்கொடை, புத்தளம் வெல்லவாய.

எதிர்வரும் 2006ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் பாடசாலை அபிவிருத்திச் சபையின் இந்த யோசனைகள் நடைமுறைக்கு வரவுள்ளதால் 2005 ஜூலை மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலை அபிவிருத்திக் குழுக்கள் மற்றும் பாடசாலை முகாமைத்துவக் குழுக்கள் நிறுவப்பட வேண்டியிருந்தது. இக்குழுக்களில் பெற்றோர்கள், பழைய மாணவர்கள் மற்றும் ஆசிரியர் சபைகளின் பிரதிநிதிகளும் அங்கத்துவம் பெறுவர்.

(ஐ-206)




# தேர்தல் பிரசாரத்தின் போது எவர் மீதும் சேறு பூசமாட்டேன்!

லங்காதீப

கொழும்பு,ஓக13

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின் போது எவர் மீதும் சேறு பூசும் வகையில் நடந்து கொள்ளமாட்டேன்.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இப்படிக் கூறியிருக்கின்றார்.

கடந்து வந்துள்ள கடந்த கால அரசியல் வரலாற்றைப் போன்றே, எதிர்கொள்ளவிருக்கும் தேர்தல் பிரசார நடவடிக்கைகளின் போதும் எவரது நடத்தை பற்றியும் விமர்சிக்கப்படாத, எவர் மீதும் சேறு பூசாத வகையில் நடு நிலையான அரசியல் கோட்பாட்டைக் கைக்கொள்ளவுள்ளேன்.

நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்சர், எதிரணித் தலைவர் மற்றும் பிரதமர் என்ற வகையில் கடந்த 35 ஆண்டுகளாகப் பதவிகளை வகித்து வந்துள்ள அரசியல் வரலாற்றில் நாட்டின் சிறப்பான எதிர்காலம் தொடர்பான அபிலாஷைகளையே கொண்டிருந்தேன்.



ஜனாதிபதியின் தலையீடு காரணமாக கட்சியின் மத்திய செயற்குழுவினால் ஜனாதிபதி வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளமை எனது எதிர்பார்ப்புக்களை முன்னெடுத்துச் செல்வதற்கு உறுதுணை புரிந்துள்ளது- எனவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நாட்டின் சமாதானத்தை விரும்பும்- தேசிய பொருளாதாரத்தைப் பலப்படுத்த விரும்பும்- மற்றும் தேசிய கலாசாரத்தைக் கௌரவிக்க விரும்பும் சகலரும் தமது செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பிரதமர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(ஐ-206)

# நாடு முழுவதும் தேசியப் பாடசாலைகளில் மூவாயிரம் ஆசிரியர் வெற்றிடங்கள்

திவயின

கொழும்பு,ஓக.13

நாட்டில் தேசியப் பாடசாலைகளில் இன்னமும் சுமார் 3ஆயிரம் ஆசிரியர்களுக்கான பதவி வெற்றிடங்கள் நிலவுகின்றன.

இவற்றுள் பெரும்பாலான பதவி வெற்றிடங்கள், தமிழ்மொழிமூலம் பயிலும் மாணவர்களுக்கு சிங்களம் கற்பித் தல் தொடர்பாகவும், சிங்கள மொழிமூலம் பயிலும் மாணவர்களுக்குத் தமிழ்மொழியைக் கற்பித்தல் தொடர்பாகவும் காணப்படுவதாக கல்வியமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்த வெற்றிடங்களைத் தவிர, நவோதய பாடசாலைகளில் நிலவும் சகல ஆசிரிய வெற்றிடங்களுக்கும் பட்டதாரிகளை நியமிக்க கல்வியமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

மேற்படி பாடசாலைகளில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்கள் உள்ளிட்ட சகல குறைபாடுகளையும் அடுத்த ஆண்டுக்கு முன்னர் நீக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கல்வியமைச்சுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். அத்தோடு, 324 தேசியப் பாடசாலைகளும் 394 நவோதய பாடசாலைகளும் அபிவிருத்தி செய்யப்பட்ட பின்னர் அவற்றில் ஒரு தொகுதி பாடசாலைகளைத் தெரிவுசெய்து அவற்றை அபிவிருத்தி செய்யுமாறும் கல்வியமைச்சுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார். (ஐ-206)

# அக்குரஸ்ஸ நகர வங்கியில் தந்திரமாகப் பணம் கொள்ளை!

லங்காதீப

கொழும்பு,ஓக.13

கடந்த 8ஆம் திகதி நண்பகல் 1.30 மணியளவில் அக்குரஸ்ஸ நகரிலுள்ள தனியார் வங்கி ஒன்றுக்குள் நுழைந்த நபர் ஒருவர் புதிய தந்திரம் ஒன்றைக் கையாண்டு, எவ்விதமான குழப்பத்தையும் விளைவிக்காது சுமார் 40 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளார்.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

வங்கியின் காசாளரின் கருமபீடம் முன் சென்ற அந்நபர், வங்கியிலிருந்து பணத்தை மீளப் பெறுவதற்குப் பயன்படுத்தப்படும் இரு பத்திரங்களைப் பெற்று, அப்பத்திரங்களோடு தட்டச்சு இயந்திரம் மூலம் ஆங்கிலத்தில் அச்சேற்றப்பட்டிருந்த கடிதம் ஒன்றையும் காசாளரிடம் சமர்ப்பித்துள்ளார்.

அக்கடிதத்தில், தம்மோடு குழுவொன்று வந்துள்ளதால், சத்தமிட்டு குழப்பம் விளைவிக்கவோ, பொலீஸாருக்குத் தெரியப்படுத்தவோ முயற்சிக்க வேண்டாமெனவும், மௌனமாக 40 லட்சம் ரூபாய்களைத் தம்மிடம் கையளிக்குமாறும் குறிப்பிடப்பட்டிருந்ததாகவும் தெரியவந்துள்ளது.

கொள்ளையிட வந்திருந்த அந்த நபரின் கரங்களில் இருந்த நாள்குறிப்புப் புத்தகத்தின் நடுவிலிருந்து சற்றே தெரியும் வண்ணம் சிறிது முன்னோக்கி நீண்டிருந்த கைத்துப்பாக்கியின் முனையைத் தாம் அவதானித்ததாகவும், அதையடுத்தே தமது கருமபீட மேசையின் உள்ளறையில் இருந்த பண நோட்டுக்களை அந்நபரிடம் தாம் கையளித்ததாகவும் வங்கியின் காசாளர் பொலீஸாரிடம் தெரிவித்துள்ளார்.

பணத்தைப் பெற்றுக்கொண்ட அந்நபர் அமைதியாக வங்கியிலிருந்து வெளியேறி, மோட்டார் சைக்கிள்ஒன்றின் மூலமாகத் தப்பிச் சென்றுள்ளார்.

அக்குரஸ்ஸ பொலீஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(ஐ-206)

# சிறுபோக நெல் கொள்வனவுக்கு அமைச்சுக்கு 50 கோடி ரூபா நிதி

லங்காதீப

கொழும்பு,ஓக.13

இம்முறை சிறுபோகத்தில் பெறப்படவுள்ள நெல்லைக் கொள்வனவு செய்வதற்காக விவசாய அமைச்சுக்கு 50 கோடி ரூபாவை வழங்க திறைசேரி இணக்கம் தெரிவித்துள்ளது. அதற்கமைய நாட்டரிசிக்கான நெல் ஒரு கிலோ 15 ரூபா 50 சதமாகவும் சம்பா நெல் ஒரு கிலோ 16 ரூபா 50சதமாகவும் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படவுள்ளது.

இச்செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுவது தொடர்பாக அண்மையில் விவசாய அமைச்சில் இடம்பெற்றுள்ள பேச்சுவார்த்தைகளின் போது இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. அடுத்தவாரம் முதல் மாவட்ட ரீதியில் இச்செயற்பாடுகளை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரங்களை சகல மாவட்டச் செயலாளர்களுக்கும் வழங்க விவசாய அமைச்சர் ரத்னசிறி விக்ரமநாயக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளார் என்று விவசாய அமைச்சின் செயலாளர் திஸ்ஸ வர்ணசூரிய தெரிவித்துள்ளார்.

விவசாயிகளுக்குச் சலுகைகள் வழங்கப்படுவது தொடர்பாகத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரங்கள் சகல மாவட்டச் செயலாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ-206)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 12 - 01 - 1926 | | 25 - 07 - 2004 |

### அமரர் வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்

*ஆண்டு ஒன்று மறைந்தாலும் ஆறவில்லை எம்மனம்*
*நேற்றுப் போல் உள்ளது நீங்கள் எம்மை*
*விட்டுப் பிரிந்து சென்றது*
*நீங்காத உம் பாசத்தை நினைத்து*
*ஈரவிழிகளுடன் நினைந்துருகுகின்றோம்.*
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

120, சிவன் கோயில் றோட்,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவுடன்:
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

(38677)(21.14.15.42)

உ

## ஈரவிழிகளுடன் ஈராண்டு நினைவுகள்



| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 12 - 08 - 1955 | | 05 - 08 - 2003 |

திருமதி

### தவமணிதேவி வேலாயுதம்

*(திதி: துதியை 13.08.2005)*

*காலங்கள் மறைந்தாலும்*
*என் கவலைகள் மறையாது - தவம்*
*மறைந்ததோ ஈராண்டுகள்*
*மறையாமல் இருப்பதோ உங்கள் திருமுகம்!*
*புன்முறுவல் பூத்த உங்கள் திருமுகம்*
*வாடியது ஏன்? பாசமழை பொழியும்*
*உங்கள் அன்புவார்த்தைகள்*
*மறைவது ஏன்?*
*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்*
ஓம்சாந்தி! சாந்தி! சாந்தி!

ராணிமில் ஒழுங்கை,
நெல்லியடி,
கரவெட்டி. (38752)(46-14-15-42)

கணவர் *(தேசிங்கம்)*,
பிள்ளைகள்,
பெறாமக்கள், மருமக்கள்.

## காணிப்பிரச்சினைக்கு தீர்வு காணக்கூட்டம்

யாழ்.மாவட்டத்தில் அரச காணி தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்து காணி உரிமையாளர்களுக்கு வலுவுள்ள ஆவணங்களைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பான கூட்டங்கள் பிரதேச ரீதியாக நடைபெற்று வருகின்றன.

அந்த வகையில், நாளைமறுதினம் திங்கட்கிழமை மிருசுவிலிலும் எதிர்வரும் 16 ஆம், 17 ஆம் திகதிகளில் நெடுந்தீவிலும் எதிர்வரும் 18 ஆம் திகதி நல்லூரிலும் எதிர்வரும் 19 ஆம் திகதி சிறுப்பிட்டியிலும் எதிர்வரும் 20 ஆம் திகதி சரவணையிலும் கூட்டங்கள் நடைபெறும் என்று யாழ்.மாவட்ட துரிதகாணிச் செயலணியின் உதவிக் காணி ஆணையாளர் கு.ஞானசேகரம் தெரிவித்தார். (202-204)

## வேம்படியில் பரிசளிப்புவிழா

யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரியின் மாபெல் தம்பையா மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவ்விழாவிற்குப் பிரதமவிருந்தினராக பசிபிக்ஸ்ரார் நிறுவனத்தின் பணிப்பாளர் சாந்தி வினோதன் கலந்துகொள்வார். (202)


## வீடு வாடகைக்கு

*யாழ்.கந்தர்மடத்தில் பலாலி வீதிக்கு அண்மையில் நான்கு அறைகள் கொண்ட* (attach bathroom) *கீழ் வீடு வாடகைக்கு உண்டு.*

*தொடர்பு:* **071 3056757.**

(38762)(42.14.15)

## ஆடி மாத அதிரடி மலிவு விற்பனை




OCEANICK IMPEX

192, MAIN STREET, COLOMBO 11.
Tel: 2336720, 2327168, Wholesale: 2384131, Fax; 2326961
E.mail: oceanick192@yahoo.com

## தூரிகையின் மணநாள் சேவைகள்

*மணப்பெண் ஒப்பனை
*:.பேஷியல்கள்
*ஐபுறோ ஷேப்பிங்
*திருமண கேக் அலங்கரிப்பு
*அழைப்பிதழ்கள் + அச்சிடல்
சுவரலங்காரங்கள்
கைதேர்ந்த கலைஞர்களின்
ஒன்றிணைந்த
சேவையில் பெற்றிட....



### தூரிகை

ம.ம.வி. வீதி, நெல்லியடி.
T.P.: 077 9143171

(38734)(47,14,15)

## ஸ்ரீ துர்க்கா ஜோதிட நிலையம்





இந்தியாவிலிருந்து வந்துள்ள
**ஸ்ரீ பாலகங்காதர சாஸ்திரிகள்**

கல்வி, வியாபாரம், திருமணப் பொருத்தம், கணவன்-மனைவி உறவு, அரசியல் பிரச்சினைகள், வீடு - கடை வாஸ்து, வெளிநாட்டுப் பிரயாணம், பிள்ளைகள் பாக்கியம், ஆயுள்ரேகை, எண்கணிதம், கைரேகை மூலம் அறிந்துகொள்ள நீங்கள் தொடர்புகொள்ள வேண்டியது

**அறை எண் 01, ரி.கே.ரூறிஸ்ற் இன்,**
**இல.200, பலாலி றோட், கந்தர்மடம் சந்தி** (அரசடி வீதி),
**யாழ்ப்பாணம்.** T.P.: 021 2225680, 0776627373. [38844] [14.15.42]


## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



திருமதி

### ஆறுமுகம் மகாலெட்சுமி

| விண்ணில் | மண்ணில் |
|---|---|
| 16-05-1920 | 26-08-2004 |

*ஓராண்டு மறைந்தாலும் உங்கள் நினைவு மட்டும் மறையவே மறையாதுஉங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கிறோம் அம்மா!*

அன்னாரின் இல்லத்தில் நாளை (14-08-2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகலில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**

தகவல்:-
**வல்வெட்டித்துறை.** திருமதி ஜெயராணி றஞ்சனதாஸ்

(38717)(46-

## நீங்காத நினைவலைகள்

| முதலாம் ஆண்டு | | | | இருபத்து நான்காம் ஆண்டு | | |
|---|---|---|---|---|---|---|
| மண்ணில் | | விண்ணில் | மண்ணில் | | விண்ணில் |
| 1928 - 02 - 12 |  | 2004 - 07 - 25 | 1948 - 01 - 08 |  | 1981 - 04 - 15 |

### திருமதி மகேஸ்வரி அம்பலவாணர்

தாய்க்குத் தாயாகத்
தந்தைக்குத் தந்தையுமாய்
வாய்த்த தெய்வமே! எம்
மனமும் விழிகளும்
அழுதிட அன்னை உம்
அன்பினை அடிகளைத்
தொழுது தொழுது
துயர்படு கின்றோம்!

### திருமதி அ.கமலாதேவி (B.A.Hons)

*(முன்னாள் அபிவிருத்தி உத்தியோகத்தர்)*

எமது இனம் சுற்றம்
ஏந்தி வளர்த்த
கமலா தேவியாய்க்
கல்வியில் ஓங்கிய
அக்கா! இருபத்து
நான்காண் டுகளாய்த்
துக்கச் சூளையில்
துடித்தழு கின்றோம்!

'அக்கா அகம்',
இனுவில் மேற்கு,
இனுவில்.

(38748)(42-14-15)

**மகன், தம்பி**
அ.கிருபாமூர்த்தி


Danish Red Cross

**Sri Lanka Red Cross Society**
**International Federation of Red Cross and Red Crescent Societies. Danish Red Cross Psychosocial Support Program**

**Field Officer (1)**
**Must Possess the following:**
- Degree/diploma or working experience in a field related to health and psychosocial work
- Experience with community-based approaches
- Ability to work independently and in teams
- Excellent skills in English and Tamil — Written and oral
- Strong computer skills
- Below 55 Years of age
- Experience with the Red Cross preferred
- Posses a valid motorbike drivers license

**Responsibilities include**
- Facilitation and support to project implementation at all levels
- Assist in participatory planning and project development
- Monitoring of and support to project components in the field
- Procurement and logistical support to project implementation
- Assistance to implementation of training programs

The position will be at the SLRCS Jaffna branch
Starting date: as soon as possible, with an initial contract of 1 year

Please submit application and CV to thc following address before the 18th of August 2005

**Director General**
**In care of: Chairman of SLRCS Jaffna**
**SLRCS Jaffna branch**
**73. Kandy Road Jaffna**

Only selected candidates will be contacted

(38787)

# யாழ்ப்பாண மாவட்ட பிரதேசத் திட்டமிடல் 'டியிற்றல்' முறையில் நவீனமயமாகின்றது

யாழ். மாவட்டத்தில் பிரதேச திட்டமிடலை இலகுவாக்குவதற்கு வசதியாக, 'டிஜிற்றல் மயமாவது தொடர்பாக ஜேர்மன் தொழில்நுட்பக் கூட்டுறவகம் செய்திக்குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

அச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஜி.ரி.இசற் நவீன திட்டமிடல் நுட்பங்களில் யாழ்ப்பாண மாவட்ட நிர்வாகத்துக்கு வடபகுதி புனரமைப்புத் திட்டம் ஆதரவளிக்கின்றது.

பிராந்தியத் திட்டமிடல் என்பது ஒரு சிக்கலான செயற்பாடாகும். சாதாரண நிலைமைகளிலும் கூட மாவட்ட அல்லது பிரதேச மட்டத் திட்டமிடுதலில் ஈடுபடுபவர்களுக்கு நடைமுறை மற்றும் அமைப்புரீதியான சவால்களை இது ஏற்படுத்துகின்றது. இலத்திரனியல் (டிஜிற்றல்) பூகோள தகவல் அமைப்பு ஒன்றை அறிமுகப்படுத்துவதன் மூலம் யாழ்ப்பாண மாவட்டத்தின் திட்டமிடலாளர்களுக்கு ஜேர்மன் தொழில்நுட்பக் கூட்டுறவகம் ஆதரவளிக்கின்றது. இப்புதிய கணனித் தொழில்நுட்ப அமைப்பானது திட்டமிடுதலின் தகுதியையும் திறமையும் மேம்படுத்தும். அத்தோடு, 20 வருட உள்நாட்டுப் போரினாலும் 2004 டிசெம்பரில் ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தினாலும் திட்டமிடுவதில் நிர்வாகங்களுக்கு ஏற்பட்டுள்ள பாரிய திட்டமிடல் அழுத்தத்திற்கும், பளுவுக்கும் வெற்றிகரமாக முகங்கொடுக்கவும் இது உதவுகின்றது.

தொழில்சார்பிராந்தியத் திட்டமிடல் எப்பொழுதுமே ஒரு சவாலாக இருந்து வந்துள்ளது. இது யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தவரை முற்றாகவே சிக்கலாக இருந்து வருகின்றது. 2002 பெப்ரவரியில் ஏற்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்திற்குப் பிறகு யாழ்ப்பாண மாவட்டம் வெகுகாலத்துக்கு முன்பே அபிவிருத்திக்குள்ளாகி வந்துள்ள இலங்கையின் ஏனைய பகுதிகளுடன் சேர்ந்து செயற்படத் தொடங்கியுள்ளது. 2002 ஆம் ஆண்டிற்குப் பிறகு அநேக உள்நாட்டு மற்றும் சர்வதேச முகவர் அமைப்புக்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்து ஏராளமான அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆரம்பித்தன. இருந்தபோதிலும், குறித்த திட்டங்களுக்கான வரைபடங்கள் போன்ற அடிப்படைத் திட்டத் தரவுகள் முழுமையாகவோ காலத்திற்கு உகந்தவையாகவோ இருக்கவில்லை. உதாரணமாக, 2001 ஆம் ஆண்டு நடந்த தேசிய குடிசன மதிப்பீடு போன்ற திட்டத் தரவுகள் சீராகக் கிடைக்கத்தக்கதாக இல்லை.காரணம், 2001 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட குடிசன மதிப்பீடு வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நடத்தப்பட முடியாமல் போனமையாகும்.

பிரதேச மற்றும் மாவட்ட மட்டங்களில் திட்டம் தீட்டுபவர்கள் தாம் எதிர்கொள்ளும் கஷ்டங்களைச் சமாளித்துச் செயற்பட்டு வருகிறார்கள். ஆனால், கைவசமில்லாத அல்லது 1970 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியைப் பிரதிபலிக்கும் தரவுகளுடன் ஏராளமான திட்டங்களை ஒருங்கிணைப்பது என்பது துர்லபமான காரியம். ஆழிப்பேரலைக்குப் பின்னர் நிலைமைகள் மேலும் மோசமடைந்துவிட்டன. அடுத்து வந்த மாதங்களில் ஒருங்கிணைக்க வேண்டியிருந்த சர்வதேச முகவர் அமைப்புக்களின் எண்ணிக்கை பெரும்பாலும் இரட்டிப்பாகின. அதேநிலையிலதான் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்களும் உள்ளன. உள்ளூர் திட்டமிடலாளர்களுக்கு உரிய உபகரணங்கள் போதிய அளவு கிடைக்காமையும, பெரும்பாலும் 20 வருடங்களாக நவீன திட்டமிடும் நுட்பங்கள் தொடர்பான அறிவைப் பெற்றுக்கொள்ள முடியாமல் போயிருப்பதும் நிலைமைகளை மேலும் மோசமாக்கியுள்ளன.

ஜேர்மன் அரசின் நிதியுதவியுடன் ஜி.ரி. இசற்றின் செயற்படும் திட்டத்திற்கு யாழ்ப்பாணத்திலுள்ள உள்ளூர் ஸ்தாபனங்களுடனான நீண்டகால ஒத்துழைப்புக்குச் சரித்திரம் உண்டு. மேலே குறிப்பிடப்பட்ட பிரச்சினைகளின் காரணமாக வடக்கு புனரமைப்புத் திட்டமானது ஆதார நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டுள்ளது. இது மாவட்ட மற்றும் கோட்ட மட்டங்களில் திட்டமிடல் கட்டமைப்புகளை மேம்படுத்துவதை முக்கிய குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

பூகோள தகவல் அமைப்பு (GIS) என்பதில் இரண்டு வகையான தனிநபர் பாவனைக் கணனிகளும் அதிநவீன தயாரிப்பான மென்பொருள் (GIS) அமைப்பும் உள்ளன. இவை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியல் துறை நிபுணர்களதும் கொழும்பிலுள்ள (EMSO Ltd) தனியார் நிறுவனத்தினதும் ஒத்துழைப்புடன் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் செயலகத்தில் நிறுவப்படும்.

இலத்திரனியல் - புவியியல் தகவல் அமைப்பு (GIS ) என்பது அடிப்படையில், வரைபடங்கள் மற்றும் இலத்திரனியல் (டிஜிற்றல்) முறையிலுள்ள தரவுகள் போன்றவற்றைக் கையாள்வதற்கான கணனிமயமான ஓர் அமைப்பாகும். பாரம்பரியமான திட்டமிடல் முறைகளுக்கு மேலாக இதில் நன்மை பயக்கும் முன்னேற்றம் என்னவென்றால், தரவுகளைக் கையாள்வதில் அதிக திறமை கிடைக்கின்றது. மேலும் சிக்கலான பரப்புகளைப் பகுப்பாய்வு செய்வதையும் சிறப்பாக மேம்படுத்துகிறது. இவ்வித அனுகூலங்களின் காரணமாகப் பல நாடுகளில் இந்தப் புதிய தொழில்நுட்பம் பாரம்பரிய திட்டமிடல் முறைகளை முற்றுமுழுதாக மாற்றி அமைத்துள்ளது.

அடுத்துவரும் இரண்டு ஆண்டுகளில் மாவட்டத் திட்டமிடல் செயலகத்திலிருந்தும் பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்தும் தெரிவு செய்யப்படும், பிரதேசத் திட்ட அலுவலர்கள், புதிய தொழில்நுட்பத்தைக் கையாள்வதற்குப் பயிற்றப்பட்டு இலத்திரனியல் (டிஜிற்றல்) முறையிலான தரவுமுறைகளை நிறுவிப் பராமரிக்கக் கூடியவர்களாக இருப்பார்கள்.

முதற்கட்ட அதிரடிப்பயிற்சியாக எட்டு அலுவலர்களைக் கொண்ட குழுவொன்று 5நாள்கள் மென்பொருள் பயிற்சியைப்பெற்று தேர்ச்சியடையவிருக்கின்றார்கள். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியல்துறை, கணனி ஆய்வுகூடத்தில் இந்தப்பயிற்சி ஒகஸ்ட் 15 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து 05 நாள்கள் நடைபெறும். இந்த அறிமுகப் பயிற்சியின் பின்னர் பங்குபற்றுநர்கள் தமது புதிய தொழில்நுட்ப அறிவினைத் தமது அன்றாடப் பணிகளில் பயன்படுத்துவர்.

ஒருவருட காலத்தில் இத்திட்டமிடல் செயற்பாட்டின் புதிய தொழில்நுட்ப உத்தியானது அதிகபட்சப் பயன்பாட்டைப் பெற்றுக் கொள்ளும் விதத்தில் மீளமைக்கப்பட்டு ஒருமுகப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.



தென்மராட்சி பிரதேச செயலகத்தில் உதவித் திட்டமிடல் பணிப்பாளராக கடமையாற்றி யாழ்.செயலகத்திற்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் கி.குணாளசிங்கத்திற்கு மண்டுவில் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் பிரிவுபசார விழா நடத்தினர். நிகழ்வில், தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் உரையாற்றுவதையும் அருகில் சங்கத் தலைவர் இ.மனோகரன், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் கி.குணாளசிங்கம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.
(படம் - தென்மராட்சி செய்தியாளர்)

# மாகாணமட்டத் தமிழ்த் தினப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஓக.13

வடக்கு-கிழக்கு மாகாண மட்டத்தில் பாடசாலை மாணவரிடையே நடத்தப்பட்ட இவ் வருட தமிழ்த் தினப்போட்டிகளில் யாழ்.மாவட்டம் 113 புள்ளிகளைப் பெற்றது.

திருகோணமலை, வவுனியா, மட்டக்களப்பு, மன்னார், கல்முனை, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்கள் முறையே 83, 73, 48, 39, 38, 34, 29 புள்ளிகளைப் பெற்றன.

இம் மாகாண மட்டப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள் மற்றும் பாடசாலைகளின் விவரம் வருமாறு:-

### வாசிப்பு

**பிரிவு I** :- யூடி மதுசிகா மனோகிதராஜ் (கோட்டமுனை கனிஷ்ட வித்தி.) , து.மாலோகன் (கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி.), பு.டிரூஷா(திருகோணமலை ஸ்ரீசண்முகா இ.ம.க.),

**பிரிவு II**:- ஞா.தாமரா(மன்னார் புனித சவேரியார் ம.க), ஜெ.லக்ஷி (சுண்டுக்குளி ம.க.), ஜெ.ஜெந்தினி(வவுனியா இறம்பைக்குளம் ம.க.).

### ஆக்கத்திறன் வெளிப்பாடு

**பிரிவு I**:- இ.ஸ்ரீதிவாகரன் (கரணவாய் தாமோதரா வித்தி.), கே.எம்.சஹறதுன் நிசா (கல்முனை அஸ்.ஸிறாஜ் ம.வி.), மா.துவாரகா (முல்லை.கைவேலி கணேசா வித்தி.),

### எழுத்து ஆக்கம்

**பிரிவு I**:- சோ.திரியம்பகி (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), த.பவிதா(திரு புனித பிரான்சிஸ் சவேரியார் ம.வி.), ஜீ.டல்சிக்கா (மட்.கோட்டமுனை க.வித்தி.)

### கூடிதம்

**பிரிவு II**:- வ.சுஜீவன் (யாழ்.ஹாட்லிக் கல்லூரி), சு.சாகித்தியா (மட்.ஆரையம்பதி இ.கி.மி.பா.), சி.தனுசியா(திரு பேராறு பரமேஸ்வரா ம.வி.),

**பிரிவு III**:- கி.பிரவீணா(திரு.சென் மேரிஸ்கல்.), வ.அனோஜா(கிளி.முருகானந்தா ம.வி.), வி.சரணா(மட்.துறைநீலாவணை ம.வி.),

### கவிதை

**பிரிவு IV**:- க.குகாஞ்சனா(திரு. சென் மேரிஸ் கல்.), சி.தட்சாயினி(முல்.புதுக்குடியிருப்பு ம.வி.), ஆ.மோகனப்பிரியா (யாழ். உடுப்பிட்டி ம.க.).

### இலக்கியம்

**பிரிவு V**:- அ.கார்த்திகா (வவு.பாவற்குளம் கணேஷா வித்தி.), க.நிஷாந்தி (கிளி. உருத்திரபுரம் ம.வி.), த.மரியகொன்சலிற்றா (திரு.புனித பிரான்சிஸ் சவேரியார் ம.வி.)

### இலக்கணம்

**பிரிவு IV**:- கி.கிருஷ்ணவேணி (வவு. இறம்பைக்குளம் ம.வி.), செ.மு.மெ.ஆப்தீன் (கல்.அல்.மனார் ம.க.), உ.தனுஷா (யாழ். வேம்படி ம.க.)

**பிரிவு V**:- இ.சுபலஷ்மி(மட்.வந்தாறுமூலை ம.வி.), வே.பிரபாசீலன் (திரு.இகிமி ஸ்ரீகோணேஸ்வரா இ.க.), க.அனுஷா (இளவாலை கன்னியர்மடம் ம.வி.),

### திறனாய்வு

**பிரிவு V**:- எஸ்.கிறிசாலினி (கல்.கார்மேல் பாத்திமா கல்லூரி), சி.சுமதி(கிளி.திருவையாறு ம.வி.), ச.நிரஞ்சலா (யாழ்.ஸ்கந்தவரோதயா கல்.).

### குறுநாடகம்

**பிரிவு IV**:- வீ.இமாஜினி(யாழ்.ஸ்கந்தவரோதயா கல்.), ஜே.லோஜனா(கல்.விபுலானந்தா ம.க.), சி.சித்திரகலா (மட்.அமிர்தகழி ஸ்ரீ இகிமி வித்தி.).

**பிரிவு V**:- யோ.ராஜ்மோகன் (வவு.பாவற்குளம் கணேஷா வித்தி), ரூ.தசோனியா (யாழ். புனித திரேஷா ம.க.), செ.பிரேமினி (கிளி. அக்கராயன் ம.வி.).

### கவிதை ஆக்கம்

**பிரிவு IV**:- இ.அபிநயா(திரு.சென். மேரிஸ் கல்.), றொ.றெயின்சி. பீரிஸ்(மன். புனித மரியாள் பெ.ம.வி.), ஏ.எல்.நஸ்ரீன் (கல்.ஆயிஷா ம.க.),

**பிரிவு V**:- பா.திலீபன் (வவு. தமிழ் ம.ம.வி.), ந.கோகுலவாணி (நெடுந்தீவு சைவப் பிரகாச வித்தி.), ஜே.திவ்யா (முல். குமுழமுனை ம.வி.).

### சிறுகதை

**பிரிவு IV**:- கு.பிந்துஜா(முல்.வித்தியானந்தாக் கல்), கு. வத்சலா (வவு.புதுக்குளம் ம.வி), சூ.பிரியசாந்தினி (கல்.நாவிதன்வெளி அனைமலை வித்தி)

**பிரிவு V**:- எம்.ஏ.எம். மரீஹா (கல். முஸ்லிம் ம.க.), நு. உதயகௌரி (யாழ். விக்ரோறியா கல்.), ச. சசிகலா (கிளிநொச்சி ம.வி.)

### பேச்சு

**பிரிவு I**:- ஜெ.ரிசாத் (வவு.தமிழ் ம.ம.வி.), ஞா.அபிராமி (யாழ். புனித திரேசா ம.வி.), நோ.திலக்சன் (மன். புனித சவேரியார் ஆ.க.).

**பிரிவு II**:- சா.மதுரமி (யாழ். சுண்டுக்குளி ம.க.), சி.சங்கீர்த்தன் (வவு. தமிழ் ம.ம.வி.), பே.போல் அன்ரனி (மன். இலகடிப்பிட்டி றோ.க.த.க.பா.).

**பிரிவு III**:- மோ.ஜெயபிருந்தா (மன். வட்டக்கண்டல் அ.த.க.பா.), ம.சாருகா (கிளிநொச்சி ம.வி), ஆ. அனோஜி (மட். கிரான் ம.வி.).

**பிரிவு IV**:- வி.விஜயதர்சிக்கா (மன். சித்தி விநாயகர் இ.க.), ந. ஸாஹினி (யாழ். இளவாலை கன்னியர்மடம் ம.வி.), இ.நிலோனி (மட்.கோட்டைக் கல்லாறு ம.வி.), ம.திருநயனி (கிளிநொச்சி ம.வி.).

**பிரிவு V**:- யோ. சுதாகரன் (யாழ். யூனியன் கல்லூரி), ம.ஆன்மதுஷா (மன். புனித சவேரியார் பெ.க.), சி. வாசன் (வவு.தமிழ் ம.ம.வி.),

### பாவோதல்

**பிரிவு I**:- ஜெ.மதூஷிகன் (யாழ். கொக்குவில் இ.க), நிதர்சனா(கிளி. இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா.), இ. பிரியங்கா (முல். யோகபுரம் ம.வி.).

**பிரிவு II**:- உ. தட்ஜெனன் (திரு.நிலாவெளி த.ம.வி), நிவாசினி (முல்.யோகபுரம் ம.வி.), கி.பார்த்தீபன் (யாழ்ப்பாணக் கல்லூரி).

**பிரிவு III**:- ந. ஜெனன் (வ.கல்மடு படிவம்1 அ.த.க.பா.), எம்.எப்.மு.சுஹால்ஸ் (கல். அல் - மனார் ம.க.), கி.செறின் சியாமளா (மன். ஆண்டான்குளம் றோ.க.த.க.பா),

**பிரிவு IV**:- பர்ஜீஸ் (கல். அல்- மனார் ம.க.), ஆ.ரம்மியா (கிளநொச்சி ம.வி), ச.சதுர்த்திகா (மட். வின்சன் ம.உ.பா),

**பிரிவு V**:- இ. தனுஷன் (மீசாலை வீரசிங்கம் ம.வி.), ச.எட்னா (மன்.பாத்திமா ம.ம.வி.), பா.மேகலா (முல்.வற்றாப்பளை ம.வி.).

### இசையும் அசைவும்

**பிரிவு I**:- வ. அபிராமி (மட்.புனித சிசிலா ம. க.), ஆ.றோசி (வவுனியா கிடாச்சூரி அ.த.க. பாடசாலை) றி.பாத்திமா றினேஷா (திருகோணமலை சென்மேரிஸ் கல்லூரி).

### தனி இசை

**பிரிவு II**:- த.சர்மிளரூபன் (வவுனியா தமிழ் மத்திய ம.வி.), இ.வினோதினி (முல்லைத்தீவு வள்ளிபுனம் க.உ.வி.), ஈ.துர்காஜினி (மன்னார் நானாட்டன் ம.வி.), கஜனி நல்லதம்பி (மட்டக்களப்பு புனித சிசிலியா மகளிர் கல்லூரி).

**பிரிவு III**:- த.தர்ஷாந் (திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரி), அன்பரசி பாலகிருஷ்ணன் (கிளிநொச்சி முருகானந்த ம.வி.), கவிசங்கரி ஜெயலோகேந்திரன் (மட்டக்களப்பு வின்சன் மகளிர் கல்லூரி).

**பிரிவு IV**:- இ.சுரசாகித்யன் (யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரி), க.நிரோஜினி (புதுக்குடியிருப்பு ம.க.), அபிராஞ்சல்யா இராமலிங்கம் (மட்டக்களப்பு புனித சிசிலியா மகளிர் கல்லூரி), இ.சரண்யா (திருகோணமலை ஸ்ரீ சண்முகா இ.ம.க.).

**பிரிவு V**:- சி.ஜனகன் முத்துக்குமார் (யா/ சென்ஜோன்ஸ் கல்லூரி), அ.மைதிலி காயித்திரி (மட்டக்களப்பு வின்சண்ட் மகளிர் கல்லூரி), கோ.கோசலா (முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி).

### குழு இசை

வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி, கல்முனை அஸ்- ஸிறாஜ் ம.வி, மட்டக்களப்பு புனித சிசிலியா மகளிர் கல்லூரி, கல்முனை அஸ்- ஸிராஜ் ம.வி, திருகோணமலை ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

### தனி நடனம்

**பிரிவு I**:- வ.ஸ்ரீதரா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), த.டிலக்ஷ (திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி), வஜ்ரா முத்துக்குமார் (மட்டக்களப்பு புனித சிசிலயா மகளிர் கல்லூரி).

**பிரிவு II**:- செ.ஆரணி (உடுவில் மகளிர் கல்லூரி), ப.மதுமதி (திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி), சோபனா சிறி சூரியகாந்தன் (மட்டக்களப்பு வின்சன் மகளிர் கல்லூரி).

**பிரிவு III**:- கோவர்த்தினி கருணாநிதி (மட்டக்களப்பு புனித சிசிலியா மகளிர் கல்லூரி), சி.கோபிகா (வவு.தமிழ் ம.ம.வி.), சி.பவித்திரா (யா/திருக்குடும்ப கன்னியர்மட ம.ம.வி.).

**பிரிவு IV**:- கருணாநிதி தனஞ்செயன் (மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி), சி.ஷமிலா (மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி) சி. அபிராமி (திருகோணமலை ஸ்ரீசண்முகா இ.ம.க).

**பிரிவு V**:- பு.அமிர்தினி (திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி), வி.ஜீவிகா (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), சி.நிவேதிகா (வவுனியா தமிழ் ம.ம.வி).

### குழு நடனம்

மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி திருகோணமலை ஸ்ரீ சண்முகா இ.ம.க.

### நாட்டிய நாடகம்

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி, மன்னார் சித்தி விநாயகர் இ.க., வவுனியா சைவப் பிரகாச ம.ம.வி.

### நாடகம் திறந்தபோட்டி

கிளிநொச்சி மகா வித்தி, புதுக்குடியிருப்பு ம.வி, மன்னார் சென்.லோறன்ஸ் றோ.க.த.க.பா.

### வில்லுப்பாட்டு

யாழ்ப்பாணக் கல்லூரி, திருகோணமலை ஸ்ரீ இ.இ.ச.கோணேஸ்வரா இ.க, முத்தையன் கட்டு அ.த.க.பாடசாலை.

### விவாதம்

யாழ்.மத்திய கல்லூரி, புதுக்குடியிருப்பு ம.வி, கல்முனை அக்கரைப் பற்று ம.ம.வி.

### தமிழறிவு வினாவிடை

திருகோணமலை இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வர இ.க, முல்லைத்தீவு ம.வி, வடமராட்சி விக்னேஸ்வரா கல்லூரி. (ஒ-13-203-204)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

புதிய Model 91KA DVD Panasonic Set ''5CD'' (7300w pmpo) விற்பனைக்குண்டு. தொடர்பு:இல.92, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 021 222 3717, 021 222 5876. (38785)

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதி, 514ஆம், 515ஆம், 516ஆம், 517ஆம் இலக்கங்களை உடைய வீடுகள் (யாழ்ப்பாண பழைய OPD இற்கு முன்பாக) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: (சனி, ஞாயிறுகளில் மட்டும்) T.P.: 222 8024. (பார்வையிடும் நேரம் காலை 10-மாலை 5.00). (38803)

## காணி விற்பனைக்கு

இருபாலைச் சந்திக்கு அருகாகப் பருத்தித்துறை வீதிக்கு அருகில் மூன்று பரப்புக் காணி உடன். விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 077 9015768. (38695)

## வீடு காணி விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கில் 2 பரப்பு 11 குழி காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் மாலை 6 மணிக்குப் பின்பு தொடர்பு கொள்ளவும். T.P.: 0114613157. (38750)

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தஞ்செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை). (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி-44491)

## நாய்க்குட்டி விற்பனை

வளர்ந்த Great Dane நாய்க்குட்டிகள் குறைந்த விலையில் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (38768)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்புமருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள் 42/=, பேட்டுக்குஞ்சுகள் 22.08.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக்கிளைகளிலும், சுட்டிபாம் - வட்டுக்கோட்டை, சந்நிதிபாம் - தொண்டைமானாறு, ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர்பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (38679)


### விற்பனைக்கு

சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அதற்கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்கு சிம் காட்டும் வழங்கப்படும். பழுதுபார்த்துத் திருத்தும் சேவையும் உண்டு.

**யாழ்- போன் சொப்**

10, நவீன சந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி (திறீ ஸ்ரார் ஹோட்டலுக்கு முன்பாக), யாழ்ப்பாணம்.


## மணமகன் தேவை

யாழ்.வடமராட்சி இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1976ஆம் ஆண்டு பிறந்த, திருவோணம் 2ஆம் பாதம், கிரகபாவம் 64, செவ்வாய் தோஷமற்ற, A/L படித்த மணமகளுக்குப் பொருத்தமான மணமகன் தேவை. அரச தனியார் நிறுவனங்களில் பணிபுரிபவராக இருப்பின் விரும்பத்தக்கது. தொடர்பு: T.P.: 226 3730. (38782)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1979ஆம் ஆண்டு பிறந்த, பூசம் நட்சத்திரம், 5'5'' உயரம், G.C.E.O/L, கம்பியூட்டர் படித்துள்ள, கிரகபாவம் 68 உள்ள மணமகளுக்கு மணமகன் தேவை. தொடர்பு: விளம்பர இல. 2268, மே/பா. உதயன், யாழ்ப்பாணம். (38740)

## ஜோதிடம்

கைரேகை, ஜாதகம் கொண்டு உங்களின் எதிர்காலப் பலன்களை அறிந்துகொள்ளவும் உங்கள் வாழ்வில் வெற்றிபெறவும் ஆலோசனை பெற்றுக்கொள்ளவும் ஒருமுறை நாடுங்கள். இந்திய பரம்பரை ஜோதிடர் அருள் வாக்கு அம்பிகா அம்மா, 121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (38710)

## வாடகைக்கு

மணித்தியாலம் மற்றும் நாளாந்த வாடகைக்கு இருபாலாருக்கும் மோட்டார் சைக்கிள், மோட்டார்கார் வாடகைக்கு வழங்கப்படும். அத்துடன் குளிரூட்டப்பட்ட திருமணக் காரும் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 360/10, பிரதான வீதி (பஸ்தியன் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். T.P.: 0777 593722, 0776 991899. (38049)

## தவறிவிட்டது

A. தியாகராஜா என்பவருடைய மூக்குக் கண்ணாடி ஒன்று சாவகச்சேரிக்கும் நுணாவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் "விமலாஸ்", நவீனசந்தை, சாவகச்சேரியில் ஒப்படைத்துதவவும். (38788)

நவாலி தெற்கு, கொத்துக்கட்டி லேன், மானிப்பாய் என்ற முகவரியை உடைய செலவராசா உஷாந்தினி என்பவருடைய தே.அ. அட்டை (இல.755584517V) யாழ்ப்பாணத்திற்கும் மானிப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சிறிமுருகன் நகையகம், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (38809)

கட்டுவன் மேற்கு, தெல்லிப்பழை என்ற முகவரியை உடைய நடராசா வைகுந்தவாசன் என்பவருடைய தே.அ.அட்டையும் விசேட அடையாள அட்டையும் நல்லலிங்கம் சிலோசனா என்பவருடைய தே.அ.அட்டையும் (688481929V), விசேட அடையாள அட்டையும் கடந்த 25.07.2005 அன்று கட்டுவனுக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்துதவவும். (38802)


# ARUNS SPORTS SPOT

## நல்லூர்த் திருவிழா கோலாகலம்!



கிரிக்கெட்- மென்பந்து கிரிக்கெட்

| | |
|---|---|
| உதைபந்தாட்டம் | மேசைப்பந்தாட்டம் |
| வலைப்பந்தாட்டம் | சதுரங்கம், கரம் |
| கூடைப்பந்தாட்டம் | பட்மின்ரன் |
| கரபந்தாட்டம் | தடகளவிளையாட்டு |



இந்த விளையாட்டுக்களுக்குத் தேவையான தரமான உபகரணங்கள் நியாயமான விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**அருண்ஸ் ஸ்போட்ஸ் ஸ்பொட்**

**253, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P:222 3776.**


# தன்னம்பிக்கையும் வி ா...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

நன்றாக விளையாடுவேன். அந்த நம்பிக்கை என்னுள்ளே தாராளமாக இருக்கிறது. இதற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளேன் என்கிறபோது பெருமகிழ்வடைந்த என்னுடைய பெற்றோர், எமது கல்லூரி முன்னாள் அதிபர் சிவநேஸ்வரன், ஆசிரியப் பெருந்தகைகள் எனக்கு மென்மேலும் நம்பிக்கை ஊட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

✱ ***கேள்வி:*** வலைபந்தாட்ட அணியில் புரிந்த சாதனைகளில் மறக்கமுடியாதது பற்றி....

● ***பதில்:*** ஆறுவருடங்களாக வலைபந்தாட்ட அணியில் அங்கம் வகித்துவருகிறேன். இத்தகைய காலங்களில் எனக்கு ஏற்பட்ட பல மறக்க முடியாத சம்பவங்கள் உண்டு. 2003ஆம் ஆண்டு தாயக வலைப்பந்தாட்ட அணி லண்டன் மாநகரில் வெற்றிவாகை சூடித் தாயகம் திரும்பியிருந்தோம். அப்போது கிளிநொச்சிக்குச் சென்றிருந்தோம்.

அப்போது நாம் எதிர்பார்க்காத வகையில் எமது தேசியத் தலைவர் வே.பிரபாகரன் எமது அணியை வாழ்த்தி, பாராட்டி பரிசில்களைத் தந்துள்ளார்.

அப்போது நானும் அவருடைய கையினால் பரிசில்களையும் பெற்றேன். இந்தச்சம்பவம் உண்மையில் இதுவரை என் விளையாட்டுக் காலங்களில் மறக்கமுடியாத ஒரு சம்பவம் என்றுதான் சொல்ல வேண்டும்.

✱ ***கேள்வி:*** விளையாட்டு கல்விக்குத் தடை என்கிறார்களே அதுபற்றி....?

● ***பதில்:*** நிச்சயமாக அது ஏற்றுக்கொள்ள முடியாதது. உடற்பயிற்சியின் பின் கல்வி கற்கின்றபோது ஆரோக்கியமான நிலைமை உருவாகிறது.

அத்துடன், விளையாட்டுக்கென ஒரு குறிப்பிட்ட நேரம், படிப்புக்கென ஒரு குறிப்பிட்ட நேரம் இப்படித் திட்டமிட்டுச் செயற்பட்டால் தடையாக இருக்காது என்பது என்கருத்து.

இப்படியான சில காரணங்களைச் சொல்லிச் சில பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளின் ஆற்றல்களை, திறமைகளைக் குழிதோண்டிப் புதைத்துவிடுகிறார்கள். இந்த நிலை மாற வேண்டும்.

✱ ***கேள்வி:*** சகவீரர்களுக்கு, வளர்ந்து வரும் வீரர்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?

● ***பதில்:*** என்னுடைய குறுகிய கால அனுபவத்தை வைத்துச் சொல்வதானால் ஒரு வீராங்கனைக்கு தன்னம்பிக்கை அத்துடன், முயற்சி அதிலும் விடாமுயற்சி இருக்குமானால் எதிலும் எதையும் சாதிக்கலாம்.

அத்துடன் ஒரு குழு விளையாட்டு அணியாக இருந்தால் அதில் அங்கம் வகிக்கும் வீரர் களுக்கிடையில் புரிந்துணர்விலான ஒற்றுமை வேண்டும் அதன்மூலமே வெற்றிகளைச் சூடிக் கொள்ளலாம்.


## கணபதி ஜோதிட நிலையம்

**பண்டிட் ஐயப்ப சாஸ்திரி**

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளார். இவர் கைரேகை மூலம் நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப் போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், விவாகப் பொருத்தம், கல்வி, வெளிநாடு செல்லும் வாய்ப்பு, நோய் போன்றவற்றிற்குப் பரிகாரம் கூறுவார். ஒரு முறை சந்தியுங்கள்.

தொடர்பு: **SHANJAEYA REST HOUSE,**
NO.5, RAKKA ROAD (ICRC Office அருகில்),
JAFFNA.T.P.: 077 9173940. (38141)(42.15.18)

## கருமாரி அம்மன் ஜோதிடம்

**ஸ்ரீ பாலகிருஷ்ண சாஸ்திரி**

இந்தியாவிலிருந்து வருகைதந்துள்ளார்.
கைரேகை மூலமாக - நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், கல்வி, கணவன்-மனைவி ஒன்று சேர்தல், வெளிநாட்டுப் பயணம் பற்றியும் மற்றும் எதிர்காலப் பலன்களையும் அறிந்துகொள்ள நாடுங்கள்:

**பிள்ளையார் இன், அறை எண் 9,**
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.No.: 0779233191 (38399)(26.15.19.42)

## சிங்கப்பூர், இந்தியாவில் உயர்கல்வி

FTMS College of Singapore, Sona College of Technology in India ஆகிய நிறுவனங்களில் பட்ட, பட்டமேற்படிப்பு, தொழில்சார் கற்கை நெறிகளை மேற்கொள்வதற்கான

**இலவச கல்விக் கருத்தரங்கு**

*இடம்:* யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடம்
இல: 127, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

*காலம்:* நாளை (14.08.2005) ஞாயிற்றுக்கிழமை
முதலாம் அமர்வு காலை 9.45 மணி
இரண்டாம் அமர்வு காலை 11.30 மணி

U.K, USA பல்கலைக்கழகங்களில் இறுதி ஆண்டு கல்வியை மேற்கொள்வதற்கும், சிங்கப்பூர் பிரஜா உரிமையைப் பெற்றுக்கொள்வதற்குமான அரிய சந்தர்ப்பம் ஆர்வம் உள்ளவர்களை அன்போடு அழைக்கின்றோம்
(A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களும் பங்குபற்றவும்.)

*மேலதிக விவரங்களுக்கு:*
077 3256575
077 3164320 (C/44050)(21-15-19-42)


## கொதிதண்ணீரில் கால்வைத்த குழந்தை காயம்

தென்மராட்சி,ஓக.13

கொதிதண்ணீர் கிண்ணத்தினுள் கால் வைத்த ஒரு வயதுக் குழந்தை காயமடைந்தது. இச்சம்பவம் கடந்த 7 ஆம் திகதி சாவகச்சேரி கல்வயலில் இடம்பெற்றது.

தேநீர் தயாரிப்பதற்காகக் கொதி தண்ணீரைக் கிண்ணத்தினுள் ஊற்றியபோது மடியில் வைத்திருந்த குழந்தை அதனுள் கால் வைத்து காயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இதே இடத்தைச் சேர்ந்த இ.வதுஷா (வயது 1) என்னும் குழந்தை காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ் பத்திரியில் சேர்க்கப் பட்டுள்ளது. (9-117)

## மாடு தாக்கி நபர் காயம்!

தென்மராட்சி,ஓக.13

கயிற்றில் சிக்கியிருந்த காளையின் கால்களை விடுவித்த நபரை அந்த மாடு காலால் அடித்துக் காயப்படுத்தியது.

இச்சம்பவம் கடந்த 7 ஆம் திகதி மிருசுவில் தவசிக்குளத்தில் இடம்பெற்றுள்ளது.

கையில் காயமடைந்த இதே இடத்தைச் சேர்ந்த மாணிக்கம் சின்னத்துரை (வயது 52) என்பவர் சாவகச்சேரி ஆஸ் பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (9-117)


## மனோதத்துவ வைத்தியம்
## (GENERAL PSYCHO THERAPY)
### இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

**14-08-2005 - 20-08-2005**

முன்கூட்டியே பதிவுசெய்யவும்

இளைஞர்களே!
☆ சக்தி குறைவு ☆ ஞாபக மறதி ☆ பயம் ☆ நடுக்கம்
☆ நித்திரைக் குறைவு ☆ ஆண்மைக் குறைவு ☆ நீரிழிவு நோய்
என்பவற்றால் தாழ்வு மனப்பான்மையா?

கவலையை விடுங்கள். ஆரம்ப மனநோய் பாதிப்பு உடனடியாக நீக்க என்னுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள். ஆண்மைச் சக்திக் குறைவுதான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம். பலர் இங்கே சிகிச்சை பெற்றுப் பூரண சுகமடைந்தமைக்கு ஆதாரம் உண்டு.

குறிப்பு: இறுதி நேரத்தில் வருவதைத் தவிர்க்கவும்

தொடர்புகளுக்கு: பலரது பாராட்டைப் பெற்ற
**பிரபல மனோதத்துவ நிபுணர்**
**Dr.P.ஆறுமுகம் S.M.P.**
A.S.N. சுற்றுலா விடுதி,
392/A, மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம்
(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்).
Govt. Regd. No. 9492
Hot Line: 0777 569205 T.P.: 3181, 5399
(முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்)
(சி-44051) (26-15-19-42)

# 84இல் நடந்த சீக்கியர் கொலைகளுக்கு இந்தியப் பிரதமர் மன்னிப்புக்கோரினார்

புதுடில்லி ஓக.13

'பிரதமர் இந்திரா காந்தி சுட்டுக்கொல்லப்பட்டது தேசிய அளவிலான சோகம்; அந்த சோகத்தைத் தொடர்ந்து, 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சீக்கியர்கள் படுகொலை செய்யப்பட்டது தேசத்துக்கே அவமானம். அதற்காக வெட்கித் தலைகுனிகிறேன். நடந்த அச்சம்பவங்களுக்காகச் சீக்கியர்களிடம் மட்டுமல்ல, முழுத் தேசத்திடமும் மன்னிப்புக் கோருகிறேன் என்று பிரதமர் மன்மோகன்சிங் அறிவித்தார்.

இந்திய நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் பேரில் நடந்த விவாதத்தில் குறுக்கிட்டுப் பேசுகையில் இந்த அறிவிப்பை அவர் வெளியிட்டார்.

கலவரத்தில் ஈடுபட்டதாகவும் தூண்டிவிட்டதாகவும் நானாவதி ஆணைக்குழுவால் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் தொடர்பாக மறு விசாரணை நடத்தப்படும். ஓய்வுபெற்ற அரச அதிகாரிகள் மீதும் விசாரணை நடத்தப்படும். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்படும் என்றும் அவர் அறிவித்தார்.

சீக்கியர்களிடமும் முழுத் தேசத்திடமும் பிரதமர் மன்மோகன் கோரியிருப்பது பாவ மன்னிப்பே. இதை நாங்கள் வரவேற்கிறோம் என்று சீக்கியச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

1984 ஆம் ஆண்டு இந்தியப் பிரதமராக இருந்த இந்திராகாந்தி, அவரது மெய்ப்பாது காவலர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். கொலையாளிகள் சீக்கியர்கள் ஆவர். இதனையடுத்து சீக்கியர்களுக்கு எதிராக வன்முறைகள் வெடித்தன. இதில் ஆயிரக்கணக்கான சீக்கியர்கள் கொல்லப்பட்டனர்.

இந்த வன்முறைகளின் பின்னணி குறித்து விசாரித்த நானாவதி விசாரணைக் குழு சமீபத்தில் தனது அறிக்கையை அரசிடம் சமர்ப்பித்தது. ஜெகதீஷ் டைட்லர், சாஜன்குமார் உட்படக் காங்கிரஸ் பிரமுகர்கள் சிலர் சீக்கியர்களுக்கு எதிராக வன்முறைகளைத் தூண்டினர் என்று அந்த அறிக்கையில் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.



இதனையடுத்து நாடாளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் எதிர்ப்பு நடவடிக்கையில் எதிர்க்கட்சிகள் ஈடுபட்டு வருகின்றன. நிலைமையைச் சமாளிக்க ஜெக தீஷ்டைட்லர், சாஜன் குமார் ஆகியோர் பதவி விலகியுள்ளனர். இந்த நிலையிலேயே சீக்கிய சமூகத்தைச் சேர்ந்தவரான பிரதமர் மன்மோகன் சிங் நாடாளுமன்றத்தில் பகிரங்க மன்னிப்புக் கோரியுள்ளார். (ஓ)

## நோபல் பரிசில்பெற்ற விஞ்ஞானிக்குச் சிறை!

நியூயோர்க்,ஓக.13

கார் விபத்தில் ஒருவரது உயிரிழப்புக்கு காரணமாக இருந்தார் என்பதற்காக அமெரிக்க விஞ்ஞானி ஜோன் ரொபர்ட் ஷ்ரிப்பர் (வயது 74) சிறைத் தண்டனையை எதிர்நோக்கிக் காத்திருக்கிறார்.

இவர் இயற்பியல் துறையில் 1972ஆம் ஆண்டு நோபல் பரிசு பெற்றவர். கடந்த ஆண்டு செப்ரெம்பர் 24ஆம் திகதி கலிபோர்னியா மாகாணத்தில் வேகமாகக் கார் ஓட்டிச்சென்றுகொண்டிருந்தபோது அவரது கார் ஒரு வான் மீது மோதி விபத்துக்குள்ளானது. இதில் ஒருவர் பலியானார்; 7 பேர் காயமடைந்தனர்.

விபத்துத் தொடர்பான வழக்கு விசாரணையின் போது ஜோன் ரொபர்ட் ஷ்ரிப்பர் தனது செயலுக்காகக் கண்ணீர் மல்க மன்னிப்புக் கோரினார்.

இருப்பினும், நீதிபதி ஜேம்ஸ் ஹெர்மன் அவருக்குச் சிறைத் தண்டனை விதித்தார். வசதிகள் குறைந்த மாநிலச் சிறையில் தண்டனை அனுபவிக்குமாறு அவர் உத்தரவிட்டார். அங்கு அவருக்கான தண்டனைக் காலம் முடிவுசெய்யப்படும்.

# சேது சமுத்திரத்திட்டத்தை எதிர்த்து போராட்டம் நடத்திய மீனவர் கைது!

சேது சமுத்திரத்திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து முற்றுகைப் போராட்டம் நடத்த முயற்சித்த தமிழக மீனவர்கள் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

சேதுகால்வாய்த் திட்டத்தால் ஏற்படக் கூடிய பாதிப்புகள் குறித்து மீனவ அமைப்பினால் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் உட்படப் பலரும் கேள்வி எழுப்பினார். ஆனால், அவற்றிற்குச் சரியாக விளக்கமளிக்காமலேயே திட்டப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும்-

ஆகவே, சேது சமுத்திரத்தித் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்துக் கால்வாய் தோண்டும் பணி இடம்பெறும் இடத்தில் முற்றுகைப் போராட்டம் நடத்தப்படும் என்றும்-

அகில இந்திய மீனவர் சங்கம் அறிவித்திருந்தது. இதன்படி, இந்த முற்றுகைப் போராட்டத்தை நேற்று நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது.

வேதாரண்யம் அருகில் உள்ள ஆறுகாட்டு துறை மீனவர் கிராமத்தில் இருந்து 25இயந்திரப் படகுகள், 200 பைபர் படகுகள் மூலம் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் கடலுக்குள் சென்று நடுக்கடலில் மண்ணை அள்ளும் கப்பலை முற்றுகையிட முயற்சித்தனர்.

இந்த நடுக்கடல் முற்றுகைப் போராட்டம் காரணமாக வேதாரண்யம், ஆறுகாட்டு துறை, ஈச்சங்குப்பம் போன்ற மீனவர் கிராமங்களில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.

நாகை, வேதாரண்யம், ஈச்சங்குப்பம், ஜெகதாபட்டினம், மீமிசல், அதிராம் பட்டினம், பட்டுக்கோட்டை, முத்துப்பேட்டை மற்றும் ராமேஸ்வரம், மண்டபம் உட்பட வெளி மாவட்ட மீனவர்களும் இதில் கலந்து கொண்டனர். 2ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் ஆறுகாட்டுதுறையில் திரளத் தொடங்கினார்கள்.

அவர்களைப் பொலீஸார் தடுத்தனர். மீறிக் கடலுக்குச் செல்ல முயற்சித்தவர்களைப் பொலீஸார் கைதுசெய்தனர். (ஓ)

# சிங்கப்பூர் ஜனாதிபதித் தேர்தலில் அதிபர் நாதனுக்கு பிரதமர் ஆதரவு

கொழும்பு,ஓக.13

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் இரண்டாவது தடவையாகவும் போட்டியிடவுள்ள சிங்கப்பூர் ஜனாதிபதி எஸ்.ஆர்.நாதனுக்கு அந்நாட்டின் பிரதமர் வீ சியென் லூங் ஆதரவு தெரிவித்துள்ளார்.

பிரதமர் வீ சியென் லூங் இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில், கடந்த ஆறு ஆண்டுகால ஜனாதிபதிப் பதவிக்காலத்தில் ஜனாதிபதி நாதன் சிங்கப்பூர் பொது மக்களின் முழு நம்பிக்கையையும் ஆதரவையும் ஈட்டும் வகையில் செயற்பட்டார் என்பதில் சந்தேகமில்லை எனத் தெரிவித்தார்.

ஆறு ஆண்டுகள் பதவிக்காலம் கொண்ட சிங்கப்பூர் ஜனாதிபதிப் பதவிக்குக் கடந்த 1999 ஆம் ஆண்டில் தமிழரான எஸ்.ஆர். நாதன் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஆனால், ஆளும் பி.ஏ.பி.கட்சியைச் சேர்ந்த இத் தொழிலதிபர் அன்ரூ குவான் தேர்தலில் போட்டியிட விருப்பம் தெரிவித்துள்ளார். 12 ஆண்டுகளின் பின்னர் சிங்கப்பூர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டி மூலம் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் நிலை உருவாகியுள்ளது.

(ஓ-205)

# சங்கரராமனைக் கொல்லும்படி ஜெயேந்திரரே கூறினாராம்

## நீதிமன்றத்தில் சாட்சியம்



நீதிமன்றம் அழைத்துவரப்பட்ட ரவி சுப்பிரமணியம்

சென்னை,ஓக.12

கணக்காய்வாளர் ராதாகிருஷ்ணன், காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோயில் நிர்வாகி சங்கராமன் ஆகிய இருவரால் தொல்லை ஏற்படுவதாகவும் அவர்களைத் தீர்த்துக் கட்டும்படியும் ஜயேந்திரர் கூறியதாக நீதிமன்றில் வாக்குமூலம் அளித்தார் ஒப்பந்தகாரர் ரவி சுப்பிரமணியம். பெண்களுடன் ஜயேந்திரருக்குத் தொடர்பு இருந்ததாகவும் அவர் அப்போது சொன்னார்.

கணக்காய்வாளர் ராதாகிஷ்ணன் தாக்கப்பட்ட வழக்கின் விசாரணை நீதிமன்றத்தில் சைதாப் பேட்டையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் ஒருவரான ரவி சுப்பிரமணியம் அரசு தரப்புச் சாட்சியாக மாறியுள்ளார். விசாரணையின் போது அவர் வாக்குமூலமளித்தார்.

ஜயேந்திரருடன் எப்படித் தமக்கு அறிமுகம் ஏற்பட்டது என்பது பற்றி அப்போது விளக்கினார். பெண்களுடன் அவருக்குத் தொடர்பு இருந்ததாகவும் ரவி சுப்பிரமணியம் குறிப்பிட் டார்.

கண்காய்வாளர் ராதாகிருஷ்ணனும் சங்கரராமனும் பெரிய தலைவலியாக இருப்பதாகவும் அவர்களை ஒழித்துக்கட்டும்படி ஜயேந்திரர் கூறியதாகவும் ரவி சுப்பிரமணியம் சொன்னார். இதற்காக அப்புவின் உதவியை நாடியதாகவும் அவர் கூறினார்.

சங்கரராமன் கொலைசெய்யப்பட்ட பின் ரூ.5 லட்சம் பணத்தை இனிப்புகளுடன் அப்புவைச் சந்தித்துக் கொடுத்ததாகவும் ரவி சுப்பிரமணியம் கூறினார். (ஓ)


# இந்தோனேஷியாவில் காட்டுத் தீ; மலேசியாவில் புகைமண்டலம்

இந்தோனேசியாவில் உள்ள சுமத்ரா காட்டில் பல வாரங்களாகக் காட்டு தீ எரிந்து வருகிறது. இதனால் 62 மைல் தொலைவில் உள்ள மலேசியாவை புகை மண்டலம் சூழ்ந்துள்ளது. காற்றின் திசை மலேசியாவை நோக்கி வீசுவதால் புகையின் அளவு அபாய அளவை எட்டியுள்ளது. மக்கள் சுவாசிக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதால் சிலாங்கோர் மாநிலம் உள்ளிட்ட பகுதிகளில் அவசரநிலை அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக இங்குள்ள பாடசாலைகளுக்கு ஒரு வாரகாலம் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. வர்த்தக நிறுவனங்களும் அலுவலகங்களும் மூடப்பட்டுள்ளன. போக்குவரத்தும் தடைசெய்யப்பட்டுள்ளது. மலேசியாவின் மிகப்பெரிய கிலாங் துறைமுகம் மூடப்பட்டுவிட்டது.

மருத்துவமனைகள், மருந்துக்கடைகள் ஆகியவற்றைத் திறந்து வைத்திருக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. சுமத்ரா காட்டுத் தீயைக் கட்டுப்படுத்துவதற்காக இந்தோனேசிய வனத்துறை அமைச்சருடன் மலேசிய பிரதமர் அப்துல்லா அகமது பதாவி பேச்சு நடத்திவருகிறார். செயற்கை மழையைப் பெய்வித்துக் காட்டுத் தீயை அணைக்கவும் ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

புகையைத் தொடர்ந்து சுவாசித்து வருவதால் மக்கள் பலருக்குத் தொண்டையில் கரகரப்பும், தலைவலியும் ஏற்பட்டுள்ளது.

## உலக அரங்கில்



ஆஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் சில ஆசிய நாடுகளில் தகவல் தொடர்பு மற்றும் இணைய வசதிக்காகத் தாய்லாந்து நிறுவனம் தயாரித்துள்ள செயற்கைக் கோள் நேற்றுமுன்தினம் தென் அமெரிக்காவின் பிரெஞ்சு கயானாவில் உள்ள கொருரொக்கெட் தளத்தில் இருந்து விண்ணில் செலுத்தப்பட்டது.

இதுவரை விண்ணில் செலுத்தப்பட்ட செயற்கைக் கோள்களில் உலகிலேயே இதுதான் பெரிய செயற்கைக் கோள். இந்தச் செயற்கைக் கோளின் பெயர் 'தாய்காம் - 4' இதன் எடை 6.5 தொன்கள்.

# 2025ஆம் ஆண்டில் ஆபிரிக்க நாடுகளில் 3 கோடி குழந்தைகள் பட்டினியால் வாடுவர்!

## உலக உணவு ஆராய்ச்சித் திணைக்களம் தகவல்

ஆபிரிக்க நாடுகளில் தற்போது கடைப்பிடிக்கப்படும் கொள்கைகளே தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுமாயின் 2025ஆம் ஆண்டில் ஆபிரிக்காவில் பசிக்கொடுமையால் வாடும் குழந்தைகளின் எண்ணிக்கை 3கோடியே 30 லட்சமாக அதிகரிக்கும் என உலக உணவு ஆராய்ச்சித் திணைக்களம் எச்சரித்துள்ளது.

உபசகாரா, ஆபிரிக்கா ஆகிய பகுதிகளில் 1970ஆம் ஆண்டில் 8 கோடியே 80 லட்சமாகக் காணப்பட்ட மொத்தச் சனத்தொகை 2001ஆம் ஆண்டில் 200 கோடியாக அதிகரித்துள்ளது - என அந்தத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கடந்த 30ஆண்டுகளில் ஆபிரிக்காவில் சனத்தொகைப் பெருக்கம் 35 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. 2015 ஆம் ஆண்டில் ஐ.நா. சபையின் வறுமையொழிப்புத் திட்டத்தினை முறையாகச் செய்யாவிட்டால், ஆபிரிக்க நாடுகள் மட்டுமன்றி உலகம் முழுவதும் இதன் தாக்கத்தை எதிர்கொள்ள வேண்டிவரும்.

2025 ஆம் ஆண்டில் ஆபிரிக்காவின் மொத்தச் சனத்தொகை 41கோடியே 9 லட்சமாக அமையும். அவர்களுள் 3 கோடியே 30 லட்சம் குழந்தைகள் முழுமையாக உணவின்றி பசிப்பிணியை எதிர்நோக்குவர்.

இந்த நிலைக்குத் தீர்வுகாண அடுத்தமாதம் 14ஆம் திகதி நடைபெறவுள்ள ஐ.நா.சபையின் அங்கத்துவக் கூட்டத்தில் இது குறித்து ஆராய்ந்து நல்ல கொள்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

ஆபிரிக்காவில் தற்போது நிலவும் வறுமை நிலைமையை மாற்றுவதற்கு ஐ. நா. சபையில் அங்கம் வகிக்கும் நாடுகள் தமது பிராந்தியத்தின் நிலையான அபிவிருத்தி குறித்துக் கூடுதல் கவனம் செலுத்துவது அவசியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (க)

## அம்புலன்ஸ் அன்பளிப்பு

புங்குடுதீவில் இருந்து புலம்பெயர்ந்து கனடாவில் வாழ்பவர்களின் நிதியுதவியால் புங்குடுதீவு தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவைப் பணிமனைக்கு அம்புலன்ஸ் ஒன்று அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. இந்த அன்புலன்ஸை வைபவ ரீதியாக வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை மருத்துவ சேவை பணிமனையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் அம்புலன்ஸை திலீபன் மருத்துவ சேவைப் பொறுப்பாளர் செ.நாயகன் உத்தியோகபூர்வமாகக் கையளிக்க, நிலையத்தின் சிறப்பு மருத்துவப் போராளி நா.வண்ணன், அபிவிருத்திக் குழுப் பொறுப்பாளர் ஆகியோர் அதனைக் கையேற்றனர். (9-202)

## வடமராட்சி மக்களுக்கு ஒரு நற்செய்தி!

நெல்லியடியில் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது....!

### வசந்தம் நெற் சோன்

### VASANTHAM NET ZONE

மத்திய மகா வித்தியாலய வீதி,
நெல்லியடி
(இலங்கை வங்கி முன்பாக)

- இன்ரநெற் அழைப்புகள்
- இன்ரநெற் சேவை
- சிறுவர்களுக்கான விளையாட்டுக்கள்
- கணனி அச்சு, றோணியோ வேலைகள்
- உள்ளூர் அழைப்புகள்
- போட்டாப் பிரதி
- லமினேற்றிங்
- ஸ்பைரல் பைண்டிங்

குறிப்பு :
மேற்படி எமது நிறுவனத்தில் பணிபுரிவதற்கு ஆண்,பெண் பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். (கணனி அறிவும் தொலைத் தொடர்பு அறிவும் உடையவர் விரும்பத்தக்கது)

இன்ரநெற் அழைப்புகள் 7/=

தொடர்பு:

**Vasantham Net Zone,**
M.M.V.Road, Nelliady,
E-mail vasanthamnetzone@yahoo.com
phone: 0777 717402.
(38819)(42-32-14-15)



## மதுரை மீனாட்சி அம்மன்



### அருள்வாக்கும் ஜோதிடமும்

K.V. கோவிந்தசுவாமி & ஸ்ரீ லட்சுமி

இந்தியாவிலிருந்து கணவன், மனைவி இருவரும் வருகைதந்துள்ளார்கள். இவர்கள் கைரேகை மூலம் நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், விவாகப் பொருத்தம், கல்வி, வெளிநாடு செல்லும் வாய்ப்பு, நோய் போன்றவற்றிக்குப் பரிகாரம் கூறுவார்கள். ஒருமுறை சந்தித்துப் பாருங்கள். (காலை 9 மணியிலிருந்து இரவு 8 மணி வரை)

தொடர்பு:- 50, Navalar Road, Jaffna. (Near Manohara Theartre Back side).
T.P:- 0776446525. (38376)(54-14-15)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 17 - 04 - 1907 | 07 - 08 - 2004 |

### திருமதி.தில்லைவனம் வீரவாகு

அன்புடனும் பண்புடனும் எமை அணைத்திட்ட அம்மா
இன்றில்லை எம்மை அன்புடனும் அரவணைக்க
சென்ற நாள்களோ ஈராறு மாதங்கள் அம்மா!
இன்னும் ஆறாத நிலையில் தவிக்கின்றோம் நாம்.
-வீ.செல்வராசா (மகன்)

தாவடி தெற்கு,
கொக்குவில். (38805)(32-14-15)
திருமதி இரத்தினமணி மகேந்திரன் குடும்பத்தினர்.

## 11 ஆவது வருட நினைவுத்துளி



| அவசியப் பிறப்பு | அவசர அழைப்பு |
|---|---|
| 12 - 08 - 1982 | 14 - 08 - 1994 |

### அமரர் ஆறுமுகம் லோகேஸ்வரன்

(இளைப்பாறிய ஆசிரியர், யா/அச்சுவேலி மத்திய கல்லூரி)
திதி: பூர்வபக்க அட்டமி (13.08.2005)

"நீத்தல் வாழ்வின் முடிவல்ல
புதியதொரு புனித வாழ்வின் தொடக்கம்.

உங்களில் வாழும்:
அன்பு மனைவி, மகள்,
மகன், மருமகன்,மருமகள்,
பேரக்குழந்தைகள்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி. (38804)(32-14-15)

## முதலாவது பிறந்ததின வாழ்த்து




Happy Birthday

நோர்வேயில் வசிக்கும்
நிக்சன் - பெல்சியா தம்பதிகளின்
செல்வப் புதல்வன் **செல்வன் பெல்சன்**

தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று (13.08.2005) சனிக்கிழமை நோர்வேயில் உள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை நோர்வேயிலுள்ள அன்பு அப்பா, அம்மா, அண்ணன் நொறிஸ், யாழ்ப்பாணத்தில் வசிக்கும் அப்பப்பா (தங்கறாஜர்), அப்பம்மா (ஆசைக்கிளி), பிரான்ஸில் வசிக்கும் மாமா (கொயன்ஸ்), மாமி (வதனா), மச்சான் (ஏனோஸ்), மச்சாள் (எஸ்தர்), லண்டனில் வசிக்கும் மாமா (மதன்), நோர்வேயில் வசிக்கும் சித்தப்பா (யூடி), யாழ்ப்பாணத்தில் வசிக்கும் மாமிமார், மாமாமார், சித்தப்பாமார், மச்சான்மார், அப்பப்பாமார், அப்பம்மாமார், தாத்தாமார்,பேர்த்திமார், சகோதரர்கள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் பெற்றுப் பல் லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

இல: 99 பாங்ஷால் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 021 - 222 3693
(C/44049) (54 -
(C/44049)(32-14-15)

தகவல்:
சவிரியான் தங்கராஜர்
(அப்பப்பா)

## தேவை

யாழ்.நகரிலுள்ள ஆங்கில மருந்தகத்திற்கு விற்பனை உதவியாளர் தேவை. விண்ணப்பதாரர் க.பொ.த.சாதாரண தரம் அல்லது உயர்தரம் (ஆங்கிலம், விஞ்ஞானம் உட்பட) சித்தியுடன் அனுபவமுள்ளவராகவும் யாழ். நகரின் அண்மித்த பகுதிகளில் வசிப்பவராகவுமிருத்தல் விரும்பத்தக்கது. ஆண், பெண் இருபாலாரும் சுயவிவரத்துடன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல: 2669,
மே/பா.உதயன்,
யாழ்ப்பாணம்.
(38811)(42-32-14-15)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி ரஞ்சிதகுமாரி பாலசுப்பிரமணியம்
அவர்களின் அன்பு மகன்

### செல்வன் திருக்குமரன்

11.08.2005 இல் காலமாகியதையிட்டு எமது ஆழ்ந்த அஞ்சலியை அன்னாருக்குச் செலுத்துவதுடன், துயரில் மூழ்கியிருக்கும் அவரது குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சங்குவேலி
அ.த.க.பாடசாலை,
சங்குவேலி. (அ/44059)(32-14-15)

முன்னாள் அதிபர்,
இளைப்பாறிய உப அதிபர்,
ஆசிரியர்கள்.

## Organ/Violin/Notes

Organ/Violin, வீணை, புல்லாங்குழல் போன்ற இசைக் கருவிகளுக்கான சினிமாப்பாடல்களின் இசைக் குறிப்புகள் பாகம் (1-40) வரையும் கேள்வி ஞானம் ஆகிய புத்தகங்கள் விற்பனைக்குண்டு.

S.S.Rajeendran
75, Temple Rd,Nallur,
(38794) Jaffna.T.P. 0713055991
(நல்லூர் ஆலயத்திலிருந்து 500m தெற்கே)
(21-32-14-15)

## பெண்பிள்ளைகள் தேவை

எமது மிக்சர் கம்பனியில் மிக்சர் பொதி செய்வதற்கு பெண்பிள்ளைகள் தேவை.
நேரில்வரவும்.
தொடர்புகளுக்கு:
**நபிலாஸ் கொமினிக்கேஷன்,**
நெல்லண்டை வீதி,
தும்பளை, பருத்தித்துறை.
0777 114405. (38813)(42-32-14-15)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

### வெளிவாரிப் பரீட்சைகள்

1. கலை முதற் தேர்வு- 2002&2003

மேற்படி பரீட்சைகள் 24.08.2005 தொடக்கம் 17.09.2005 வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் மற்றும் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலும் பின்வரும் ஒழுங்கில் நடைபெறவுள்ளன.

கட்டம்- 1

24.08.2005 தொடக்கம் 04.09.2005 வரையிலான காலப் பகுதியில் இடம்பெறும் பரீட்சைகள் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் உள்ள பரீட்சை மண்டபங்களில் நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

கட்டம்- 2

10.09.2005 தொடக்கம் 11.09.2005 வரையிலான காலப்பகுதியில் இடம்பெறும் பரீட்சைகள் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும் நடைபெறும்.

கட்டம்- 3

17.09.2005 ESL1.0 ஆங்கிலப் பரீட்சை கட்டம்-2 இல் குறிப்பிட்ட இரு பரீட்சை நிலையங்களிலும் நடைபெறும்.

நேர அட்டவணைகளையும் பரீட்சை அனுமதி அட்டைகளையும் யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் 20.08.2005 தொடக்கம் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலதிக விவரங்களுக்கு 021-2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளலாம்.

பதிவாளர்
12.08.2005
(ப-44060) (39-32-14-15)

## பதவி வெற்றிடம்

யாழ்.நகரில் இயங்கும் பிரபல விற்பனை நிலையத்திற்கு கீழ்க் காணும் பதவிக்குப் பெண்பிள்ளைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவி:அலுவலக லிகிதர் (பெண்கள்)

தகைமை: ஜி.சி.ஈ சாதாரண தரம் ஆங்கிலம், வர்த்தகம், கணிதம் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மேற்படி பதவிக்குத் தங்கள் சொந்தக் கையெழுத்தினால் எழுதிய சுயவிவரக்கோவையை 19.08.2005 வெள்ளிக்கிழமைக்கு முன் கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**றூபா பன்முக வர்த்தக நிலையம்,**
104A, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
(38812)(32-14-15)

## கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஓக.13

வடக்கு - கிழக்கு மாகாண முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தின் சாவகச்சேரி பிரதேச முன்பள்ளிகளின் கண்காட்சி இன்று சனிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பிரதேசக் கட்டமைப்புத்தலைவர் எஸ்.குகதாசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் சிறுவர் நன்னடத்தை அதிகாரி சி.சிவகரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (204)

## ARUNS SPORTS SPOT

### விற்பனையாளர் (SALES MAN) தேவை

எமது நிறுவனத்தில் வேலை செய்வதற்கு ஆண் விற்பனையாளர் தேவை

வயது : 20 - 40

கல்வி : ஆகக்குறைந்தது க.பொ.த. (சாதாரணம்)

விளையாட்டு உபகரணங்கள் பற்றிய அறிவு விரும்பத்தக்கது.சம்பளம் பேசித் தீர்க்கலாம்.

15/08/2005 திங்கட்கிழமை காலை 9 மணிமுதல்

தேவையான ஆவணங்கள், நற்சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

**அருண்ஸ் ஸ்போட்ஸ் ஸ்பொட்**
**253, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

# மக்கள் முகம்



யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தின் பிரதம எழுதுவினைஞர் திருமதி ஸ்கந்தேஸ்வர தேவி மகேஸ்வரநாதன் தனது 33 வருட அரச சேவையிலிருந்து கடந்த மாதம் ஓய்வு பெற்றுள்ளார். இவர் அராலி இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவியும் பேராதனைப் பல்கலைக்கழக கலைப் பட்டதாரியுமாவார். அராலி வடக்கு செட்டியார் மடத்தடியைச் சேர்ந்த இவர், 1972 ஆம் ஆண்டு அரச சேவையில் எழுதுவினைஞராக சேர்ந்து மன்னார்க் கச்சேரி, யாழ்ப்பாணம் கச்சேரி, கொழும்பு தொழில் நீதிமன்றம், மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம், சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றம் ஆகியவற்றிலும் எழுதுவினைஞராகக் கடமையாற்றியுள்ளார்.

# நூல் வரிசை



நூல் : சிந்தனைச் சோலை
ஆசிரியர் : பாவலர் தெ.அ.துரையப்பாபிள்ளை (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி நிறுவுநரும் முதல் அதிபரும்)
வெளியீடு : தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி நூற்றாண்டு விழா (2010) உலகப் பழைய மாணவர் சங்கக்குழு

யாழ்ப்பாண மண்ணில் பிறந்து தமிழ்த்தொண்டராய் வாழ்ந்தோர் வரிசையில் பாவலர் தெ.அ.துரையப்பாபிள்ளையும் ஒருவர். 19ஆம் நூற்றாண்டில் தமிழ்ப் பணியை முன்னெடுத்தவர். யாழ்ப்பாணத்து நாவலரைப் போல நமது தேசத்தின் எதிர்காலம் பற்றி எண்ணிச் செயற்பட்டவர். இளமையிலே தமிழறிஞராகிப் பாவலர் எனப் பெருமை பெற்றவர். அவரது பணிகளை இன்று அடையாளம் காணும் வகையில் ஓர்அரிய முயற்சி நடைபெற்றுள்ளது. 19 ஆண்டுகள் அவர் நிறுவுநர் அதிபராகக் கடமையாற்றிய கல்லூரியின் உலகப் பழைய மாணவர் சங்கம் அவருடைய ஆக்கங்களை மீள்பதிப்பாக வெளியிடுகிறது. கல்லூரியின் பொன்விழா ஆண்டிலே (1960) வெளியிடப்பட்ட 'சிந்தனைச் சோலை' என்ற தொகுப்பு நூலை நூற்றாண்டு (2010) நினைவு விழாவின் முன்னோடி நிகழ்வாக மீள் பதிப்பாக இந்த ஆண்டு வெளியிட்டு அறிமுகம் செய்கிறது.

சிந்தனைச்சோலை நூற்றாண்டு நினைவுப்பதிப்பு கல்லூரியின் வயதைக் காட்டி நிற்கும் அதே வேளையில் பாவலரின் தமிழ்ப்பணியின் சிறப்பையும் வெளிப்படுத்துகிறது. நூலின் அமைப்பு இதனை உறுதி செய்துள்ளது. பாவலரின் சிந்தனைச் சோலையில் அனைவரும் நுழைந்து தாம் விரும்பிய பலரை நுகர ஏற்ற தொகுப்பு. வெளியீட்டுரை, மதிப்புரை, வாழ்த்துரை, அணிந்துரை, முகவுரை என்ற வாயில்களில் சோலையைப் பற்றிய செய்திகளையும் தகவல்களையும் அறிந்து உள்ளே நுழையும் வாசகருக்கு, நூலாசிரியர் வரலாறு அறிந்து, உள்ளம் நிறைவுடன் இலக்கிய மலர்களை நுகர வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.நமது முன்னோடிகளின் சிந்தனைச்சோலை பற்றிய கருத்து எம்மையும் படிக்கத்தூண்டும். தெ.து.ஜயரத்தினம் வருமாறு பதிவு செய்துள்ளார்.

'கீதரச மஞ்சரியின் இனிய கீர்த்தனைகள் அந்நாளிலே
யாழ்ப்பாண நாட்டின் பல பகுதிகளிலும் பரந்திருந்தன
பலரும் அக்கீர்த்தனைகளை மனப்பாடம் செய்து
நாவாரப்பாடி மகிழ்ந்தனர். அவற்றைப்பாடிப்பாடி
இன்புறும் முதியோர் பலரை இன்றும் நாம் காணலாம்.
இலக்கிய கலாநிதி பண்டிதமணியின் மதிப்புரை பாவலரைச் சிறப்பாக அறிமுகம் செய்துள்ளது.
உயர்திரு. தெ.அ.துரையப்பாபிள்ளை அவர்கள் நாவலர் அவர்களுக்குப்பின்
நாவலர் அவர்களைப் போலவே நமது நிலையையும் நமது தேசத்தின் போக்கையும்
நன்கு சிந்தித்திருக்கின்றார்கள். நாவலர் அவர்கள் வசனமூலம் தமது சிந்தனைகளை வெளியிட்டிருக்கின்றார்கள். கவிதை பிள்ளையவர்களுக்குக் கைவந்தது.'

பாவலரின் பாவன்மையில் மக்கள் கொண்ட மதிப்பை இக்கருத்துகள் காட்டும். பாவலரும் பாரதியும் சமகாலத்தவர் என்ற செய்தியை இப்பதிப்பு எடுத்துக்காட்டி பாவலரின் சிறப்பை மதிப்பிட்டுள்ளது. மயிலங்கூடல் பி.நடராசா, கோகிலா மகேந்திரன், பா.மகாலிங்கசிவம் என்ற பழைய மாணவர்கள் மூவரும் முகவுரையில் இதனைக் கூறித் தமது பணியை நிறைவுசெய்துள்ளனர். ஈழத்து இலக்கிய வரலாற்றில் ஓர் ஊற்றுக் கண்ணாகப் பாவலர் இருப்பதை எல்லோரும் உணரச் செய்துள்ளனர். பண்டிதர் சி.கதிரிப்பிள்ளை நூலாசிரியர் வரலாற்றை அறியத் தந்துள்ளமை வாசகரின் தேடலை நிறைவு செய்துள்ளது. இன்று மனித விழுமியங்கள் பற்றி எல்லோரும் தேடல் மேற்கொள்ளும் நிலையில் பாவலர் கவிதை வரிகள் இரண்டில் அதைக் காணமுடிகிறது.

''பெற்றார் குரு அரசர் உற்றார் ஆசிரியர் செய்
பெருநன்றியை ஒரு சிறிதும் அயரேல்''

அவருடை கவிதைக் கூற்று 'சிந்தனைச் சோலை' மறுபதிப்பின் நோக்கையும் விளக்குகிறது. நன்றிமறவாத நல்ல மாணவருடைய காலம் உணர்ந்த பணி பாராட்டுக்குரியது. எம்மிடையேயும் ஒரு பாவலர் வாழ்ந்தார் எனப் பெருமையுடன் தலை நிமிர்ந்து செல்லவும் வாய்ப்பளித்துள்ளது. ஈழத்து இலக்கிய வரலாற்றில் பாவலருக்குத் தனியிடம் உண்டு. உலகம் வாழ் தமிழ் மக்களின் நெஞ்சிலும் ஒரு நிலையான இடம் உண்டு. அதை எடுத்துச் சொல்லும் ஊடகமாக இந்நூல் உலகை வலம் வரவுள்ளது.

**- கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்.**



நூல் : தெரிதல் (ஆடி, ஆவணி - 2005)
வெளியீடு : அ.யேசுராசா, இல. 1 ஓடக்கரைவீதி, குருநகர், யாழ்ப்பாணம்.

தெரிதல் சஞ்சிகையின் ஆடி- ஆவணி மாத இதழ் வெளிவந்துள்ளது. கலை, இலக்கிய, சமூகம் சார்ந்த விடயங்களை அக்கறையோடு அணுகும் தெரிதல், இவை தொடர்பாக இளைய தலைமுறையின் கவனத்தை ஈர்க்கவும், பிரக்ஞையை ஏற்படுத்தவும் முனைகிறது. சோ.பத்மநாதன் எழுதிய ஷினுவ ஆச்சேபேயின் **Things Fall Apart** நாவல் பற்றிய அறிமுகக் குறிப்பு, இயல் விருது பெற்ற இ.பத்மநாப ஐயரின் ஏற்புரையும் குறிப்புக்களும், கவிநேசன், சண்முகன், அலெக்ஸ் பரந்தாமன் ஆகியோரின் கவிதைக் களம் ஞானரதன், சித்தாந்தன் ஆகியோரின் சினிமா பற்றிய கட்டுரைகளும், ச.இராகவனின் போலி ஜனரஞ்சக எழுத்தாளர்கள் பற்றிய தொடரும், தெரிதலை நிறைத்துள்ளன.

கலை, இலக்கியம், சினிமா தொடர்பான காத்திரமான தகவல்களை வழங்கும் தெரிதலில் பிழையாகப் பயன்படுத்தப்படும் தமிழ்ச் சொற்களையும், அவற்றின் சரியான அமைப்பையும் தொடர்ந்து தந்துகொண்டிருப்பது பலருக்கும் உபயோகமான விடயம். 8 பக்கங்களுக்குள் இவ்வளவு விடயங்களையுந் தாங்கிவரும் இவ்விதழின் விலை 5 ரூபாவாகும்.

**-இயல்வாணன்.**






## தெய்வீக இசையரங்கில்

யாழ்ப்பாணம்,ஓக.13

நல்லூர் முருகன் ஆலயப் பெருந்திருவிழாக் காலத்தையொட்டி, நல்லூர் இளங் கலைஞர் மன்றம், தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலயத்தின் ஆதரவுடன் நல்லூர் துர்க்கா தேவி மணிமண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக இசையரங்கில் நான்காம் நாளான இன்று சனிக்கிழமை எஸ்.ஞானசொரூபனின் பாட்டுக் கச்சேரி இடம்பெறும்.

அணிசெய் கலைஞர்கள்:- வயலின் வி.மதுரா, மிருதங்கம் கே.அனந்தகோபன், கெஞ்சிரா என்.மாதவன். (ஓ-203)


## மலர் வெளியீடு தாமதம்

நல்லூர்,ஓக.13

யாழ்.மாநகர சபையின் இந்து சமய விவகாரக் குழுவின் உற்சவகால மலரான நல்லைக் குமரன் மலர் 5 ஆம் நாள் உற்சவத்திற்கு முன்னதாக வெளியிடப்பட இருந்தது. எனினும், தவிர்க்க முடியாத காரணத்தால் வெளியீடு தாமதமாகுமென தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-111)

# நல்லூர் உற்சவ காலச் சிறப்பம்சம்

*4 ஆம் நாள் உற்சவம்*



## தேசமதைக் காத்திடய்யா!

*ஆடிவரு மயிலேறு*
*ஆணழகா ... முருகா*
*நம் அவலங்கள் அடியோடு*
*மண்ணினிலே மறைய...*
*கோடிமுறையுனைப் பணிந்தோம்*
*கோமகனே .... முருகா*
*கொண்டவள்ளி தெய்வானை*
*மணவாளா...*

*பாடித்துதிக்கும் அன்பர்களின்*
*பழவினைதீர்க்கும் பாலகா*
*நாடிவரும் அடியவருக்கு*
*நலமளிக்கும் நல்லூரா*
*தேடியே நினைச் சரணடைந்தோம்*
*தேசமதைக் காத்திடய்யா!*

**- க.நாகேஸ்வரா.**

## உன்னைத் தொழுதுய்வேன்!

*அருணகிரியின் திருப்புகழில் முருகன்*
*அழகெழில்கோலம் கண்டேன்*
*கச்சியப்பன் பாட்டதிலே கந்தன்*
*கம்பீரக் காட்சி கண்டேன்*

*நல்லைக்குமரன் நாமம் சொல்ல*
*தொல்லை வினை தீரக்கண்டேன்*
*நம்மவர் துன்பமெல்லாமவனருளால்*
*தூரவிலகியோடக் கண்டேன்*

*தேரடிச் செல்லப்ப முனியுரைத்த உண்மை*
*'ஒரு பொல்லாப்புமில்லை' யென உணர்ந்தேன்*
*தேறினேன் சித்தம் தெளிந்தேன் தினம்*
*உன்னைத் தொழுதுய்வேன்!*

**-நயினையான்.**

## நல்லையம் பதியை நாடிவா!

*வேலவா தமிழ் தந்தவா*
*வேடனாக வந்த வடிவேலவா*
*ஞாலம்வா நம்மை தேடிவா*
*நல்லவை நமக் கருளவா*
*பாலகா தேவர்குறை தீர்த்தவா*
*பார்வதி சக்தி நிறைந்தவா*
*நீலமா மயிலில் ஏறிவா*
*நல்லை யம்பதியை நாடிவா!*

**- அரியாலையூர் சி.சிவதாசன்**

## எழுந்தருள்க வேலா!

*இல்லங்கள் எங்கும் இறைபக்தி பரவ*
*உள்ளங்கள் உவகையில் உயர்வு காண*
*இல்லாரும் உள்ளோரும் எல்லோரும் ஒன்றாய்*
*இணைந்து மகிழ்ந்து அவன் புகழ் பாட*
*வெள்ளை மல்லிகை நல்லை முல்லை*
*வேலவன் வாசலில் வாசனை வீச*
*நல்லைநக ரமர்ந்து எம்மைக் காக்கும்*
*நல்லூர் முருகனே எழுந்தருள் இன்று!*

**குளப்பிட்டி க.அருமைநாயகம்.**

## மகிழ்ந்து வாழ்ந்திட அருள்வாய்!

*அந்த யுகத்தின் கந்தா உன்னை*
*நித்தம் நாங்கள் போற்ற வேண்டும்*
*முந்தை மரபுகள் சிந்தையில் ஏறி*
*பைந்தமிழ் முந்தி சிந்திட வேண்டும்*
*புந்தியில் காந்தியம் அந்திமம் வரையும்*
*எந்தையர் ஏந்தி வந்திட வேண்டும்*
*சொந்த இந்த பந்த மண்ணில்*
*சேர்ந்து வாழ்ந்திட அருள்வாய்!*

**- ந.விநோதரன்.**

## வைத்திய சேவை இடமாற்றம்

குருநகர்,ஓக.13

ஊர்காவற்றுறை அடைக்கலகூடாரசபை மண்டபத்தில் இயங்கி வந்த 'கியுமெடிக்கா' வைத்தியசேவை தற்போது ஊர்காவற்றுறை பொது நூலகத்துக்கு அருகில் அமைந்தள்ள அண்ணா சனசமூக நிலைய ஒன்றுகூடல் மண்டபத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. (8-51)


**Dialog டயலொக்**

100/=, 400/=, 1000/= விலைகளில் கையடக்கத் தொலைபேசி அட்டைகளையும் Sim இணைப்புகளையும், மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள -

சகல விதமான தொலைபேசி அட்டைகளையும் இணைப்புகளையும் (Connection) மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும் சகல தபால் அலுவலக சேவைகள் துரித தபால் சேவைகள் உள்நாட்டு வெளிநாட்டுப் பொதிகள் (Parcel) சேவைகள்

எந்நேரமும் உன்னுடன்...

WESTERN UNION பணப் பரிமாற்றம்

உலகின் எப்பாகத்தில் இருந்தும் ஒரு சில நிமிடங்களில் பணத்தைப் பெற்றுக்கொள்ளவும் இன்னும் பல சேவைகளையும் ஒரு கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடுங்கள்:

**Sri Murugan**
**Tele Communication & Agenc Post Office,**
303, K.K.S. Road, Jaffna.
T.P.: 021 222 5392, Fax: 222 3214

(சி-43268) (2.15.45)



**Danish Red Cross**

**Srilanka Red Cross Society. International Federation of Red Cross and Red Crescent Societies Danish Red Cross Psychosocial Support Program**

### Staff Assistant/Driver(1)

**Must possess the following:**

- Good written and spoken knowledge of English and Tamil, a working knowledge of Singhala would be an advantage
- Minimum 2 years experience in driving a light vehicle
- Basic mechanical skills.

**Responsibilities include:**

- Ensuring the proper use of Vehicles
- Performance of daily inspections and maintenance of vehicles
- Providing basic office support
- Assist in logistical tasks, translation, and procurement, when required

The position will be at the SLRCS Jaffna branch
Starting date: as soon as possible, with an initial contract of 1 year.
Please submit application and CV to the following address before the 18th of August 2005.

**Director General**
**In care of: Chairman of SLRCS Jaffna**
**SLRCSJaffna branch**
**73, Kandy Road, Jaffna.**

(C/44046) Only Selected candidates Will contacted (21.32.15.45)


## நெஞ்சில் நீங்காத இரண்டாண்டு நினைவுடன்

மண்ணில் 21 - 06 - 1976



விண்ணில் 05 - 08 - 2003

அமரர்

**மகாலிங்கம் மகேஸ்வரன் (ரகு)**

(ஏழாலை மேற்கு, ஏழாலை - கலைவாணன் வெதுப்பக உரிமையாளர்)

திதி: 13-08-2005

ஆண்டுகள் இரண்டு சென்றாலும்
ஆறாதய்யா ரகு நம் துயரம்
ஆண்டவன் திருவடி சென்ற நாள் தொட்டு
மாறாத்துயருடன் தவிக்கின்றோம்
உன் வாழ்வு மலருமெனக் காத்திருக்க
காலனவன் உன்னைக் கவர்ந்து சென்றானே
மற்றுமொரு பிறவியெடுத்து எம்முடன்
இம்மண்ணுலகத்தில் வந்து சேரப்பா
ரகுவே நின் நினைவுகளுடன் தினம்
மன்றாடுகிறோம் இறைவனடியையே!
உன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்...

அம்மா, அண்ணா, அண்ணி,
தம்பிமார், தங்கை.

தகவல்-
ம. ரதன் (சகோதரன்)
ஏழாலை மேற்கு, ஏழாலை.

## சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு மருத்துவ உபகரணங்கள் அன்பளிப்பு

தென்மராட்சி,ஓக.13

சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு 80ஆயிரம் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டிலிருந்து வருகைதந்த டாக்டர் சிவபாதம் என்பவர் இப்பொருள்களை டாக்டர் அம்பிகைபாகனிடம் கையளித்தார்.

இரத்த அமுக்க பரிசோதனைக் கருவிகள் மூன்று, இரத்தத்தில் சீனி அளவைக் கணிக்கும் கருவி (குளுக்கோ மீற்றர்) மூன்று, மருந்து வகைகள் ஆகியவையே வழங்கப்பட்டவையாகும். (8-117)

## படகுச்சேவை நேரமாற்றம்

குருநகர்,ஓக.13

ஊர்காவற்றுறை-காரைநகர் படகுப் பாதைச் சேவை நேரங்கள் தற்போது மாற்றியமைக்கப்பட்டுள்ளதாகப் பாதைப் பொறுப்பாளர் நடராசா புஸ்பராசா தெரிவித்தார்.

ஊர்காவற்றுறையிலிருந்து தினமும் காலை 7.30மணி, 8.30 மணி, 10.30 மணி, நண்பகல் 12.00 மணி, பிற்பகல் 2 மணி, 3மணி, 4 மணி 5.30 மணிக்கும் -

காரைநகரிலிருந்து காலை 8 மணி, 9 மணி, 11 மணி, நண்பகல் 12.30 மணி, பிற்பகல் 2.30 மணி, 3.30 மணி, 4.30 மணி, 6 மணிக்கும் இந்தப் படகுச் சேவை நடைபெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (8-51)

## கேரதீவு வீதியில் 9 பாலங்கள் ரூ.23 கோடி செலவில் புனரமைப்பு

யாழ்ப்பாணம்ஓக.13

யாழ்ப்பாணத்திற்கும் மன்னாருக்கும் இடையில் நாவற்குழி, கேரதீவு பிரதேசங்களை இணைக்கும் வீதியிலுள்ள ஒன்பது பாலங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

ஐக்கிய ராஜ்சியத்தின் நிதி ஒதுக்கீட்டில் வடக்கு - கிழக்குப் பாலங்கள் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் 23 கோடி ரூபா செலவில் இந்தப் புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இந்தப் பகுதியில் புனரமைக்கப்பட்டு வரும் பாலங்களில் 7 பாலங்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலும் 2 பாலங்கள் அரச கட்டுப்பாட்டுப் பகுதியிலும் அமைந்துள்ளன

பள்ளமடு, இலுப்பைக்கடவை, பறையனாறு ஆகிய இடங்களில் உள்ள தலா இரண்டு பாலங்களும் சித்தியாறு பகுதியில் உள்ள ஒரு பாலமுமாக 7 பாலங்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலும் அரிப்பு, அரிவியாறு ஆகிய இரண்டு பாலங்கள் அரச கட்டுப்பாட்டுப் பகுதியிலும் அமைந்துள்ளன.

யாழ்ப்பாணத்திற்கும் மன்னாருக்கும் இடையேயான கேரதீவு வீதி கடந்த 30 வருடங்களாகத் திருத்தப்படாத நிலையிலிருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (9-ரி)

## சேதமடைந்த படகுகள் திருத்தியமைப்பு

குருநகர்ஓக.13

ஆழிப்பேரலையால் சேதமடைந்த இயந்திரப் படகுகளைத் திருத்தியமைக்கும் பணிகள் யாழ். கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் கல்லூரியால் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

காரைநகர், இளவாலை, இன்பருட்டி ஆகிய பகுதிகளில் இதுவரை சுமார் 55 படகுகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளதுடன் வல்வெட்டித்துறையில் மூன்றரைத் தொன் நிறையுள்ள இயந்திரப் படகொன்றும் திருத்தியமைக்கப்பட்டு வருவதாக இக்கல்லூரி அதிபர் எம். செபஸ்ரியாம்பிள்ளை தெரிவித்தார்.(8-51)

## ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள்

தென்மராட்சிஓக.13

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் இரண்டாம் மொழி (சிங்களம்) கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

தரம் 4, 5 ஆகிய வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு நாளை மறுதினம் 15ஆம் திகதி தொடக்கம் ஐந்து நாள்களுக்கும் இடைநிலைக் கல்வி வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு 16ஆம் திகதி தொடக்கம் ஆறுநாள்களும் செயலமர்வுகள் நடைபெறவுள்ளன.

இரண்டாம்மொழி (சிங்களம்) கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் அறிவித்துள்ளார். (8-117)

## *செயற்றிட்ட பயிற்சி நெறி*

யாழ்ப்பாணம்,ஓக.13

கொழும்பு மனிதநேய அமைப்புகளின் கூட்டமைப்பின் அனுசரணையுடன் சமூக அபிவிருத்தி மன்றத்தின் ஏற்பாட்டில் சமாதானத்திற்கும் அபிவிருத்திக்குமான செயற்றிட்டப் பயிற்சிநெறி இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நீர்வேலி வேதவல்லி கந்தையா நினைவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (3-203)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 29 - 06 - 1922



விண்ணில் 26 - 07 - 2004

அமரர்

**பொன்னம்பலம் தேவராசா**

ஆண்டொன்று ஆனாலும் அழியவில்லை எம் மனத்துயரம்
அன்பையும் அரவணைப்பையும் எம்மீது கொட்டி
எமக்கெல்லாம் வழிகாட்டியாக இருந்த எமது அன்புத்
தெய்வமே!
எமையெல்லாம் துன்பக் கடலிலே தவிக்கவிட்டு நீங்கள்
சென்றாலும் நாம் என்றென்றும் உங்கள் நினைவுடனே
வாழ்கின்றோம்
மனித நேயம் மிக்க பண்பாளரே
என்றும் எம் நினைவில் நிலைத்திருக்கும் தங்கள்
ஆத்ம சாந்திக்காக வேண்டிப் பிரார்த்திக்கிறோம்.

மனைவி,மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்
(லண்டன், கனடா)

நந்தாவில்,
கொக்குவில்.

தகவல்:
நடராசா சச்சிதானந்தன் (பேரமகன்).

(38770)(21.15.45)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி வைரமுத்து இரத்தினம்**

(நடிகமணி V.V.வைரமுத்துவின் துணைவி)

தோற்றம் 11-5-1928 | மறைவு 13-8-2005


தாய் என்ற பெயருக்கே தனித்துவமான இலக்கணமே!
தரணியிலே நாடகக் கலை வளரத் தண்ணீர் வார்த்த கற்பகமே!
பாய் மரமாய் பதிவிரதையாய்க் குடிகாத்த இரத்தினமே!
மாயவில்லை நீ மறக்கவில்லை நாம்
மானசீகமாய் வாழ்கின்றாய் எந்நாளும் எம்முடன் நீ!

*பிள்ளைகள், மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள்,*
*பூட்டப்பிள்ளைகள்,*
*பெறாமக்கள்.*

'சாரங்கா'
காங்கேசன் துறை.

(38716)(46-21-45-15)

## மரண அறிவித்தல்



**கணபதிப்பிள்ளை அப்புத்துரை**

(இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் யாழ். பிரதேச முகாமையாளர்)

மாதகலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை அப்புத்துரை அவர்கள் 09.08.2005 செவ்வாய்க் கிழமை மாலை 5 மணியளவில் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - பார்வதி தம்பதியரின் அன்பு மகனும் செல்வத்தின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற செல்லம்மா மற்றும் சிவசம்பு, வள்ளியம்மை ஆகியோரின் சகோ தரனும் உகந்தகுமார் (கனடா), சிந்தியா (கனடா), ஆகியோரின் அன்புமிகு தந்தையும் தனுசா (கனடா), விக்கினேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் சண்முகசுந்தரம், காலஞ்சென்ற தியாகராசா மற்றும் செந்தில்நாதன், சந்திரசேகரன், புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆகாஷ், அர்வின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.08.2005) சனிக்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மாதகல் போதி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பிரதான வீதி,*
*மாதகல்.*

தகவல்: *அ.உ.கந்தகுமார்.* (மகன்).

(38793)(21.19.45.15)

# அம்பாறைக் கரையோரம் ஹர்த்தாலினால் பாதிப்பு!

தமண, ஓக. 13

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப்பிரதேசங்களிலுள்ள சில இடங்களில் நேற்று வெள்ளிக்கிழமை ஹர்த்தால் கடைப்பிடிக்கப்பட்டது. இதனால் அப்பகுதிகளில் மக்களின் இயல்புவாழ்க்கை பாதிக்கப்பட்டது. எனினும் கல்முனை, கல்முனைக்குடி, மருதமுனை போன்ற பகுதிகளில் வழமையான நிலைமை காணப்பட்டது. அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனைப் பிரதேசங்களில் முழு அளவிலான கடையடைப்பு இருந்தது.

நேற்றுப் பகல் ஜும்ஆத் தொழுகைக்குப் பின்னர் சில பள்ளிவாசல்களின் அருகே எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் இடம்பெற்றன.

பிரதேசவாதத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசச் சுகாதார அமைப்புக்களின் ஒன்றியம் இந்த ஹர்த்தாலுக்கான அழைப்பை விடுத்திருந்தது. கல்முனையிலுள்ள சுகாதாரத் திணைக்களத் தலைவர் ஒருவர் தொடர்பான விவகாரமே இந்த ஹர்த்தாலுக்கான காரணம் என்று வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டது. எனினும் அமைச்சர் அதாவுல்லாவுக்கு ஆதரவு தெரிவிப்பதும் இதன் மறைமுகநோக்கம் என்று அப்பகுதிப் பிரமுகர்கள் கூறினர்.

நேற்றைய ஹர்த்தாலால் சாய்ந்தமருது, மாளிகைக்காடு, நிந்தவூர், ஒலுவில், பாலமுனை ஆகிய இடங்கள் கணிசமாகப் பாதிக்கப்பட்டிருந்தன. போக்குவரத்துக்கள் தடைப்பட்டிருந்தன. கடைகள் மூடப்பட்டிருந்தன. வங்கிகள், அரச அலுவலகங்கள், பாடசாலைகள் என்பவற்றில் வரவுகள் பெருமளவு குறைந்திருந்தன.

'நியூ ஈஸ்டன் ' கம்பனிக்குச் சொந்தமான பஸ்கள் பொலீஸ் மற்றும் விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்புடன் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன.

அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று ஆகிய பிரதேசங்கள் முழுமையாக முடங்கிப் போயிருந்தன. மக்களின் இயல்பு வாழ்க்கை அங்கு முற்றாக முடக்கப்பட்டிருந்தது.(எ-க)

## கோட்டாஞ்சேனையில் வர்த்தகர் சுட்டுக்கொலை

கொழும்பு, கொட்டாஞ்சேனையில் நேற்றுக் காலை வர்த்தகர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

வீடியோ கடை உரிமையாளரான வருண ஷாணக (வயது 42) என்ற வர்த்தகரே கொல் லப்பட்டவர் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

கொட்டாஞ்சேனை ஜோர்ஜ் ஆர்.டி.சில்வா மாவத்தையில் காலை 8.15 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இவர் வீட்டிலிருந்து கடைக்குச் சென்றுகொண்டிருந்த சமயம், ஓட்டோவில் வந்தவர்கள் எனக் கூறப்படும் இனந்தெரியாதநபர்கள் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச் சென்றுவிட்டனர் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த வர்த்தகர் அரசில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் அமைச்சர் ஒருவருக்கு மிக நெருக்கமானவர் என்று கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் பாதாள உலகத்துடன் தொடர்புடைய நபர்களால் நிகழ்த்தப்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-க)

## மேர்வின் மகன் மீது குற்றப்பத்திரிகை நேற்றுத் தாக்கல்

பிரதியமைச்சர் மேர்வின் சில்வாவின் மகனுக்கெதிராக சட்டமா அதிபர் திணைக்களம் நேற்று மேல்நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது.

கடந்த மாதம் 24ஆம் திகதி கொழும்பிலுள்ள ஐந்து நட்சத்திர விடுதியொன்றில் இடம்பெற்ற சம்பவத்தில் பிரதியமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் மாலிக்க சில்வா, அவரது நண்பர் சம்பத்குமார ஜானக்க ஆகியோர் பொலீஸாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தார்கள் என்று தெரிவித்து சட்டமா அதிபர் திணைக்களம் இந்த குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்துள்ளது.

தண்டனைச் சட்டத்தின் 323ஆவது பிரிவிற்கமைய பொலீஸாரை அச்சுறுத்தியமை, அவர்களுக்குக் காயம் ஏற்படுத்தியமை போன்ற குற்றச்சாட்டுகளும் இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளன. (எ-க)

# மரண அறிவித்தல்கள்

## சின்னராசா சின்னத்தம்பி



வைத்தியசாலை வீதி, தோப்பு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னராசா சின்னத்தம்பி அவர்கள் 10.08.2005 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னராசா - சிவகாமி தம்பதியரின் அன்பு மகனும் கதிரேசு வீதி, வவுனியாவைச் சேர்ந்த கந்தசாமி - காலஞ்சென்ற சௌபாக்கியவதி தம்பதியரின் அன்பு மருமகனும் சிவகாமசுந்தரியின் அன்புக் கணவரும் யசோதாதேவி (கனடா), வசந்தி (செலான் வங்கி, வவுனியா), சுரேஸ் (பல் வைத்தியர்), தினேஸ்குமார் (கனடா), விஜயகுமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவயோகநாதனின் (கனடா) மாமனாரும் கீர்த்தனா (கனடா), அஞ்சனா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் அன்னபூரணம், செல்வநாயகி, பாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.08.2005) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தோப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வைத்தியசாலை வீதி,*
*தோப்பு,*
*அச்சுவேலி.*
(38818)(42-38-11-13)

*தகவல்:*
*குடும்பத்தினர்*
*பாலசிங்கம் (தம்பி).*

## மயில்வாகனம் குலராசா

அளவெட்டி தெற்கு, பாடசாலை வீதியைச் சேர்ந்த மயில்வாகனம் குலராசா அவர்கள் நேற்று (12.08.2005) வெள்ளிக்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் புவனேஸ்வரியின் அன்பு மகனும் காலஞ்சென்ற இந்திராணியின் அருமைக் கணவரும் ரமேஸ், தர்சினி (சுவிஸ்) தர்சன், தர்மீகன், கம்சா (இந்தியா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (12.08.2005) வெள்ளிக்கிழமை இந்தியாவில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
*சுந்தரலிங்கம் ரோகினி (மச்சாள்),*
*தங்கராசா இந்திராணியம்மா (மாமி).*
(38831)(38-11-13)

## இலங்கைநாயகம் நடேசன்

*(ஒய்வு பெற்ற பிரதம லிகிதர் - தபாற் கந்தோர்)*

ஆதிமயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட இலங்கைநாயகம் நடேசன் நேற்று (12.08..2005) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான மகேசன், நிமலாதேவியினதும் லண்டனில் வசிக்கும் திருமதி விமாலதேவியினதும் அன்புச் சகோதரனும் ஹரிகரன், நகுலேஸ்வரி, நடராசா, திருநாவுக்கரசு, காலஞ்சென்றவர்களான முருகையா, கனகசபை, பரமேஸ்வரி, சிவபாதநாயகி, செல்வநாயகியின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.08.2005) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தெல்லிப்பழை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

***பாவனடைப்பு,***
***துர்க்காபுரம்,***
***தெல்லிப்பழை.***
(38832)(38-11-13)

**தகவல்:**
**மனைவி.**

## கந்தையா - ஐயாத்துரை

ஏழாலையைப் பிறப்பிடமாகவும் உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா ஐயாத்துரை அவர்கள் 12.08.2005 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பின்பு அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**இராசதுரை கெங்காதரன்**
**(மருமகன்).**
(சி-44081)(38-11-13)

## பாலசுந்தரம் றமணகுமார் (றமணன்)



மீசாலை கிழக்கு, மீசாலையைச் சேர்ந்த பாலசுந்தரம் றமணகுமார் (றமணன்) அவர்கள் 11.08.2005 வியாழக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் பாலசுந்தரம் - இராசகன்னிகா தம்பதியினரின் அன்பு மகனும் மதனகுமார், பாலறஜனி (கல்வியியல் கல்லூரி - மட்டக்களப்பு), சுவர்ணகுமார் (வருவாய் பகுதி - கிளிநொச்சி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.08.2005) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அல்லாரை சொற்புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

***மீசாலை கிழக்கு,***
***மீசாலை.***
(38833)(38-11-13)

**தகவல்:**
**மதனகுமார் (மதி).**


**SHAMROCK**
J/ஈச்சமோட்டை வீதி
O/L Paper Class
★ விஞ்ஞானம்
T.டார்வின்
★ கணிதம்
F.அருள்நேசன்
★ தமிழ்
G.ஜனகன்
Yr. 2 முதல் 11 வரை

**HOME FOR RENT**
**ARIYALAI – AVAILABLE**
**SEPTEMBER 1**
LARGE REWOVATED
BUNGALOW, NEAR SITHI
VINAYAGAR TEMPLE, 15 MINUTES
TO JAFFNA TOWN, MODERN
FACILITIES IN 10 LARCHAM
PROPERTY IDEAL FOR NGO'S
CONTACT # 0776435611
(38825)(38-11-13)

DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI
**வணிகப் பெருமக்களே!**
**DSI**
உங்கள் இல்லங்கள், பாடசாலைகள்,
விடுதிகள், நிறுவனங்களுக்கும்,
வாகனங்களுக்குமுகந்த,
DSI கால் மிதிகளை (Door Mats, Car Mats)
பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ளவும்.
13. நவீன சந்தை. மேல்தளம் யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 021 222 7621
DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI



## பதவி வெற்றிடம்

தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் இலவச கணினிப் பயிற்சி நிலையத்தின் யாழ்ப்பாணம், சாவகச்சேரி கிளைகளில் பணியாற்றுவதற்காக பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

**பதவி:** முகாமையாளர் / பிரதம விரிவுரையாளர் [முழு நேரம்]
**நிலையம்:** சாவகச்சேரி, யாழ்ப்பாணம்.
**வேதனம்:** நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

போதிய தகவல் தொழில்நுட்ப தகைமையுடன், திறமையும், அனுபவமும் உள்ளவர்கள் 7 நாள்களுக்குள் சுய விவரக்கோவையுடன் விண்ணப்பிக்கவும்.

இணைப்பாளர்,
தமிழ் தகவல்தொழில்நுட்ப ஒருங்கமைப்பு.
(சி-44077)(38-11-13)
401/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில்
11
-
11
-
1921



ஆண்டவன் அடியில்
14
-
07
-
2005

## அமரர் சீனிவாசகம் அன்னம்மா

சீர்பெறு பார்த்திப ஆண்டு மாண்புறு ஆனித்திங்கள் பூர்வ பக்க அட்டமி கூடிவரும் அத்தம் நட்சத்திரம் குருவாரம் தன்னில் உத்தமியாய் மகாதனையில் வாழ்ந்த சீனிவாசகம் அன்னம்மா அவர்கள் சேர்ந்தார் சிவன் நிழலில்
உங்கள் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

'திருநந்தி'
நீதிமன்ற வீதி,
மல்லாகம்.
(38830)(38-11-13)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.


**பொருளியற்கல்லூரி**
யாழ்ப்பாணம்
அளவையியல் -R.P. சர்மா
சனி - ஞாயிறு
**A/L 2006 - அலகு**
• பெறுகைமுறை
• பகுதி II
பிரிவு I - 9 - 10 - (ப.நே.)
பிரிவு II - 1 - 2 (ப.நே)
**A/L 2007 அனுமானம்**
அனுமதிகளை பெற்றுக்கொள்ளவும்
(38835)(38-11-13)

**SPOKEN ENGLISH WITH GRAMMAR**
LECTURES BY : MR. M.A. HARI
புதிய பிரிவு ஆரம்பம்: 14.08.2005 ஞாயிறு பி.ப. 3.30 மணி
SATURDAY
SUNDAY 3.30 P.M. – 4.30 P.M.
**HARY'S INSTITUTE**
இல.564, கஸ்தூரியார் வீதி,
(யாழ்.இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகில்) யாழ்ப்பாணம்.
(38828)(38-11-13)

**ராஜா** யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரேதின வெளியீடு காதல் புகழ் பரத்,
ரேணுகா மேனன்
**பெப்ரவரி 14**
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)

**நாதன்ஸ் சினிமா** யாழ்ப்பாணம்.
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடாக அர்ஜுன், சினேகா, கிரண், வடிவேல் நடித்த

**சின்னா**
கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)

**நாகம்ஸ்** சினிமா சுன்னாகம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின அதிரடி வெளியீடாக இளம் புயல் ஜெயம் ரவி, ரேணுகா மேனன், வடிவேல் மற்றும் பலர் நடித்த

**தாஸ்** (ரீகல்)
காட்சிகள்: 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே).

**மனோகரா** யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
மாதவன், சதா, கோவை சரளா மற்றும் பலர் நடித்த
**பிரியசகி**
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30.

# அமைச்சர் கதிர்காமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் கதிர்காமர் எழுதிய, சர்வதேச விவகாரங்கள் தொடர்பான நூல் குறித்த நிகழ்வு ஒன்று நேற்றிரவு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. அதி ல் கலந்துகொண்டுவிட்டுத் திரும்பும் வழியிலேயே அவர் சுடப்பட்டார் என்றும் சில செய்திகள் தெரிவித்தன.

## தலையிலும் நெஞ்சிலும் துப்பாக்கிச் சூடு

கதிர்காமரின் தலையிலும் நெஞ்சிலும் துப்பாக்கிச்சூடுகள் காணப்பட்டன என்று, மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. படுகாயமடைந்த அமைச்சர் கதிர்காமர் உடனடியாக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டார். அங்கு அவருக்கு அவசர அவசரமாக சிகிச்சையளிக்கப்பட்டது. ஆரம்பத்தில் இரு சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. நாட்டின் முன்னணி மருத்துவ நிபுணர்கள் உடனடியாக வைத்தியசாலைக்கு அழைக்கப்பட்டு அவருக்கு சிகிச்சைகள் வழங்கப்பட்டன. எனினும் சிகிச்சை பயனளிக்காமல் அவர் அதிகாலை 12.15 மணியளவில் உயிரிழந்தார்.

## ஜனாதிபதியும் பிரதமரும் ஆஸ்பத்திரியில்

நள்ளிரவில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா வைத்தியசாலைக்கு விஜயம்செய்து கதிர்காமரின் நிலைமையை நேரில் பார்வையிட்டார். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் ஆஸ்பத்திரிக்கு உடனடியாகச் சென்றார். முக்கிய அமைச்சர்கள் பலரும் உடனடியாக வைத்தியசாலைக்கு வந்திருந்தனர். சம்பவம் இடம்பெற்ற சிறிது நேரத்தில் முப் படைத்தளபதிகளும் உடனடியாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் கூடியிருந்தனர்.

இனந்தெரியாதவர்களே இந்தத் தாக்குதலை நடத்தினார்கள் என்று பொலீஸார் கூறுகின்றனர். எனினும் விடுதலைப் புலிகளின் தாக்குதல் இலக்குப் பட்டியலில் அவர் முதலி டத்தில் இருந்தார் என்றும் அவர்கள் கூறினர். அவர்களே இந்தக் கொலையைச் செய்திருக்கக்கூடும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

## இருவர் கைது என அறிவிப்பு

சம்பவம் இடம்பெற்ற உடனேயே இராணுவத்தினரும் பொலீஸாரும் உடனடியாக அப் பகுதியைச் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தி னர். சந்தேகநபர்கள் இருவர் உடனடியாகக் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக் கப்படுகின்றது. நள்ளிரவு முதல் கொழும்பு நகரில் சென்ற வாகனங்கள் அனைத்தும் படையினரால் தீவிர சோதனைக்குட்படுத்தப்பட்டன. சம்பவம் இடம்பெற்ற பகுதியில் வீடு வீடாகத் தேடுதல் இடம்பெற்றது.

# ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக ஜே.வி.பியுடன் பேச்சே கூடாது!

## சு.க. உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி கடும் உத்தரவு

கொழும்பு, ஓக. 13

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தனித்துப் போட்டியிடவுள்ளதால், அது தொடர்பாகக் கட்சியின் எந்தவொரு உறுப்பினரும் ஜே.வி.பியினருடன் எந்தவிதப் பேச்சுக்களிலும் ஈடுபடக்கூடாது என்று ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க கடும் உத்தரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை பிரதமரும், சு.கவின் ஜனாதிபதி வேட்பாளருமான மகிந்த ராஜபக்ஷ அலரிமாளிகையில் ஜே.வி.பியின் தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியதை

(18ஆம் பக்கம் பார்க்க)

ஜனாதிபதித் தேர்தலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்து ஜனாதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். அந்தச் சந்திப்பின் போது 'பிரதமருடனிருந்த சிரேஷ்ட அமைச்சர்கள் இருவரும் ஜனாதிபதியிடம் வாங்கிக் கட்டிக் கொண்டனர் என்றும் - இந்த விடயம் தொடர்பாக விசேட அறிவுறுத்தல்களை ஜனாதிபதியிடம் இருந்து பெற்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

வெள்ளிக்கிழமை அலரி மாளிகையில் நடைபெற்ற சந்திப்பில், ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பியினர் மஹிந்த ராஜபக்ஷக்கு ஆதரவு கொடுப்பது பற்றியே கலந்துரையாடப்பட் டது என்று தெரிகிறது. எனினும், இந்தச் சந்திப்பிற்கு சுதந்திரக் கட்சியின் பிரதமர் வேட்பாளரான சுற்றுலாத்துறை அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க அழைக்கப்பட்டிருக்கவில்லை. இதுவும் ஜனாதிபதிக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ள விடயம் என்று கூறப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் சு.கவுக்கு தாம் ஆதரவு வழங்க வேண்டுமாயின் நிறைவேற்றப்பட வேண்டியவை என்று கூறி ஜே.வி.பி. முன்வைத்த நிபந்தனைகளை ஜனாதிபதி அடியோடு நிராகரித்துவிட்டார். ஜே.வி.பியுடன் கூட்டுச் சேரவோ, அதன் நிபந்தனைகளை ஏற்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொள்கைகளை மாற்றுவதற்கோ தாம் தயாராயில்லை என்றும் ஜனாதிப்தி அடித்துக் கூறிவிட்டார் என அவரது மாளிகை வட்டாரங்கள் கூறின.

பொதுக்கட்டமைப்புக் குறித்த சு.கவின் நிலைப்பாடு அதன் தேர்தல் அறிக்கையில் தெளிவாக வெளியிடப்படும் என்றும், எக்காரணம் கொண்டும் அதில் மாற்றங்களையோ திருத்தங்களையோ செய்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என்றும் ஜனாதிபதி மேலும் கூறியிருக்கிறார்.

அலரிமாளிகையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற பேச்சுக்களில் கலந்து கொண்ட சிரேஷ்ட அமைச்சர் ஒருவரை தொலைபேசி ஊடாகத் தொடர்புகொண்ட ஜனாதிபதி, ஜே.வி.பியின் ஆதரவை பெறும் முயற்சிகளை உடனடியாக நிறுத்திவிடுமாறு உத்தரவிட்டுள்ளார். (எ-க)

# சட்டமா அதிபர் - தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதற்கு உயர் நீதிமன்றம் உத்தரவிடவேண்டும் என்று கோரும் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றை ஜாதிக ஹெல உறுமய உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. பிரதம நீதியசரசர் சரத் என். சில்வா தலைமையிலான நீதியரசர்கள் குழு அந்த மனுவை விசாரணைக்கு ஏற்க அனுமதியளித்தது.

இந்த மனு மீதான விசாரணை எதிர்வரும் 22ஆம் திகதி இடம்பெறவுள்ளது. அதற்கு முன்னர், எதிர்வரும் 15ஆம் திகதி, ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான தனது கருத்தைத் தேர்தல் ஆணையாளர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

அது தொடர்பாக நேற்றுமுன்தினம் சட்டமா அதிபர் கே.ஸி.கமலசபேசனைச் சந்தித்து ஆலோசனை கேட்டார் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க.

ஜனாதிபதித் தேர்தலை இந்த வருடமே நடத்தவேண்டும் என்று தான் கருதுகின்றார் என அவர் அப்போது தெரிவித்தார். ஆனால், அரசமைப்பின்படி தேர்தல் அடுத்த வருடமே நடத்தப்படவேண்டும் என்று சட்ட மா அதிபர் விளக்கினார். எனினும் தேர்தலுக்கான திகதியை அறிவிப்பது தேர்தல் ஆணையாளரின் அதிகாரத்துக்கு உட்பட்ட விடயம் அதனை அவர் சுதந்திரமாக மேற்கொள்ள முடியும் என் றும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதித் தேர்தல் குறித்த அறிவிப்பை தேர்தல் ஆணையாளர் ஒருவர் உரிய நேரத்தில் வர்த்தமானி மூலமே அறிவிக்க வேண்டும் என்று அரசமைப்புக் கூறுகின்றது. அவ்வாறிருக்கையில், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான வழக்கு ஒன்றில் தேர்தல் குறித்த தனது நிலைப்பாட்டை உயர்நீதிமன்றில் தெரிவிக்கமுடியுமா என்று தேர்தல் ஆணையாளர் சட்டமா அதிபரிடம் வினவியுள்ளார்.

தேர்தல் தொடர்பான அறிவிப்பை வர்த்தமானி மூலம் வெளியிடும் அதிகாரத்தை அரசமைப்பு தேர்தல் ஆணையாளருக்கே வழங்கியுள்ளது என்பதால் அவர் தனது கருத்தை நீதிமன்றிடம் சுதந்திரமாகத் தெரிவிக்கலாம் என்று சட்டமா அதிபர் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

அதேநேரம், உயர் நீதிமன்றதில் ஹெல உறுமய தாக்கல் செய்த மனுவை அக்கட்சி வாபஸ் பெற நினைக்கிறது என்ற விவரத்தை சட்டமா அதிபரிடம் தெரிவித்தார் தேர்தல் ஆணையாளர்.

ஆனால், உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றை அவ்வாறு இலகுவில் திரும்பப் பெற்றுக்கொள்ளமுடியாது என்று சுட்டிக்காட்டியுள்ளார் சட்டமா அதிபர். மனுவை விசாரணைக்கு ஏற்க நீதிமன்றம் அனுமதி வழங்கி பின்னர் இரு தரப்பினரின் இணக்கத்தின் அடிப்படையில் அதனைத் திரும்பப் பெறமுடியாது. அது தொடர்பான இறுதி முடிவை உயர்நீதிமன்றம்தான் தெரிவிக்கவேண்டும் என்றும்அவர் மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தல் விட யத்தில் கருத்து முரண்பாடு ஏற்பட்டிருப்பதால், தேர்தல் ஆணையாளர் சார்பாக சட்டமா அதிபர் திணைக்களத்தினால் உயர்நீதிமன்றில் ஆஜராக முடியாது என்றும் -

சட்ட மா அதிபர் திணைக்களம் எழுத்து மூலம் தயானந்த திஸநாயக்கவுக்கு அறிவித் துள்ளது.

தேர்தல் ஆணையாளர் தன் சார்பில் சட்டத்தரணி ஒருவரை நியமித்துக் கொள்ளலாம் என்றும் அது ஆலோசனை வழங்கியுள்ளது. (எ-க)

# ரூபவாஹினியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களில் மூழ்கியிருந்த சமயம் உள்ளே நுழைந்த இனந்தெரியாத துப்பாக்கி தாரிகள் இருவர் அவர்களை நோக்கிச் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். இருவரின் சடலங்களிலும் ஐந்து துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன என்று பொலீஸார் தெரிவித்தனர். அவர்கள் இறந்து கிடந்த இடங்களில் இருந்து பத்து வெற்றுத் தோட்டாக்களை பொலீஸார் கண்டெடுத்தனர்.

கொலைக்குப் மைக்ரோ ரக கைத்துப்பாக்கி பயன்படுத்தப்பட்டுள்ளது என்று பொலீஸார் தெரிவித்தனர். எனினும், இந்தக் கொலைகளுக்கான உண்மைக் காரணம் என்ன என்பது தெரியவரவில்லை என்றும் அவர்கள் கூறினர்.

சின்னத்துரை செல்வராஜா கொழும்பிலுள்ள பிரபல வர்த்தகர்களில் ஒருவர். பம்பலப்பிட்டி கின்ரோஸ் அவனியுவில் உள்ள 'கின்ரோஸ் இன்' என்ற லொட்ஜும், போக்குவரத்து சேவைகள் சிலவும் அவருக்குச் சொந்தமாக உள்ளன.

செல்வராஜா புளொட் இயக்கத்தின் ஆரம்பகால உறுப்பினர்களில் ஒருவராவார். கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக கொழும்பில் நிரந்தரமாகத் தங்கி வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார். இவர் வெளிநாடுகளுக்கு சட்டவிரோதமாக ஆள்களை அனுப்பிவந்தார் என்றும் -

அதனால் பல பிரச்சினைகளுக்கும் உள்ளாகியிருந்தார் என்றும் - பொலீஸார் கூறுகின்றனர்.

பொலீஸாருடன் நெருங்கிய உறவைக் கொண்டிருந்தார் என்ற காரணத்தால் புலிகள் இவரைச் சுட்டுக்கொன்றிருக்கலாம் எனவும் பொலீஸார் சந்தேகம் வெளியிட்டனர்.

ரேலங்கி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் ரூபவாஹினியின் 'ஐ' அலைவரிசை ஆகியவற்றில் அறிவிப்பாளராகவும், செய்தி வாசிப்பாளராகவும் பணியாற்றினார். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரான இவர், யாழ். பஸ் நிலையப் பகுதியில் இருந்த மணிக்குரல் ஒலிபரப்பு நிலையத்தில் ஆரம்பத்தில் பணியாற்றினார். தனது இனிமையான குரல் வளத்தினால் பின்னர் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இடம்பிடித்துக் கொண்டார். 1987 இல் அவர் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இணைந்தார். 2000 ஆம் ஆண்டுவரை அவர் அங்கு மூத்த அறிவிப்பாளராகப் பணிபுரிந்தார். பின்னர் ரூபவாஹினிக்கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றினார். இறக்கும் வரை அவர் அங்கு சுயாதீன ஊடகவியலாளராகப் பணியாற்றி வந்தார். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் ஒலிபரப்பாகும் 'உதயதரிசனம்' நிகழ்ச்சியின் அறிவிப்பாளராக அவர் இருந்தார். தனக்கென ஒருதனி ரசிகர் வட்டத்தையே அவர் கொண்டிருந்தார்.

1978 இல் வெளியான 'தெய்வம் தந்த வீடு' படத்தில் நடித்தமைக்காக அவருக்கு சிறந்த நடிகை விருது கிடைத்தது.

கொலை இடம்பெற்ற அவர்களது தொலைத் தொடர்பு நிலையத்தில் நான்குபேர் பணியாற்றுகின்றனர்.

சம்பவம் இடம்பெற்ற சமயம் அவர்களில் ஒருவர் பகல் உணவு எடுத்துவரச் சென்றிருந்தார் எனவும், மற்றொருவர் வங்கிக்குச் சென்றிருந்தார் என்றும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. ஏனைய இருவரும் எங்கு சென்றிருந்தனர் என்பது தெரியாது. எனினும், சம்பவம் இடம்பெற்ற பின்னர் அவர்கள் இருவரும் அங்குவந்து சேர்ந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. மேற்படி நான்குபேரையும் பொலீஸார் விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர். அவர்கள் அனைவரும் புளொட் இயக்க உறுப்பினர்கள் என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

பொலீஸ் புலனாய்வுப் பிரிவின் பொலீஸ் அத்தியட்சகர் சரத் லூகொட தலைமையிலான பொலீஸ் குழுவினர் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

கல்கிஸ்ஸ நீதிவான் திருமதி கிருசாந்தி சம்பவ இடத்திற்குச் சென்று மரண விசாரணைகளை மேற்கொண்டார். (எ-க)

## யாழ். ஆஸ்பத்திரியில் சடலம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,ஓக.13

நெடுந்தீவுக் கடலில் கரையொதுங்கியதாகத் தெரிவித்து நேற்றிரவு சடலம் ஒன்று யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறைப் பொலீஸார் நேற்றிரவு 7 மணியளவில் இந்தச் சடலத்தை ஒப்படைத்தனர்.

அடையாளம் காணமுடியாதவாறு மிகவும் உருக்குலைந்த நிலையில் காணப்பட்ட இந்தச் சடலம் யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

(எ-ரி-78)

## சுதந்திர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்வுமல்ல.

தமிழ்க் குழுக்களிடையிலானமுரண் பாடே இக்கொலைக்குக் காரணமாக இருக் கலாம் எனக் கருதப்படுகிறது. யார் செய்திருந்தாலும் விசாரணை நடைபெற்று சூத்திரதாரி நீதியின் முன் நிறுத்தப்படவேண்டும் எனத் தெரிவித்தார் சுனந்த தேசப்பிரிய.

(எ-க)


## மரண அறிவித்தல்கள்

### இராசரத்தினப் பத்தர் நேசம்மா

பொற்தொழிலாளர் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசரத்தினம் நேசம்மா அவர்கள் நேற்று (12.08.2005) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரத்தினப் பத்தரின் அன்பு மனைவியும், ஜெயபாலன், தருமரத்தினம் (நேசம் அழகு நகை - சங்கானை), நிர்மலாதேவி காலஞ்சென்ற சுகந்தன் ஆகியோரின் தாயாரும், ஸ்கைலா, நிரஞ்சினி, வரதன் (நேசம் அழகு நகை - சாவகச்சேரி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (12.08.2005) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நேசம் அழகு நகை*
*சங்கானை,*
*சாவகச்சேரி.* (38836)(38-11-13)

*தகவல்:*
*குடும்பத்தினர்.*

### சந்திரசேகரம் தில்லைநடேசன்

*(பிரபல சோதிடர், தர்மகர்த்தா)*

விடத்தற்பளையைச் சேர்ந்த சந்திரசேகரம் தில்லைநடேசன் நேற்றுக் காலமானார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் இன்று (13.08.2005) சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு விடத்தற்பளை சம்பாவெளி மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
கமலேஸ்வரன் (மகன்).

**விடத்தற்பளை,**
**மிருசுவில்.** (சி-44082)



**O/L PAPER CLASS**
கணிதம் - விஞ்ஞானம் - ஆங்கிலம்
திங்.-புதன்- சனி - ஞாயிறு
கற்சுமி - 166, நாவலர் வீதி.

கணக்கீடு
திரு.
பாலவாசன்
புதிய பிரிவு
A/L 2007
Sat., Sun → 12.00 - 1.00
ஆரம்பம்: 14.08.05
12.00 Noon
விக்னா கல்வி நிறுவனம் (38758)

இறுதிப் பரீட்சை
இன்று (13.08.2005) சனி காலை 9 மணிக்கு தரம் 5 இறுதி முன்னோடிப் பரீட்சை செவ்வாய் 3மணிக்குவினாப் பத்திர ஆய்வும் - கருத்தரங்கும் ஆசிரியர் திரு.கணேசலிங்கம் (Bed)
நல்லூர் சயன்ஸ் அக்கடமி
கட்டணம்: ரூபா 50மட்டும் (வினாப்பத்திரத்தை இன்று 12 மணிக்கு நூலகசிங்கம் புத்தகசாலையில் பெறலாம்)
விபரங்களுக்கு: 0775126807 (38823)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.08.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.